80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

பாடசாலை ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் மிகவும் ஏற்றதாய்,
அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும்,
ஆநந்தகரமான அநுபவ வினோத ஞானகலா விலாஸங்களும்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

“எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
புதுச் சுவை.] திண்ணிய ராகப் பெறின்.” (திருக்குறள்.) [மிகு அநுபவம்.

கமலம்-9.	சென்னை: பவ ௵ மாசி ௴ 1௳	இதழ்-107.
Vol. 9.	1935 ம் ௵ பிப்ரவரி ௴ 14௳	No. 107.

ஆநந்த  தர்சனம்

“சோதிதன் னிழலாக்கொண்ட சோதி” துவக்கமும் முடிவு மில்லாதவரும், தன்னை யுண்டாக்கியதற்கு ஒரு காரணமில்லாதவரும், குற்றமில்லாதவரும், ஒரு நிமிஷத்தில் கோடா கோடி உலகங்களைச் செய்தழிக்க வல்லவரும், உவமானமாகச் சொல்ல ஓர் ஒப்பில்லாதவரும், உருவமில்லாதவரும், பெரிய ஆகாயத்திலுள்ள சூரியனைத் தன்னுடைய நிழலாகக் கொண்டுள்ளவருமாகிய கடவுளை, நெஞ்சமே, நீ துதிக்கக்கடவாயாக.

ஃ

“ஆணலன், பெண்ணு மல்லன்” என் ஏழை நெஞ்சமே! இறைவன் எத்தன்மையுடையவரென்றால், ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அஃறிணையுமல்ல, பூமியுமல்ல, ஆகாயமுமல்ல, தண்ணீருமல்ல, காற்றுமல்ல, நெருப்புமல்ல, பஞ்சேந்திரியங்களால் காண்டற்கரிய வடிவமுள்ளவன்; எப்பொழுதுமுள்ளவன், எல்லாவற்றுக்குங் கர்த்தன், நமக்குத் தாயும் தந்தையும் அவரே, மகா பரிசுத்தர், மாட்சிமை பொருந்திய தர்மமே திருவுருவாகக்கொண்ட பெருமை யுள்ளவராவர்.

ஃ

“தரையெலா முளன், துரும்புதன்னினுமுளன்” உலகெங்குமுள்ளவன், ஒரு துரும்பிலுமுள்ளவன், எல்லா அண்ட அகண்ட வரிசைகளிலுமுள்ள

வன், பேசும் வார்த்தைகளிலெல்லா முள்ளவன், தான் இருக்கும் பொருள் கெட்டுப்போனாலும் தான் கெடாதவன், குற்றமற்ற தனக்குத்தானே சமான மானவன் ஆகப் பகவான் விளங்குகின்றார்.

ஃ

"இடுக்கண் ஒன்றின்றிக் காக்குமெம்பிரான்" நட்சத்திரக் கூட்டங்கள் யாவும் தனித்தனி சூரியனும். அந்த ஒவ்வொரு சூரியனுக்கும் நடுவில், எண்ணிக்கையில்லாத கோடானுகோடி பூமிகளையும், சந்திரன்களையும், ஆகாயங்களையும், வரிசை வரிசையாய்ச் செய்து, யாவும் அந்தரத்திலமைந்து நிற்க, யாதொரு இடையூறுமின்றிக் காப்பாற்றும் நம்முடைய கடவுளின் மகிமை மிகமிகப் பெரியதன்றோ ?

ஃ

"பண்ணிய புவனமெல்லாம் படர்கையிற் பரிக்குமேகன்" உண்டாக்கிய எல்லா உலகங்களையும் விசாலமாகிய கையில் தாங்கிக்கொண்டிருக்கும் கடவுளினது கை கொஞ்சம் ஓய்ந்தால், அக்கையிலுள்ள உலக உண்டைகள் ஒன்றுடனொன்று மோதி, உறுதியான அந்தக் கோடாக்கோடி உலகங்களும் உடைந்து விழுந்துபோமென்பதை அறிந்திருந்தும், திவ்வியமான மன்றாட்டுகளினால் அக்கடவுளை, நெஞ்சமே நீ போற்றாத தன்மை என்னவோ?

ஃ

"அகண்டாகாரப் பராபரன்" மனமானது தனக்குள்ள வேகத்தோடு எண்ணிக்கையில்லாத கோடாகோடிகாலம் வலிமையுடன் மேலே போனாலும், கடவுளினது தேகத்தின் மத்திய பாகத்தையன்றி மற்ற பாகத்தைக் காண முடியாதென்னில், எங்குமுள்ள கடவுளுக்கு சிரசாகிய முடி எவ்விடத்துள்ளது, பொன்னுக்குச் சமானமாகிய கமலமலர்ப் பாதங்களின் அடி எவ்விடத்துள்ளது? உலகீர் உரையீர்.

ஃ

"விலகரும் அருளின் மீக்கூர் விமலன்" நீங்காத கிருபை மிகுந்த கடவுளை நாம் துதிக்கவேண்டுமானால், எண்ணிக்கையில்லாத கற்பகோடி காலங்கள் நமக்கு ஆயுளாகவும், பூலோகம், பரலோகம், பாதளலோகம் என்ற மூன்றுலகமும் ஒரு தேகமாகவும், அந்தத் தேகமெல்லாம் நிறைந்த வாயாகவுமிருந்து, அந்தப் பல வாய்களினாலும் நாடோறும் எண்ணிக்கையில்லாத பல பாமாலைகளைப் பாடி ஸ்தோத்திரஞ் செய்தாலும், அக்கடவுளுடைய புகழ் முடியுமோ? முடியாதென்க.

ஃ

"சருவ நன்மையுமே தந்து, தன்னையுந் தந்த நாதன்" உருவமில்லாமலும், கொஞ்சமும் அறிவிலாமலும் இருந்த நம்மை, அழகிய தோற்றத்தோடு பகுத்தறிவுள்ள சீவபிராணியாக உண்டுபண்ணி, சகலவிதமான நன்மைகளையும் கொடுத்து, நாம் ஈடேறும்பொருட்டுத் தன்னையும் கொடுத்த கடவுளு

வாய்ப்பட்டியான தாயிடம் பிறக்கும் குழந்தை வாய்ப்பட்டியா யிருப்பதும், துஷ்டத் தாயின் பிள்ளைகள் அவள் துஷ்ட நடையைப் பின்பற்றுவதும் உலக இயற்கை.

டைய வாசனை பொருந்திய புஷ்பத்துக்குச் சமானமாகிய திவ்ய பாதங்களுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது, நெஞ்சமே, உனக்குப் பெரிய காரியமாமோ?

ஃ

"யாவு நல்தஞ் சாமி" பூமியை நமக்கு வீடாகவும், மற்றப் பூதியங்களை நமக்கு வேலைக்காரராகவும், சந்திர சூரிய நட்சத்திரங்களை விளக்காகவும், நம்மைச் சூழ்ந்திருக்கிற மரம் பயிர் முதலானவைகளை நமக்கு உணவைத் தருகிற பொக்கிஷமாகவும் உண்டாக்கி, நமக்கு இத்தியாதி திரவியங்களைக் கொடுத்த கடவுளை உவமானஞ் சொல்லித் துதிக்க, திருஷ்டாந்தம் யாது நெஞ்சமே! நீ புகல்வாயாக.

ஃ

"தேன்றரு மலர்த்தாள் தெப்பம்" விசாலமாகத் தோன்றிய இவ்வுலகமாகிய துன்ப சமுத்திரத்தில், கடவுளுடைய தேன் சொரியு மலருக்குச் சமானமாகிய பாதங்களான தெப்பத்தைச் சேராமல் விலகி நிற்கிறவர்கள் எத்தன்மையுடையரென்றால், ஆகாயத்தை விட்டு நீங்கிய பறவைக்கும், சஞ்சரிக்கும் ஜலத்தைவிட்டு நீங்கிய மீனுக்கும், காட்டைவிட்டு நீங்கிய மிருகத்துக்கும், காவலிலிருந்து நீங்கிய நகருக்கும் ஒப்பாவார்கள்.

ஃ

"எண்ணிறந்த வானி னிறுவுவோன்" சுவல்ப நேரம் ஒரு கல்லை ஆகாசத்தில் நிறுத்துகிறவனைக் கடவுளென்று சொல்லுவோம்; அப்படியாகில் இந்தப் பூமிக்கு மேலும், அதற்குக் கீழும், எப்பக்கத்திலும், நெருங்கிய எண்ணிக்கை யில்லாத அநேக உலகங்களை ஆகாயத்தில் நிறுத்தியிருக்கும் கடவுளை இப்பொழுதே நெஞ்சமே நீ நினையாததென்ன?

ஃ

"பண்டமேன்பன அனைத்தும் பண்ணியோன்" அண்டாண்டங்களையெல்லாம் அளவிட்டு அறியும்படியான கண்களையும், வாசனைகளை அறியும்படியான மூக்கையும், சப்தத்தை யறியும்படியான செவிகளையும், சுவையை யறியும்படியான நாவையும், பரிசத்தை யறியும்படியான தேகத்தையும், மேற்கூறிய ஐம்பொறிகளுக்குத் தகுதியான சகல பொருட்களையும் உண்டாக்கினவர் ஸர்வ வல்லமையுடைய கடவுளன்றி வேறு யார்?

ஃ

"என்னுறுப்புகளுஞ் செய்தோன்" நிலைபெற்ற உயிருக்குத் தகுதியான ஐம்பூதங்களையும், அந்த பூதங்களுக்குத் தகுயான அழகிய தேகத்தையும், அத்

கழுத்தில் மாங்கல்யம் விழுந்த அப்பொழுதிலேயே கையில் பாலகன் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் மேலோகத்திலும் பூலோகத்திலும் இல்லையென மகிழத்தக்க பாக்கியவதிகளான பதிவிரதா சிரோமணிகளுண்டென்கிலும், தன் புருஷனோடு தனிமையாயிருந்து கழிக்கும் சந்தோஷ ஜீவியத்திற்குப் பிள்ளைகள் இடையூறு யிருக்கின்றனவென்று நினைக்கும் சிற்றின்பப் பிரியரான பெண்களுமுண்டு.

தேகம் குனியவும், நிமிரவும், செல்லவும், நெருங்கவும், தங்கவும், ஓடவும், தேடவும், இன்னும் பற்பல வேலைகளைச் செய்யவும், தக்க அழகிய அவயவங்களையும் செய்தவர் தேவனோ? யாவனேயோ?

ஃ

“எங்கும் நின்றவர், தாழந்தநந்த நிராமயன்” எக்காலத்தும் பழமைப்படாமல் புதியதாகவே பிரகாசிக்கும் உலகத்தையும், சகல பொருள்களிலும் மறைந்திருக்கிற நெருப்பையும், எவ்விடத்துத் தோண்டினாலும் ஊறுகிற ஜலத்தையும், ஒன்றை அசைத்தால் அதனாலுண்டாகிற காற்றையும், எங்குங் கலந்து உலாவி நிற்கும் ஆகாயத்தையும் கொடுத்த கடவுளுக்கு நாம் செய்யும் பிரதியுபகாரம் யாது?

ஃ

“மாறுகாலப் பதுப்பும் வதுப்பவன் சகப்பிரான்” வெவ்வேறு விதமான சீவபேதங்களையும், பல நிறங்களையும், வாசனையுமுடைய பூ, இலை, காய் முதலியவைகள் நிறைந்த குளிர்ச்சி பொருந்திய விருக்ஷவகைகளையும், மலைகளையும், ஜலமூறும் ஊற்றுகளையும், ஜீவாத்துமாக்கள் பிழைக்கும் பொருட்டு மழைகால முதலாகிய மாறிமாறி வரும் கால வகுப்புகளையும் உண்டாக்கியவர் கடவுளே யன்றோ?

ஃ

“நாற்றிசைமிசைப் பல்லாண்டு நடத்துவோன்” காற்றைப் பல துவாரமுள்ள பாண்டத்தில் அடைத்து வைப்பதுபோல, விசேஷித்த ஒன்பது துவாரமும், எண்ணிக்கையில்லாத ரோமத்துவாரங்களுமுள்ள தேகமாகிய பாண்டத்துக்குள் நிறைந்த உயிராகிய காற்றை யடைத்து, உலக நாற்றிசையினும் பல வருடங்களாக நடாத்தி வருபவராகிய கடவுளின் வல்லமைப் பிரதாபம் விளம்பவும் கூடுமோ? பாண்டத்தில் ஒரு துவார முண்டாகிவிடின் அங்கே காற்றுநில்லாது; எண்ணிகையில்லாத் துவாரமுள்ளதேகத்தில காற்றாகிய உயிரை அடைத்து அநேக வருடகாலம் ஜீவித்திருக்கக் காப்பாற்றி நடத்தி வருவது ஆச்சரியமே யன்றோ?

ஃ

“ஆன்மா வாழ வீடு இசைத்தோன்” மாமிசமாகிய மண்ணில் இரத்தமாகிய நீரை விட்டுக் குழைத்துச் சுவரெழுப்பி, அதில் வெள்ளெலும்பாகிய கழிகளைப் பரப்பி, அவைகளை நரம்பென்னுங் கயிற்றாற்கட்டி, தோலாகிய கூரையால் மூடி, நமது தேகமாகிய வீட்டைச் சமைப்பித்து, அவ்வீட்டில் ஆன்மாகிய அரசன் குடிகொண்டு வாழ்ந்து நிலைபெற்றிருக்கும்படி செய்தவர் யார்? கடவுளே.

ஃ

“சிறு வித்தாற் பார மரமெலாம் புரிவித்தோன்” ஒரு மணலைக் கொண்டு ஒரு மலையை உண்டுபண்ணுவோனைப் பார்ப்போமாகில் அதிக ஆச்

எவ்வளவோ பேர் தனக்கு உதவுவார்களென்று ஒவ்வொருவரையும் நம்பிவிட்டு ஏமாறிப்போய், கடைசியில் தன் கையும் தன்னிடமிருக்கும் பணமுமே தனக்கு உதவியானதைக் கண்டுகொள்கிறான்.

சரிய முண்டாகும். ஒரு அணு முதலாயில்லாமல் இவ்வுலக முதலியவற்றை உண்டாக்கினவனும், பெரிய தேகங்களை உபயோகமற்ற இரத்தமாகிய இந்திரியத் துளியினு லுண்டாக்கினவனும், சிறிய விதையினுல் பெரிய மரங்களை யெல்லாம் தோற்றுவிக்கச் செய்தவனும் ஆகிய கடவுளைப் பணிவது நமது கடமையாம்.

ஃ

"புவனங்கள் காந்தியுறச் செய்தோன்" சூரியன் பூமியைவிட அநேக கோடி பங்கு பெரிது. அந்தச் சூரியன் பூமிக்குச் சமீபமாயிருக்கில், பூமியிலுள்ள யாவும் எரிந்துபோகும். அதிக தூரத்திலிருந்தால் பூமி தகுந்த பிரகாசத்தை அடையாது. இவைகளை யெல்லாம் நினைத்துத் தகுந்த இடத்தில் அந்தச் சூரியனை நிறுத்தி, அதைச் சுற்றிலுமிருக்கிற உலகங்கள் பிரகாசத்தை யடையும்படி செய்த கடவுள் ஒப்பில்லாதவராவார்.

ஃ

"பதிவுறு மினைய திங்கள் பண்ணினேன்" சந்திரன் பூமியைப்போல ஒரு உருண்டை வடிவமுள்ளது. அது பிரகாசத்தைச் சூரியனிடத்திற் பெற்றுக்கொள்ளும். அந்தச் சந்திரன் பூமியைச் சுற்றும்பொழுது சூரியனுக்கு எதிராயிராமல் மறைவு படுவதினுல் பிரகாசம் குன்றி இருளடையும்; மறுபடியும் பிரகாசத்தைப் பெறும். சொற்ப பிரகாசமுடைய சந்திரன் பூமியில் தன் நிலவை வீசும்பொழுது அதற்கு மதிப்புண்டாகுமாறு, அச்சமயம் சூரியனை மறைத்துவைக்கும் கடவுளின் மாயா விநோதமென்னே! அந்தச் சந்திரனை உண்டாக்கி அவனுக்குக் கௌரவம் தந்தவர் விண்ணவர்க்கரசனுகிய கடவுளாவார்

ஃ

"கால பேதங்கள் சமைத்த காநுணிகன்" பூமியின் இருபக்கத்திலும் சூரியன் படும்படி அந்தப் பூமியானது தினந்தினம் புரண்டு சூரியனுக்கு நேராய் வந்து, மறுபடியும் தன்னிலேயே உருண்டு உருண்டு ஆகாயத்திற்குப் போய் ஒரு வருடத்தில் சூரியனைச் சுற்றி வருவதால், கால பருவபேதங்கள் தோன்றுகின்றன இத்தன்மையாய் பூமியை உண்டாக்கிய கடவுளினது பாதாரவிந்தத்தைத் தலையிற் சூடாதவர்கள் ஒன்றிலும் நிலைபெறுது கெடுவராதலின், நாம் அந்தப் பரம்பொருளை ஸதா தியானிப்போமாக.

ஃ

"ஈசன் பாதமீ தன்புகொள் மனமே" ஸ்திரீகளிடத்தில் ஆசையுள்ளவன் எப்பொழுதும் அவர்களையே நினைத்திருப்பன்; பொன்மீது ஆசையுள்ளோன் அப்பொன்னைத் தினந்தோறும் தேடிக்கொண்டிருப்பன்; அப்படியாகில், நாம் ஸ்வாமியினுடைய பாதாரவிந்தத்தில் ஆசையுள்ளவர்களாயிருப்போமாகுல், பகலிலும் இரவிலும் ஒயாது கடவுளை நினையாமல், வீணுக நம்முடைய வாணுளைக் கழித்திடல் நெஞ்சமே என்ன காரணமோ?

ஃ

"ஈசன்மாட்டுப் படிற்றுமன்பே யன்பாம்" தடியினுல் அடிப்பவர்களுக்குப் பயந்து ஒன்றைக் கொடுப்பவன் புண்ணியஞ் செய்பவனுவனே?

புருஷன் கொடியவனென்ற பயத்தினுல் தன் கற்பைக் காப்பவள் கற்புடைய ளாவளோ? ஆதலால், கடவுளிடத்தில் நாம் வைக்கும் வஞ்சகமில்லாத அன்பே அன்பாகும். பயத்தினுலும், நயத்தினுலும், ஒன்றை விரும்பியும் என்றும் முடிவில்லாத கடவுளிடத்தில் நாம் செய்யும் பக்தியானது நம்மை மோக்ஷத்திற் சேர்க்காது. உண்மையான களங்கமற்ற பக்தியுடனே போற்று பவரே பரம சாம்பிராஜ்யத்தைப் பெறுவர்.

ஃ

"இறைவனைப் போற்றதொழியும் வாழ்நாள் பாழ்நாளே" எவ்வித துன்பங்கள் வந்தாலும், அந்த நேரத்தில் கடவுள் இருக்கிருரென்று நம்பினுல், அத்துன்பங்கள் வருத்தத்தை உண்டாக்குமோ? அக்கடவுளை நினைத்து ஸ்தோத்தரித்து, நல்ல வழியில் நடக்கும் நாள் மட்டும் உயிர்பிழைக்கின்ற நாளாகும். ஒப்பில்லாத கடவுளைப் போற்ருமலிருக்கும் நம்முடைய வாழ்நாள் பாழ்நாளாகுமன்றிப் பயனுள்ளதாமோ?

ஃ

"மாதாவா யப்பனு யாருயிராய்ச் சுற்றமாய், வாழ்வாய்த் துணையாய் நம்பாலுறையுங் கோற்றவன்" கையிற் கிடைத்த உயிர்தரு மருந்தாகிய ஸஞ்சீவியைப் புசிக்காமல் விட்டுவிடும் புத்தியில்லாதவர்கள்போல, நமக்குத் தாயாகவும், தகப்பனுகவும், உயிருக்குயிராகவும், உறவினராகவும், வாழ்வாகவும், துணையாகவும், நம்மிடத்தில் வீற்றிருக்கும் கடவுளைத் துதிசெய்து, நமக்குள்ள குறைகளை யெல்லாம் அவருக்கு அறிவித்து, நமக்குவேண்டிய பல வரங்களையும் பூரணமாகக் கொடாவிடில் விடமாட்டேனென்று பல முறை அவருடைய பாதத்தில் விழுந்து, ஒவ்வொரு நிமிஷமும் அவரை வாழ்த்தாவிடில், நெஞ்சமே! இனி நமக்கு உதவி செய்பவர்கள் வேறே யார்? அதைச் சொல்வாய். வீணே கிடந்துழலாமல் இறைவனின் பாதமலர்களைப் போற்றக்கடவோம்.

ஃ

"மனத்தின் கண்ணெளிர் தீபம்" கரும்பு தின்னக்கூலி கேட்டலுமுண்டோ? தரித்திரர்களுக்கு அருமையான பொருளுக்குச் சமானமானவனும், துன்பமடைந்தவர்களுக்கு இன்பக் கடலுக்குச் சமானமானவனும், கொடிய வியாதியஸ்தர்களுக்கு ஒப்பற்ற தேவாமிர்தத்துக்குச் சமானமானனும், ஒவ்வொருவர் மனதிலும் பிரகாசிக்கும் தீபத்துக்குச் சமானமானவனும், தன்னை விரும்புகிறவர்களுடைய மனதுக்கு இதமானவனுமாகிய பகவானை, பரம நிதியைத் தியானிப்பதற்குக் கூலிவேண்டுமோ? அந்தத் தியான பரவசமே சொல்லொணுப் பேரானந்தமன்ருே? தன்னையும் உலகையுமே மறந்து பக்தியின்ப வெள்ளத்தில் மூழ்குவார்தம் இன்பப் பெருக்குக்கு எல்லை யேது? ஆகவே, அவனருளாலே அவன் தாள் வணங்கி உய்யக்கடவோம்.

விவாகமில்லாத சேர்க்கையானது ஆசையுள்ளவரைக்கும் ஒருவரையொருவர் தழுவிப் பிடித்துக்கொண்டிருக்குமேயொழிய, சந்தோஷத்திலும் துக்கத்திலும், வறுமையிலும்—செல்வத்திலும், சாவிலும்—வாழ்விலும், நோயிலும்—சுகத்திலும், பிரதிக்கினையிலும்—பிரிவினையிலும் மற்றெல்லா விதத்திலும் உறுதியான ஒரு கட்டுப்பாடாயிராது.

அமிர்தகுணபோதினி

பவ௵ மாசி௴ 1௨

தயாளகுண தீரரான திலீப வேந்தன்.

அருளுருத் தாங்கி ஆதரித்துக் காத்திடும்
நீதிச்செங்கோல் சக்ரவர்த்தி. ரகுவம்சத்து ஆதித் தந்தை.

ஆண்மையுடன் அருள் கூடினால் அமிர்தமாம். அருள் என்பது தயை; அதாவது, துன்புற்றோரிடத்து உண்டாகும் இரக்கமாம். இந்தக் குணமானது மனிதர்களுக்குள்ள மற்றக் குணங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது. தன்னவன், புறத்தவன் என்னும் வேற்றுமையின்றி எங்கும் ஒரே தன்மையாய் இரங்குவதைப் பூததயை என்று சொல்லுவார்கள். பிரபுக்களுக்கும், பெருமை பெற்றவர்களுக்கும் இக்குணம் பெரும்பாலும் இராதென்றும், அப்படி ஒருகால் உண்டாகுமாயின், அது பொன்மலருக்குப் பரிமளம் கூடினாற்போல் ஆச்சரியப்படத் தகுந்ததென்றும் முன்னோர்கள் மொழிந்துள்ளார். முற்காலத்தில் அரசுபுரிந்த மன்னர்களிற் பெரும்பாலோர் இவ்வுயர் குணமுடையரா யிருந்தனர். ஆயினும், அயலாருக்குத் துன்பம் நேர்ந்தபோது தன்னுயிரைக் கொடுத்து மன்னுயிரைக் காக்கும் தீரமும் பேரருளுமுடையரா யிருந்தவர் சிலரே. ஆதலினால், மற்ற அரசர்களைவிட அத்தன்மையானவர்கள் மிகக் கீர்த்தி பெற்று வாழ்ந்தார்கள். முக்கியமாய் மற்றவர்களினும் அரசர்களுக்கு இக்குணம் இன்றியமையாதது. தம் பிராணனைக் கொடுத்தாயினும் அயலார் துன்பத்தை நீக்கவேண்டுமென்னும் தீரமுடைய தயாளுக்களை நாம் நினைப்பதினாலேயே நமது பாபங்கள் நாசமாகுமென்று பெரியோர் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தீரர்களில் திலீபன் என்ற மன்னன் மிக்க மேன்மைபெற்ற புகழுடையோன் ஆவன்.

❖

எல்லா உலகங்களிலும் உயர்வு பெற்றோங்கிய சூரிய வமிசத்து ராஜாக்களில் திலீபன் என்னும் ஒரு அரசன் உதித்தான். அவன் மகத தேசத்தரசன் மகளாகிய சுதக்ஷிணை என்பவளை மணம் புரிந்து

அந்தத் தரும பத்தினியுடன் மனுநீதி முறை வழுவாது அயோத்திமா நகரில் அரசுபுரிந்து வந்தான். "அரசன் எவ்வழி அவ்வழி குடிகளும்" என்கிற பழமொழிப்படி அவ்வரசன் அரசு செலுத்தும்போது அவ்விராச்சியத்துக் குடிகளும் "ஒழுக்க முயர்குலத்தி னன்று" என்பதை யுணர்ந்து, தங்கள் தங்கள் ஒழுக்கத்தினின்று வழுவாமல் நடந்துகொண்டார்கள். அரசநீதி நூல்களில் கூறியபடி ஆறில் ஒன்றுக்கு அதிகமாய் அவ்வரசன் திறை கொள்வதில்லை. உயர்குலத்திற் பிறந்தவனுக்கு கியானமும், கியானமுடையவனுக்கு விநயமும், திறமையுடையவனுக்குப் பொறுமையும், உதாரகுண முடையவனுக்குத் தற்புகழ்ச்சியின்மையும், பெருமை பெற்றவனுக்கு ஸௌலப்பியமும் ஆகிய இவை யாவும் மிகவும் அருமையான குணங்களெனப் பெரியோர்கள் வியந்து கூறியிருக்கின்றனர். இக் குணங்கள் எல்லாம் அவ்வரசனிடத்தில் குடிகொண்டிருந்தன. நூற்றில் ஒருவன சூரனகவும், ஆயிரத்திலொருவன் பண்டிதனகவும், லக்ஷத்தில் ஒருவன் வாசாலகனகவும் இருப்பான். இம்மொத்தத்தி லும் தாதா (கொடுக்கும் குணமுள்ளவன்) இருப்பானே இரானே! இந்திரியங்களை ஜயித்தவனைச் சூரன் என்றும், "ஆறுவது சினம்" என்கிறபடி கோபத்தை அடக்க வல்லவனைப் பண்டிதன் என்றும், பிரியமும் ஹிதகரமுமானதைச் சொல்பவனை வாசாலகனென்றும், பூததயை யுடையவனைத் தாதாவென்றும் முன்னோர்கள் கூறியுள்ள குணங்களெல்லாம் அமைந்தவனகிக் குடிகளைக் காத்துவந்தான்.

ஃ

ஒருநாள் திலீபராஜன் தேவலோகத்துக்குச் சென்று திரும்பி வருகையில், கற்பக விருக்ஷத்தின் நிழலில் படுத்திருந்த காமதேனுவைத் தனது ரதம் செல்லும் அவசரத்தில் பார்க்க முடியாதவனகிச் செல்ல, அதைக் கண்ட காமதேனு தன்னை வணங்காது சென்றதற்குக் கோபித்துப் புத்திர பாக்கிய மற்றவனகக்கடவதென்று சபித்தது. பிறகு அவ்வரசன் தர்மிஷ்டன் என்பதை நினைத்துக் காமதேனு கருணைகூர்ந்து, இனி என்னையாவது, என் கன்றையாவது நியமத்துடன் பூசித்தால் பிறகு புத்திரனுண்டாகக்கடவதென்று அனுக்கிரகம் செய்தது. காமதேனு கூறிய எதுவும் அரசனுக்கேனும், சாரதிக்கேனும் அப்போது உண்டாகிய ஓசை இரைச்சல்களால் கேளாமல் போய்விட்டது. அதனல் அரசன் அதற்கு ஏற்ற பரிகாரம் செய்துகொள்ளக் கூடாமற் போனதுபற்றி அவனுக்கு வெகுநாள் ஸந்தானம் உண்டாகவேயில்லை. இவ்விஷயத்தைக்குறித்துத் தமது குருவான வசிஷ்டமா முனிவரிடத்துக்குச் சென்று விசாரித்தறிவதென்று தன் மனைவியுடன் குருவின் ஆசிரமத்திற்குப் புறப்பட்டான்.

ஃ

போகும்போது மங்களமான சகுனங்கள் ஆயின. எதிர் காற்றடியாமல் பின்காற்று மிருதுவாக வீசியது. தாமரைத் தடாகங்களில் மலர்ந்திருக்கும் மலர்களினது வாஸனை குமுகுமுவென்று வீசியது. இவர்கள் இருவருமாய் ஏறிச் செல்லும் ரதத்தின் ஓசையைக் கேட்ட மயில்கள் மேகத்தின் முழக்கமென்று நினைத்து கே, கா என்று கூவிக்கொண்டு தோகைகளை விரித்துக் கும்பலாய் ஆடிக்கொண்டு திரிந்தன. மான்கள் வழியை விட்டுச் சிறிது விலகி வரிசை வரிசையாய் வெருள வெருளக் கண்களை விழித்துக் கொண்டு தேரையே பார்த்தவாறு நின்றன. கம்பங்கள் இல்லாமலே தோரணம் கட்டியதுபோல் ஆகாயத்தில் ஸாரஸ பக்ஷிகள் வரிசை வரிசையாய்ப் பறந்துகொண் டிருந்தன. இவ்வரசன் தானமாகக் கொடுத்திருக்கும் கிராமங்களிலுள்ள பிராமணர்கள் பூரண கும்பத்துடன் எதிர்கொண்டு வந்து உபசரித்தார்கள். இடையர்கள் அன்று கடைந்தெடுத்த வெண்ணெயுருக்கிய நெய்யைக் கொண்டுவந்து அரசனுக்கு உபகாரமாகக் கொடுத்தார்கள். இவ்வாறாகச் செல்லும்போது வழியிலுள்ள காட்டு மரங்களின் பெயர்களை அரசன் தன் பத்தினிக்குச் சொல்லிக்கொண்டும், மற்றும் வனங்களிலுள்ள விசேஷங்களைக் காட்டிக் கொண்டும் வர, ஆகாயத்தில் பலவகைப் பறவைகள் பறப்பது முதலிய விசித்திரங்களை அங்கங்கே தலை நிமிர்ந்து இருவருமாய்ப் பார்த்துக் களித்துக்கொண்டு வெகு வேகமாய் அன்று ஸாயங்காலமே வசிஷ்டமாமுனிவர் ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு குருவைக் கண்டு நமஸ்கரித்துத் தங்களுக்கு மகப்பேறு இல்லாத குறைவைப்பற்றிப் புலப்பித் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஃ

வசிஷ்டமாமுனிவர் அரசனுக்கு சந்ததி யுண்டாகாததற்குக் காரணம் காமதேனுவின் சாபமென ஞான திருஷ்டியில் தெரிந்து, அந்த சாப வரலாற்றை அரசனுக்குத் தெரிவித்து, இந்த சமயம் காமதேனு ஒரு யாகத்துக்குச் சென்றிருப்பதால், அதற்குப் பதிலாக அதன் கன்றாகிய நந்தினி என்னும் பசு இவ்விடத்தி லிருப்பதால் இதனைப் பூஜை செய்தாலும் காமதேனுவைப் பூஜித்தது போலவே தான்; அவ்விதம் பூஜை செய்தால் சாபம் தீர்ந்து ஸந்ததி யுண்டாகுமென்று கூறினர். அதேசமயம் நந்தினி என்ற பசுவும் வெளியிலிருந்து அங்கு வரவே, அது கண்டு வசிஷ்டர் இது உத்தமமான சகுனம்; நாளையதினம் முதலே பூஜைக்குத் துவக்கவேண்டும்; காலையிலெழுந்து சுதக்ஷிணை நந்தினியைச் சந்தனம் மஞ்சள் மாலை முதலியவைகளால் அலங்கரிக்க வேண்டும்; கன்று பால் குடித்தான பின்பு நீ அதை அவிழ்த்து ஓட்டிப் பின் தொடர்ந்து செல்லவேண்டும்; உன் பத்தினி மாத்திரம் தபோவனம் வரையில் பின்றொடர்ந்து

சென்று, பின் திரும்பிவந்து மறுபடியும் மாலையில் நந்தினி வருகையில் எதிர்கொண்டு சென்று பூஜைசெய்து, ஆச்சிரமம் வரையில் பின்றொடர்ந்து வந்து மங்கள தீபம் வைத்துக் கூடவே இருக்க வேண்டும்; பசு படுத்துத் தூங்கினவுடன் அதன் அருகிலேயே நீங்களும் படுத்து, அது எழுந்தவுடனே நீங்களும் எழுந்திருக்க வேண்டும். நீ மாத்திரம் பகல் முழுவதும் நந்தினியுடன் கூடவே சென்றுகொண்டிருப்பதுடன், அது நிற்கும்போது நிற்பதும், போகும்போது போவதும், படுக்கும்போது படுப்பதும், தண்ணீர் குடிக்கும் போது தண்ணீர் குடிப்பதுமாய் அதன் நிழல் போலே நடந்து கொள்ள வேண்டும். கனி காய் கிழங்குகளையே நீங்கள் புசித்துக் கொண்டு இப்படியே இப் பசுவின் அனுக்கிரகம் பெறுமளவும் பிரதிதினமும் நடந்து வரவேண்டும். இவ்வாறு செய்தால் துரிதமே உன் மனோரதம் ஈடேறும் என்று சொல்லி அனுக்கிரகித்தார். பின்பு அவ்விருவரும் குருபத்தினியாகிய அருந்ததி தேவியை வந்தனம் செய்து ஆசிபெறறுத் தங்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த விடுதியிற் சென்று படுத்திருந்தார்கள்.

ஃ

மறுநாள் விடியற் காலையில் சுதக்ஷிணை நந்தினியை அலங்கரித்துப் பூஜித்து அவிழ்த்தோட்டித் தபோவனம் வரையில் வழி விட்டுத் திருப்பிவிட, அரசன் அதனுடன் கூடவே வனத்திற்குச் சென்றான். பகலெல்லாம் நந்தினியுடன் திரிந்து, அந்திப் பொழுதில் அது ஆச்சிரமத்துக்குத் திரும்பும்போது தானும் கூடவே பின் பற்றித் திரும்பி வந்தான். சுதக்ஷிணாதேவி எதிர்கொண்டு சென்று நடுவழியில் நந்தினியைப் பூஜை செய்தாள். பின்பு குருவின் நியமனப்படி அன்றிரவு நந்தினியுடன் கூடவே படுத்திருந்தார்கள். இவ்வாறாக இருபத்தொருநாள் முறை தவறாமல் பூஜைசெய்து வந்தார்கள்.

ஃ

அரசன் பிரதிதினமும் நந்தினியைப் பின்றொடர்ந்து செல்லும்போது கையில் அம்பும் வில்லும் எடுத்துக்கொண்டு தன் பரிவாரங்களை யெல்லாம் நிறுத்திவிட்டுத் தனியே பசுவுடன் சென்றுகொண்டிருப்பான். இவன் வில்லும் கையுமாக இருந்தாலும், இவன் முகத்தைப் பார்க்கும்போதே பூததயை யுடையவனென்று விலங்குகளுக்குக்கூடத் தெரியவந்ததினால், மான்கள் பயந்தோடாமல் ஆங்காங்கு நின்று இவனை அச்சமின்றிப் பார்த்துக் கொண்டிருந்தன. இவ்வரசன் காட்டிற்குப் போகத் தொடங்கிய பின்பு காட்டுத்தீ ஒரு நாளும் பற்றி யெரியவில்லை. எளிய ஜந்துக்களைப் பலமுள்ளவைகளான ஜந்துக்கள் பிடித்து வருத்தவில்லை. பூக்கள் மலர்ந்து பழங்கள் பழுத்துக் குளிர்காற்று வீச, அந்த

வனமானது உபவனம் போலக் கண்களுக்கு இனியதோர் காட்சியாக விளங்கியது.

ஃ

காமதேனுவின் மகளாகிய நந்தினி தன்னை இருபத்தொரு நாளாக ஆராதித்து வந்த அரசனது பூதயைதயைப் பரீக்ஷித்தறிய வேண்டுமென்று நினைத்து, அன்று இமயமலைச் சாரலிலே கங்கை நீர் பெருகும் வழியில் பசும்புல் லடர்ந்திருந்த குகை ஒன்றில் நுழைந்தது. நந்தினிக்கு யாதும் அபாயம் நேரிடாதென்று திடங் கொண்டவனுகையால், அதைப்பற்றிச் சிந்தை கொள்ளாமலே அரசன் அம்மலைச் சாரலிலுள்ள விநோதங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். நந்தினி அக்குகைக்குள் நுழைந்தவுடனே ஒரு சிங்கம் அதைப் பிடித்துக்கொள்ள, நந்தினி வீரிட்டது. அந்தக் கூச்சல் கேட்டதும் அரசன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கும்போது, நந்தினி சிங்கத்தின் கையில் அகப்பட்டுக் கதறிக் கொண்டிருந்தது. அதைக் கண்டவுடன் அரசன் வில்லில் நாணேற்றிச் சிங்கத்தை அடிக்கும்பொருட்டுப் பாணம் எடுக்க வேண்டியதற்காக அம்பருத்தூணியில் கையை வைத்தான். வைத்தவுடனே மறுபடி எடுக்கக் கூடாமல் கை அங்கேயே உறுதியாய்ப் பற்றிக் கொண்டது. அரசன் இதுவரையில் இம்மாதிரி ஒருபோதும் அவமானப்பட்டதில்லை யாதலால், இன்று புதிதாய் இத்தன்மையான அவமானம் நேர்ந்ததைப்பற்றி மனக் கவலையும் கோபமும் கொண்டு, தடைகட்டிய சர்ப்பம் போலச் சீறிக்கொண்டிருந்தான். அவனைக் கண்டு சிங்கம் புன்னகை செய்து மனிதர் பேச்சால் பேசத் தொ ங்கியது.

ஃ

அரசனே! வீணே வருத்தப்படுவதில் பயனில்லை; என்பேரில் நீ பாணப்பிரயோகம் செய்தாலும் அது வீணுய்ப் போய்விடுமேயல்லது என்னை ஒன்றும் செய்யாது. பெருங்காற்று மரங்களைப் பிடுங்குமே யல்லது மலையை அசைக்க மாட்டுமோ? நான் பரமசிவனுடைய பரிவாரங்களில் ஒருவன். பார்வதி தேவியால் இங்கு வளர்க்கப்பட்ட தேவதாரு விருக்ஷத்திற்குக் காவலாக என்னைச் சிங்கமாக்கி இங்கு இருக்கும்படியும், என் பசிக்காக இக்குகைக்கு வரும் பிராணிகளைப் பிடித்துப் புசித்துக்கொள்ளும்படியும் உத்திரவு செய்து இங்கென்னை வைத்திருக்கிறுர்கள். நான் இரண்டொரு நாளாய் ஆகாரமே கிடையாமல் பசித்திருக்கிறேன். இன்று கடவுள் இதை எனக்கு உணவாக அனுப்பியிருக்கிறுர். நீ வெட்கம் கொள்ளாமல் திரும்பி உன்னிடம் போய்ச் சேர் என்றது. அதைக் கேட்ட அரசன் ஆச்சரியப்பட்டு, தனக்கு அவமானம் நேர்ந்தது சிவபிரானது பெருமையாலென்று தெரிந்து, அந்தச் சிந்தையை விட்டு

விட்டு அச்சிங்கத்தை நோக்கி, சிங்கமே, என் கையைத் தடை கட்டி வைத்திருப்பதால், இப்போது நான் சொல்வது உனக்குப் பரிகாசமாகவே தோன்றும். ஆயினும், என் மனதிலுள்ளவைகளை நீயேயறிவாயாகையால் அதை உன்னிடம் வெளியிடுகிறேன் என்று சொல்ல, அதன்மேல் அரசனுக்கும் சிங்கத்திற்கும் அடியில்வருமாறு ஸம்பாஷணை நடந்தது.

ஃ

அரசன்:—சிங்கமே, இவ்வுலகங்களைப் படைத்துக் காக்கும் பரமேசுவரன் எனக்கும் தெய்வமேயல்லவா? எனது குரு வசிட்ட முனியின் ஹோமஸாதனமான இந்த நந்தியைக் காப்பாற்றவேண்டியது எனது கடமையா யிருக்கிறது.

சிங்கம்:—சக்தியுள்ள வரையில் காப்பாற்ற வேண்டியது அவசியமே; தன் திறமை செல்லாத இடத்தில் காப்பாற்ற முயல்வது வீணேயல்லவா?

அரசன்:—பரமசிவனார் தேவதாருவைக் காப்பாற்றுவதன் பொருட்டல்லவோ உன்னை இங்கே வைத்திருக்கிறார். இந்தப் பசு தேவதாருவைச் சிறிதும் சேதப்படுத்தவில்லையே?

சிங்கம்:—இங்கு வரும் பிராணிகளையே தின்று ஜீவிக்கும்படிச் சிவபெருமான் கட்டளையிட்டிருக்கிறார். நான் இரண்டு நாளாய்ப் பசித்திருக்கிறேன். நான் இதை விட்டுவிட்டால் என் பசி தீரும் வகை யென்ன?

அரசன்:—அப்படியாயின், நீ என்னைப் புசித்து உன் பசியைத் தீர்த்துக்கொள். இதன் இளங்கன்று இதன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும். ஐயோ! இப்பசுவை நீ விட்டுவிடு. இது ஆச்சிரமம் போய்ச் சேர்ந்து கன்றுடனே களித்திருக்கட்டும்.

சிங்கம்:—(அதைக் கேட்டவுடனே குலுங்க நகைத்து) அரசனே, இப்போது நீ சொன்னதைக் கேட்க எனக்குப் பெருஞ் சிரிப்பு உண்டாகின்றது. இந்த ராச்சிய சுகத்தையும், இவ்விளமையையும், இந்தச் சுகுமாரமான சரீரத்தையும், இவைபோன்ற பின்னும் பலவற்றையும் இவ்வற்பமான ஒரு பசுவுக்காக விடவேண்டுமென்று நீ நினைத்திருப்பது சிறிதும் ஆலோசியாமல் நிச்சயித்த காரியமெனத் தோன்றுகிறது.

அரசன்:—இல்லை, இல்லை. அரசர்களுக்கு முக்கியமாய்ப் பூததயையே இருக்கவேண்டும்.

சிங்கம்:—ஆம், அரசர்களுக்குப் பூததயை இருக்கவேண்டியது அவசியமே. நீ பிரகிருதத்தில் உன் பிராணனைக் கொடுத்து இதைக் காப்பாற்ற நினைக்கிறாய். அப்படியானால், இந்த நந்தினி ஒன்று

மாத்திரமே ஜீவிக்கிறது; அவ்வாறன்றி நீ பிழைத்திருந்தாலோ வெகு நாள் அநேகம் கோடி ஜனங்களைக் காப்பாற்றுவாயன்றோ?

ஃ

இந்த வார்த்தையைக் கேட்டதும் அரசன் ஏது சொல்லுவானோவென்றும், தன்னைக் கைவிடுவானோ என்றும் பயப்படுவது போல நந்தினி வெருள வெருள விழித்து அரசனையே பார்த்துக் கொண்டிருந்தது.

ஃ

அரசன்:—சிங்கமே, க்ஷத்திரியன் என்பதற்கு—"துன்பங்களை நீக்கிக் காப்பாற்றுபவன்"—என்பது பொருள். அவனுக்கு இரக்கம் முக்கியமானது. அதில்லாமல் அரசனென்று பெயர் வைத்துக் கொண்டு ராஜ்யபாலனம் செய்வது வீண். பூததயை யுடையவனென்கிற புகழ் இல்லாவிடின் அவன் தன்னுயிர் காப்பவனே யல்லது மன்னுயிர் காப்பவனல்லன். இத்தன்மையான அபகீர்த்தி பெறுவதைவிட அரசன் உயிரை விட்டுவிடுவதே உத்தமமாம்.

சிங்கம்:—ஆம், நீ சொல்வது உண்மையே. உன் குருவினது கோபத்திற்கு நீ பயந்து பேசுவதாய்த் தோன்றுகிறது. ஆனதுபற்றியே என் வினாக்களுக்குத் தக்க விடையில்லாமல், நீ பிடித்ததையே ஒரே பிடிவாதமாய்ப் பேசுகிறாய். நீ பிழைத்திருந்தால் இவ்வொரு பசுவுக்குப் பதில் இன்னும் ஒரு படி அதிகமாய்ப் பால் கறக்கத்தக்க கோடி பெரும் பசுக்களைக் கொடுத்து விடலாம். குருவின் கோபம் அதனோடு தணிந்துவிடுமல்லவா?

அரசன்:—சிங்கமே, அப்படியல்ல. இந்த நந்தினி காமதேனுவின் மகள். மகிமையில் அதற்குச் சமமானது. ஒரு கோடியல்ல, இதற்குப் பதில் பல கோடி பசுக்கள் கொடுத்தாலும் அவர் கோபம் தணியாது.

சிங்கம்:—நீ உலகத்துக்கெல்லாம் அரசனாயிருக்கிறாய். அநேக இராஜாக்கள் உனக்குக் கப்பம் கட்டுகிறார்கள். அன்றியும், நீ ஸார்வபௌமன். இவ்வாறு ஓர் அரசாய் உலகமெல்லாம் ஆட்சி செய்வதற்கும், தேவேந்திர பட்டத்திற்கும் பூமி சம்பந்தமொன்று தவிர, வேறு எவ்விதமான வேற்றுமையுமில்லை யென்று பெரியோர்கள் சொல்லுகின்றனர். இந்த இராஜ பதவியில் நீ இன்னும் எவ்வளவோ சுகங்களை அனுபவிக்கவேண்டி யிருக்க, இப்பசுவுக்காக உன் பிராணனை விட்டுவிடலாமா? மேலும், உனக்கு அசாத்தியமாய் விட்டதென்றும், நீ வெகுவாய் வேண்டிக்கொண்டும் நான் ஒப்புக்கொள்ளவில்லையென்றும், வசிட்டருக்குத் தெரியுமாகையால் அவரும் உன்மீது அதிகமாய்க் கோபங்கொள்ளமாட்டார்.

அரசன்:—குரு கோபங் கொள்ளுகிறார், இல்லை யென்பதைப் பற்றியல்ல இப்போது யோசிப்பது. முக்கியமாய் ஒருவன் ஒன்றை ரக்ஷிக்கும்படி ஒருவனிடம் ஒப்புவித்தால், தான் காயப்படாமல் காப்பாற்ற வேண்டியதைக் கைவிட்டு, எஜமானன் எதிரேபோய் நிற்பது மிகுந்த மதிக்கேடல்லவோ? நீயும் ஒருவனுக்குப் பரிசாரகனாகையால இது விஷயம் உனக்கும் தெரிந்தது தானே. இதைவிட இன்னும் விசேஷமாய் நான் உனக்குச் சொல்ல வேண்டியதென்ன?

சிங்கம்:—மெய்தான் நீ என்ன சொன்னாலும் உன்னைக்கொல்ல என் மனம் துணியவில்லை. உன் குணங்களைக் காண எனக்கு உன் மீது மிக்க விசுவாசம் உண்டாகின்றது. நீ வீடு போய்ச்சேர வேண்டுமேயன்றிச் சிங்கத்துக்கு இரையாகக் கூடாது.

அரசன்:—சிங்கமே, நீ அப்படிச் சொல்லுவது சரியல்ல. உனக்கு என்மீது தயை இருப்பது உண்மையாயின், அந்தத் தயை இவ் வெற்றுடம்பினிடத்து வேண்டாம்; எனது அழியாப் புகழுடம்பினிடத்தில் இருக்கட்டும். இந்த யாக்கை அனித்திய மென்றும், ஜனித்தவன் மரிப்பது நிச்சயம் என்றும் தெரிந்தே யிருக்கிறது. மனிதன் மாண்டு போனாலும் புகழுடம்பு கொண்டு என்றும் பிழைத்திருக்கின்றான் என்று பெரியோர்கள் கூறி யிருக்கின்றனர். நீ இந்த நிலையில்லாத சரீரத்தில் தயை செய்வதை விட்டு நிலையான புகழுடம்பில் தயை வைத்தால், நீ என் மீது மிகுந்த தயை செய்தவனாவாய். (சிங்கம் அது கேட்டு ஒன்றும் பதில் சொல்லத் தெரியாமல் மௌனமா யிருந்தது.)

அரசன்:—சிறிது பொழுது கூடப்பழகுவதாலும் பேசுவதாலுமே நல்லோர் நட்பினராவரென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். நீ குணசாலி யாகையாலும், இது வரையில் என்னுடன் சம்பாஷணம் செய்தா யாகையாலும் நீ எனக்கு நட்பினனாயினாய்; இப்போது நான் உன்னை வேண்டிக் கொள்ளுகிறபடி என்னைப் புசித்துப் பசி தீர்ந்து சுகித்திருக்கவும், நந்தினியைச் சுகமே ஆச்சிரமம் போய்ச் சேரும்படி விட்டுவிடவும் பிரார்த்திக்கிறேன் என்று வேண்டிக் கொண்டான்.

ஃ

இவ்வாறு மனதில் சிறிதும் கலக்கமில்லாமல் பூததயையே மேலாகக் கொண்டு திலீபன் பேசிய பேச்சுகளைக் கேட்டுச் சிங்கம் வெகு சந்தோஷ மடைந்து அவன் வேண்டுகோளுக்கு இசைந்து நந்தினியை விட்டுவிட்டது. அரசனும் அதுகண்டு அதிக சந்தோஷமடைந்து மனுநீதி முறைப்படி வில்லையும் அம்பையும் பூமியில் வைத்துவிட்டுக் குருவை நினைத்துக் கடவுளைத் துதித்துத்

தனக்கு நல்ல கதியுண்டாக வேண்டுமென்று தியானித்துக்கொண்டு அகமகிழ்ச்சியுடன் சிங்கம் தன்மேல் பாயும்பொருட்டுத் தலைகுனிந்து தரையில் உட்கார்ந்தான். இவ்வரசனது பூததயைக்கு மெச்சித் தேவர்கள் உடனே ஆகாயத்தினின்றும் பூமாரி பொழிந்தார்கள். துந்துபி வாத்தியங்களும் முழக்கினார்கள். சிங்கம் தன்மேல் துரிதமாய்ப் பாயுமென்று அரசன் சிறிது நேரம் எதிர் பார்த்திருந்தான்; ஆனால் பாயவில்லை. இது யாது காரணமோ என்று அரசன் ஆலோசித்துக் கொண்டிருக்கையில் "குழந்தாய் எழுந்திரு" என்று மெல்லிய குரலாய்ச் சத்தம் ஒன்று கேட்டது. அரசன் எழுந்து திரும்பிப் பார்த்தான். அங்கே சிங்க மில்லை; நந்தினி மாத்திரம் முக மலர்ச்சியுடன் நின்று கொண்டிருந்தது அரசன் இதென்னவென்று வியந்து கொண்டு இருக்கையில் நந்தினியானது, "ராஜனே, உன் பூததயையைப் பரீக்ஷிப்பதற்காக இது நான் செய்த மாயமே யல்லது வேறல்ல. எனக்கு எந்த அபாயமும் ஒருகாலும் நேரிடாது. மகரிஷியினது மகிமையால் யமதேவன் கூட என்னை எட்டிப் பார்க்க வல்லவனல்லன் எனில், மற்றவர்கட்குக் கேட்பானேன்? உனது இரக்கத்தையும் குரு பக்தியையும் கண்டு சந்தோஷித்தேன். கேள். நான் சாதாரணமாய்ப் பால் கறக்கின்ற பசுக்களைப் போலல்ல; கேட்டதை எல்லாம் கொடுக்கவல்ல காமதேனு என்று அறிந்து கொள்" என உரைத்தது. அதைக் கேட்ட அரசன் அதிக சந்தோஷமடைந்து கைகூப்பிக் கொண்டு, தனக்கு மிகவும் பிரசித்தனாய் ஒரு குமாரன் பிறக்க வேண்டுமெனவும், அவன் மூலமாய்த் தன் வம்சம் தழைத்தோங்க வேண்டுமெனவும் பிரார்த்தித்தான். அதற்கு நந்தினி "அப்படியே" யென்று அனுக்கிரகம் செய்து, தன் பாலைக் கறந்து பருகும்படி கட்டளையிட்டது. அதைக் கேட்டு அரசன், மறுநாள் காலையில் கன்றுக்கு ஊட்டியபிறகு கறந்து ஹோமஞ் செய்த பின்பு அந்த மிகுதிப் பாலை வசிட்டமா முனிவர் முன்னிலையில் புசிக்க விரும்புகிறேன், அப்படியே தயை செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். அதனால், நந்தினி அவனிடத்தில் பின்னும் அதிகமான பிரீதி யுடையதாகி, அப்படியே ஆகட்டுமென்று வழக்கப்படி ஆச்சிரமத்துக்குத் திரும்பிவிட்டது. அரசனும் முன்போலவே பின்றொடர்ந்து சென்றான்.

ஃ

இவர்களின் வரவை எதிர்பார்த்து வழியில் காத்திருந்த சுதக்ஷிணை எதிர்கொண்டுவந்து நந்தினியைப் பூஜை செய்தாள். அரசனது முகமலர்ச்சியாலேயே அவர்களுக்கெல்லாம் இன்று இவன் காரியம் கைகூடிற்று என்பது தெளிவாகி விட்டது. ஆயினும், அரசன் அங்கு நடந்தவைகளை விவரமாய் முன்னே வசிட்டமா முனிவரிடம் விண்ணப்பம் செய்து, பிறகு தன் பத்தினியுட

னும் சொல்லி ஸந்தோஷித்தான். வழக்கப்படி அன்றிரவு அவர்கள் நந்தினியுடன் கூடப் படுத்திருந்தார்கள். காலையிலெழுந்து காலைக்கடன்களை முடித்து, வசிஷ்டமாமுனி ஹோமம் செய்து பூர்த்தியான பின்பு, அதன் சேஷமான அமுதத்தைக் குருவின் உத்திரவு பெற்றுத் திலீபனும் சுதக்ஷிணையும் பருகினார்கள். ஆரம்பித்த விரதம் இவ்வாறு நிறைவேறிய பிறகு அவர்கள் பாரணை செய்து, அக்கினியைப் பிரதக்ஷணம் பண்ணி, வசிட்டமுனி, அருந்ததி, நந்தினி இவர்களைப் பிரதக்ஷிண பிரணாமங்களால் பூசித்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு அயோத்திமா நகரம் போய்ச் சேர்ந்தார்கள். அரசனைக் கண்டவுடனே புரஜனங்கள் சந்திரனைக்கண்ட கடல்போலப் பொங்கிப் பேரானந்த மடைந்தார்கள். அரசன் எப்போதும்போல் இராச்சிய பாரத்தை ஏற்றுக்கொண்டு முனபோலவே அரசு செலுத்தத் துவக்கினான்.

ஃ

இவ்வரசனது தயாளகுணத்தைப்பற்றி இதைவிட இன்னும் அதிகமாய்ச் சொல்லவேண்டுவது வேறுண்டோ! தன்னுயிரைக் கொடுத்தாவது மன்னுயிரைக் காக்கும் இத்தன்மையான தயாளகுணம் வெகு அருமையானது. நந்தினியின் பாலைப்புசித்த தின முதலாக சுதக்ஷிணா தேவி கருத்தரித்தவளாகிப் பத்து மாதமான பிறகு, ஐந்து கிரகங்கள் உச்சமாயும் சூரியனுடைய சேர்க்கையாகிய அஸ்த தோஷமற்றவைகளாயுமிருந்த ஒரு சுப முகூர்த்தத்தில் ஒரு நற்புதல்வனைப் பெற்றாள். அரசனும் சுதக்ஷிணையும் அப்புதல்வனுடன் சுகமாக வெகுகாலம் அரசு செலுத்தி வந்தார்கள். இவ்விளவரசனே ரகு மகாராஜன் எனப் பேர்பெற்றுத் தேசமெல்லாம் ஜெயித்து, 'விச்வஜித்து' என்னும் ஒரு சிறந்த யாகத்தை நடப்பித்து, இப்பூமியில் தனக்கு நிகர் மற்றெவருமில்லையெனப் பிரசித்தி பெற்றவன். இவனாலேயே சூரிய வம்சத்துக்கு "ரகு வமிசம்" எனவும், அவ்வமிசத்தில் உதித்த அரசர்களுக்கெல்லாம் "ரகுக்கள்" எனவும் பெயர் வழங்கலாயின. இவ்வமிசத்தில் வெகு காலத்திற்குப் பிறகு அவதரித்த ஸ்ரீராமபிரானுக்கும் "ரகுநந்தனர்" என்ற சிறப்புப் பெயர் பொருந்தியது. செல்வங்களுள் சிறந்த செல்வமானது அருளாகிய செல்வம்தான்; பொருளால் வரும் செல்வமானது கீழோரிடத்தும் உள்ளது. நட்பும் தயையும் கொடையும் பிறவிக் குணம.

> "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்: பொருட்செல்வம்
> பூரியார் கண்ணும் உள."

"நல்லார் குணங்க ளுரைப்பதுவும் நன்றே."

பத்தாம் ஆண்டு சந்தா.

பங்குனியுடன் 'அமிர்தினி' 9-ம் வருட பூர்த்தி
யுவ-சித்திரை முதல் 10-ம் ஆண்டு ஆரம்பம்
'அமிர்தினி' உங்கள் தோழி, சுகுமாரி, கண்மணி
பிரதி மாதமும் இன்பம் தருவது 'அமிர்தினி'
அமிர்தினிக்கு சமமான பத்திரிகை வேறுஏது?
10-ம் ஆண்டில் 'அமிர்தினி'யை ஆதரியுங்கள்
ஏப்பிரல் 5-க்குள் புது சந்தா அனுப்புங்கள்
இன்றே மணியாடர் தரினும் மிக மிக நன்றே.

எல்லா மணியாடர்களையும், சென்னை பிராட்வே 158-A 'அமிர்த குணபோதினி' ஆபீஸுக்கு அனுப்புக. அன்புடனே அமிர்தை உங்கள் ஆயுள் முழுதும் ஆதரியுங்கள்.

வெளிநாட்டு அன்பீர்! புதிய சந்தா தாரீர்.
மாசி 'அமிர்தினி' கண்டதும் அனுப்பிடுவீர்.
சந்தா வந்தபின் புது 'அமிர்தினி' தந்திடுவம்.
ஆசிரிய ராமாநுஜனை சதா மனதில் வைப்பீர்.
புது ஆண்டில் அமிர்தினி சிறந்து விளங்கும்.
வி. பி. விரும்பின், பத்திரிகை பெற நாளாகும்.
சித்திரை முதலில் காண வரா. அது கஷ்டம்.
மணியாடர் தந்து முதல்தேதி பெறலே நன்று.
புது சந்தா பிறகு அனுப்பலாமென இராதீர்.
முன்பே ஈதல் பெரிய உதவி, உடனே தருக.
அமிர்தினி 10-ம் ஆண்டு காணவாரீர்; மகிழ்வீர்

அமிர்தினி அநுபவ சஞ்சீவி, ஞானோதய தீபம்
80-பக்கம், ஒரு ரூபா, எப்பக்கமும் இன்பமே.
10-ம் ஆண்டுமிகு பரிமளம் வீசும். பரவசமே.
வி. பி. தொல்லை; மணியாடர் தருக அது லாபம்
அமிர்தினி உம் செல்வம் நற்றுணை மறவாதீர்
அமிர்தினியை என்றும் பெற்று வளர்த்திடுவீர்

"அமிர்தினி"யின் 10-வது ஆண்டு.

சேந்தமிழ்ச் செல்வர்காள் !

"அமிர்த குணபோதினி"யின் ஒன்பதாவது ஆண்டு பூர்த்தி பெறுவதற்கு இன்னும் ஒரே மாதம்தான் இருக்கிறது. இந்த ஒன்பது வருடகாலமாகத் தொடர்ந்து பெற்று வரும் அன்பர்கட்கும், இவ்வொரு வருடகாலமாக அதனை வாசித்துவரும் புதிய நேயர்கட்கும் அதன் இனிய அமைப்பும் அருமையும் மேன்மையும் ஒருவாறு தெரிந்திருக்கும். அதன் ஆசிரியர் ஓயாது இரவும் பகலும் உழைத்துப் பத்திரிகையின் முக்காற் பகுதிக்கும் அவரே எழுதிச் சென்று அழகுபெற அமைக்கின்றார். சிறுவர் சிறுமிகளும் தெரிந்து கொள்ளக்கூடிய சுலபமான முறையில் ஒவ்வொரு விஷயமும் எழுதி வரப்படுகின்றன. ஒரு பக்கமும் வீணாகாதவாறும், விளங்கவில்லையென்று விட்டுவிடாதவாறும் கவனிக்கப்பட்டு, அர்த்த புஷ்டியும் அனுபவமுமாக வரையப்பட்டு வருகின்றன. மற்றும் விஷயதானம் செய்வோரும் மிக்க கல்விமான்களாயிருந்து தமது முழுத் திறமையையும் வித்வ சாதுர்யத்தையும் புலப்படுத்திப் பத்திரிகையை மிக உன்னதமாக அலங்கரிக்கின்றனர்.

ஃ

"புஸ்தகங்கள் இருவகைத்தென்றும், அவற்றுள் ஒன்று ஓர் மணிநேரமேயுள்ளதென்றும், மற்றொன்று எக்காலத்து மிருப்பதென்றும் ஜான் ரஸ்கின் (John Ruskin) என்ற ஆங்கிலப் புலவரொருவர் கூறியிருக்கின்றார். ஒரு மணிநேரம் உயிர்கொண்டுலாவும் புஸ்தகங்களோ 'டீன்பாரர்' (Dean Parar) எனும் பண்டிதர் கூறுகிறபடி அவை கடைகளில் மிட்டாய் கட்டுவதற்கோ, பெட்டியினுட்புறம் ஒட்டுவதற்கோ பயனாகின்றது. நாம் "அமிர்த குணபோதினி"யில் வரைந்திடும் விஷயங்களை நூறு வருடங்கட்குப் பின்னரும் வாசித்து அறிவுப்பெருக்கு அடைவதற்கான முறையிலேயே ஆராய்ந்து எழுதிக்கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்குப் பயன்படுவதுடன், இனி என்றைக்கும் உபயோககரமாக விளங்கவேண்டுமென்பதே நமது முக்கியமான கொள்கை. அந்த வகையில் "அமிர்தகுண போதினி"யை அதி சிரேஷ்டமானதென்றே சொல்லலாம்.

ஃ

"கதையாகட்டும், காவியமாகட்டும், மற்றச் சரித்திரமாகட்டும்—மனிதருக்கு நலந்தரும் விஷயங்களை வரைந்திருக்கவேண்டும்" என்று 'வால்டர் ரகிகாட்' (Walter Ragchot) என்ற ஆங்கிலப் பெரியார் வற்புறுத்துகின்றார். "கதைகளில் ஒழுக்கத்தையே ஏன் உயர்த்திக் காட்டலாகாது" என்றார் 'ஜான்ஸன்' (Dr. Johnson) பண்டிதர். வாசிப்போருக்கு இன்பத்தைக் கொடுத்து, நற்காரியத்தில் நாட்டமுண்டாக்குவதே ஆசிரியரின் கருத்தாக இருக்கவேண்டும். இக்கருத்தைப் பின்பற்றியே "அமிர்தகுண போதினி"யை ஞானக்களஞ்

ஒருவனுடைய ஸஞ்சல புத்தியாவது, ஸந்தோஷ புத்தியாவது காரிய நிறைவேற்றத்தின் முடிவிலாம்.

சியமாகவும், கல்விக் களஞ்சியமாகவும், அனுபவக் களஞ்சியமாகவும், அறிவை விளக்கித் தெளிவுதரும் விகட விநோதக் களஞ்சியமாகவும், நல்லாராய்ச்சியின் பொக்கிஷமாகவும் அமைத்து நம்மாலியன்றவரையில் மனஸ்பூர்வமாய் உழைத்து வந்திருக்கின்றோம்.

ஃ

"அமிர்தகுண போதினி" தோன்றி ஒன்பது வருடங்களாயின. அதன் ஒன்பது வால்யங்களையும் நவரத்தினங்கட்கு சமமாகச் சொல்லக்கூடிய வாறு உன்னதம் கொண்டுள்ளன. இந்த ஒன்பது வருடகாலமாக "அமிர்த குணபோதினி"யை ஆதரித்து அபிவிர்த்தி செய்த நேயர்கள் அதன் பத்தாவது ஆண்டிலும் தங்களின் புதிய சந்தாவைச் செலுத்தி அபிமானித்துப் பெருமை யடையுமாறு வேண்டுகிறோம். தாங்களும் புது சந்தாவைச் செலுத்துவதுடன், தங்களின் அன்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்த்தனுப்பி நமக்கு உற்சாகத்தையும் தைரியத்தையும் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஃ

குறித்த ஒரு பத்திரிகையைத் தங்களின் ஜீவகாலபரியந்தம் ஆதரித்து வருவதென்று பிரதிக்ஞை செய்துகொண்டு, அவ்வாறே நடந்துவரும் உத்தம புருஷர்களும் புண்ணியவதிகளும் அநேகர் இருக்கிறார்கள். அவ்விதமே, நமது அன்பர்களும், "அமிர்தகுண போதினி"யைத் தங்களின் ஆயுள்வரையும் ஆதரித்துப் போற்றுவதென்ற உறுதியும் மனோதிடமும் வகித்தவர்களாய்ப் பத்தாம் ஆண்டின் சந்தாவை முன்னதாகச் செலுத்தி நம்மீது கொண்டிருக்கும் அன்பையும் மதிப்பையும் பிரகாஸப்படுத்துமாறு பிரார்த்திக்கின்றோம்.

ஃ

புது வருடமாகிய பத்தாம் ஆண்டின் சந்தாவைச் செலுத்துவதிலே, அதனை மணியார்டர் மூலமாகவே அனுப்பிக்கொடுத்து உபகரிக்கவேண்டு மென்பது நமது விசேஷ வேண்டுதலாகும். வி. பி. மூலம் அனுப்புவதில், அன்பர்கள் முதல் பத்திரிகையைப் பெறுவதற்கு அதிக தாமதமாவதுடன், ஒரு ரூபாய் இரண்டணாவுக்குப் பதிலாக, ஒரு ரூபாய் ஆறு அணா செலுத்த வேண்டிய சிரமமும் இருக்கின்றது அன்பர்கள் புதுவருட சந்தாவை மணியாடரில் அனுப்பிவிடுவது அவர்களுக்குச் சௌகரியமாயும், நமக்கும் வி. பி. அனுப்பவேண்டிய சிரமமில்லாமலும் இருவகையோருக்கும் அநுகூலமுடையதாயிருக்கும். ஆதலின், ஏப்பிரல் மாதம் ஐந்தாம் தேதிக்குள் மணியார்டர் மூலமாக சந்தாவைச் செலுத்தி "அமிர்த குணபோதினி"யை என்றைக்கும் சாஸ்வதமாய் ஆதரித்து வருமாறு கேட்டுக்கொள்கிறோம். புது சந்தா அனுப்புகையில் தங்களின் சந்தா நெம்பரையும் விலாஸத்தையும் மணியாடர் கூபனில் தெளிவாய் எழுதியனுப்புவது அவசியமாகும். அன்பர்களின் ஆதரவையும் அபிமானத்தையும் மனஸ்பூர்வமாக விரும்பி எதிர்பார்க்கின்றோம்.

எஸ். ஜீ. இராமாநுஜலு நாயுடு,

பத்திராசிரியர்.

பிரபஞ்ச தரிசனம்

இலங்கையின் விசேஷங்கள்.

இலங்கை ஒரு தீவானாலும் எல்லோராலும் விரும்பப் படத்தக்க இடம். சுகமும், செழிப்புமான இடம். இலங்கைத் தீவை ஒன்பது மாகாணங்களாக வகுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு தலைநகரம். இங்கு அதிக உஷ்ணமான இடங்களும், அதிகக் குளிரான இடங்களும், சமமான இடங்களும் இருக்கின்றன. இங்கு பல ஜாதிக்காரரும் பல பாஷைக்காரரும் பல மதஸ்தரும் பல தொழிலாளரும் இருக்கிறார்கள். இலங்கையில் அநேகமாக காலந்தவறாது மழை பெய்யும். சில இடங்கள் தவிர தண்ணீருக்குக் குறைவில்லை. இலங்கையின் பல பாகங்களில் மலை, காடுகள் அதிகம் மலைப்பிரதேசங்களில் கானாறுகள் எந்த இடத்திலும் ஓடிக்கொண்டே யிருக்கும். சுத்தமான தெளிந்த தண்ணீர் பார்வைக்கு அழகாயிருக்கும்.

ஃ

யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் தான் அதிகம். சுத்தமான தமிழ் பேசுவார்கள்; கல்வி கற்கப் பிரியமுள்ளவர்கள்; புத்தி தீக்ஷணியம் உடையவர்கள்; சுறுசுறுப்பும் ஊக்கமும் உள்ளவர்கள். யாழ்ப்பாணத்தில் ஜாதிக்கட்டுப்பாடு அதிகம். அங்கு சுருட்டு சுற்றும தொழிலும், வயல் வேலையும் அதிகம். பனைமரத்தையும் அதின் பழம் கிழங்குகளையும் பலவித ஆகாரஞ் செய்வார்கள். பரவர்கள் மீன்பிடிக்கும் தொழில் செய்வார்கள். அங்கு கலாசாலைகளும், கன்னியாஸ்திரீ மடங்களும், வைத்திய சாலைகளும், நீதிஸ்தலங்களும், சிறைச்சாலைகளும், விடுதிகளும், அரண்மனைகளும், கோவில்களும் இருக்கின்றன. அங்கு கப்பல் துறைமுகம், புகைரத ஸ்தானமுமுண்டு. கொளும்பு இலங்கையில் முதலாவதான பட்டணம். இங்கு பல ஜாதிக்காரரையும் காணலாம். பல தேசங்களிலுள்ள பொருள்களெல்லாம் கொளும்பில் இருக்கும். இலங்கையில் புத்த மதஸ்தரும் இந்துக்களும்தான் அதிகம். இந்துக் கோவில்களும், புத்த ஆலயங்களும், இஸ்லாம் மசூதிகளும், கிறிஸ்தவ கோவில்களும் இருக்கின்றன.

ஃ

கொளும்பு அதிக ஜனநெருக்கமுள்ள பட்டணம். இங்கு கப்பல் துறைமுகமும், புகைரத ஸ்தானங்களும், கல்லூரிகளும் நீதிஸ்தங்களும், சிறைச்சாலைகளும், வைத்தியசாலைகளும் நெசவு தொழில்சாலைகள், சாப்பாட்டு விடுதிகள், ஷாப்புகள், ராஜ அரண்மனை, புதினசாலைகள், குருட்டு ஊமைப் பள்ளிக்கூடம், அழ

கான பங்களாக்கள் எல்லாம் இருக்கின்றன. தெருக்கள் ஒழுங்காகவும் சுத்தமாகவுமிருக்கும்.

ஃ

கண்டியில் இரண்டாவதான பட்டணம் கண்டி. இது சுகத்திற்கேற்ற இடம். அதிக உஷ்ணமுமல்ல, அதிக குளிருமல்ல, இலங்கையின் மத்தியில் இருக்கிறது. கண்டியைச் சிறப்பிக்கிறது கண்டிக்குளம் தான். மூன்று மைல் சுற்றளவுள்ளது. அதைச் சுற்றி அழகான மரங்களும் பூச்செடிகளும் நட்டிருக்கும். உட்கார ஆசனங்களும் அமைக்கப்பட்டிருக்கும். குளத்தில் சிறு படவுகள் இருக்கின்றன. குளத்தின் நடுவில் சிறு தீவு ஒன்றும் அதன் மத்தியில் கிணறு ஒன்றும் இருக்கிறது. மாலையில் இங்கிருந்தால் அதிக ரம்மியமாக இருக்கும்.

ஃ

குளத்தின் இரு பக்கங்களிலும் இரு பெரிய ஆங்கிலேய சாப்பாட்டு விடுதிகள் இருக்கின்றன. கண்டியில் விசேஷமாக பெரிய புத்த ஆலயம் ஒன்றிருக்கிறது. இங்கு வருஷத்திற்கு ஒருமுறை பெரகரா என்று ஒரு உற்சவம் நடத்துவார்கள். இதற்கு நூற்றுக்கணக்கான யானைகளை அலங்கரித்துக்கொண்டு வருவார்கள். முன்னும் பின்னும் சிங்களவர்கள் பலவிதமான ஆபரணங்கள் அணிந்து கூத்தாடுவார்கள். பதினைந்து நாளைக்கு உற்சவம் நடக்கும். பட்டணங்களில் உள்ளவர்கள் நாகரீகமாக இருப்பார்கள். இலங்கையில் நவநாகரீகம் பெருத்துவிட்டது. பெண்கள் ஆங்கிலேயரைப்போல முழங்காலுக்குமேல். கை இல்லாத சட்டை உடுத்துவார்கள். தலைமயிரை வெட்டிவிடுவார்கள். சப்பாத்தில்லாமல் இருக்கமாட்டார்கள், இந்தியாவைப் பார்க்க இலங்கை இந்த வகையில் அதிக மோசம். நம் சொந்த பாஷை மரியாதையான உடை இருக்கையில் ஏனோ இக்கோலம்? அந்நிய நாட்டு நாகரீகத்தில் தலைகால் தெரியாமல்ஆடுகிறார்கள். இது வெட்கக்கேடு. ஆண்களும் கிராப்புத் தலை ஒட்டி மீசை, கோட். கால் சட்டை. பூட்ஸ், தொப்பி இவைகளுக்குக் குறைவில்லை. ஆகையால்தான் இலங்கையில் வேலையில்லாதார் தொகை அதிகரித்துவிட்டது. சாப்பிட இல்லாவிட்டாலும் சிகரெட், சுருட்டு, பீடி இவைகளுக்குக் குறை இல்லை. ஏனோ இவர்களுக்கு இந்த வீண் பைத்தியம்!

ஃ

இலங்கைத் தோட்டப் பகுதிகளைப்பற்றி அறிய விரும்புவீர்களா? இலங்கையில் விசேஷமானது தேயிலை; இரண்டாவது ரப்பர்; மற்றவைகள் அதற்குப் பிறகுதான். கொக்கோ, கிராம்பு, ஏலம், லவங்கப்பட்டை, ஜாதிக்காய். மிளகு, தேங்காய், நெல், பாக்கு, சில இடங்களில் கேப்பை தினை மற்ற தானியங்கள் பயிரிடப்படுகின்றன. தேயிலை, ரப்பர் தோட்டங்களில் தொழிலாளர், கங்காணிமார், கணக்கப்பிள்ளைமார் இவர்களுக்கு வீடுகள், (Teamaker) டீ மேக்கர், கண்டெக்டர், கிளார்க், இவர்களுக்கு சிறு பங்களாக்கள், ஆங்கிலேய துரைமார்களுக்கு பங்களா, இவைகள் இலவசமாகக் கொடுப்பார்கள். தொழிலாளர்க்கு வைத்திய சாலை, பள்ளிக்கூடங்கள் இலவசம் தான். விறகு, தண்ணீர், மரக்கறி தோட்டம், மாடு, முதலியவை கட்ட இடம் சும்மாதான். தொழிலாளர் காலை ஐந்துமணிக்குமுன் எழுந்து சமையல் மற்ற வேலைகளெல்லாம் முடித்து, பிறட்டுக்குப் போகவேண்டும் பெண்கள் தேயிலைக் கொழுந்து

எடுக்கவும், புல் வெட்டவும் போவார்கள். அதன் கொழுந்துகளை ஒரு நாளைக்கு மூன்று அல்லது நாலு முறை கணக்கப்பிள்ளை நிறுப்பார். பகல் சாப்பிடப் போவார்கள் திரும்பவும் வேலை செய்து நாலு மணிக்கு வேலையைவிட்டு தேயிலை பதனிடும் சாலைக்கு (Tea Factory)-க்குப் போய், பேர் பதிந்தபின் வீட்டிக்குச் செல்வார்கள்.

ஃ

தேயிலைக் கொளுந்தை வாட வைக்க பளிங்கினால் செய்த தட்டுகள் இருக்கும். அதில் போட்டு வாட வைத்து, பிறகு இயந்திரத்தில் போட்டு அரைப்பார்கள். பின் அரைத்ததை இயந்திர அடுப்பில் போட்டு காய்ச்சுவார்கள். பின் காய்ச்சினதை ஜலித்து, பல மாதிரியாகப் பிரித்து பல பேர்களிட்டு பெட்டிகளில் அடைத்து விற்க அனுப்புவார்கள். தேயிலை சாலைகள் இரும்பாலும், தகரத்தாலும் கண்ணாடியாலும் தான் கட்டி இருக்கும். மூன்று நாலு மாடிகளாக இருக்கும்.

ஃ

மின்சார விளக்குகள்தான் எங்குமிருக்கும். வேலை துவங்கியவுடன் இஞ்சின் இயங்கும். இங்கு ஆண்களும் பெண்களும் வேலை செய்வார்கள். தேயிலை காய்ச்சுவது வெகு தூரம்வரை மணக்கும். அநேகமாக இலங்கையில் தேயிலைப் பானம்தான் மிகுதி. ஏழைத் தொழிலாளர்க்கு தேத்தோட்டங்களில் அதிக வசதியுண்டு. வாரமொருமுறை சம்பளமும் கொடுப்பார்கள். கடவுள் கிருபையால் இலங்கையில் சாப்பாட்டிற்கு அவ்வளவு கஷ்டமில்லை.

S. சுகிர்தமணி அம்மாள்.

தொழிற் கல்வி என்றால் எது ?

ஒருவன் சாஸ்திரத்தால் பயின்ற புத்தியைத் தனக்குக் கிடைக்கும் வஸ்துவின்மேல் பிரயோகித்து, அதனின்றும் விற்பனைக்கு வேண்டிய பொருள்களைத் தயார் செய்யுமாறு உதவும் கல்வியே தொழிற் கல்வியாகும். ஆகவே, தொழிற் கல்விக்குப் டத்தி சாமர்த்தியம் வேண்டியதாகும். அந்தப் புத்தி சாமர்த்தியத்துக்கு உயர்தரக் கல்வியும், விசாலமான மனப்பயிற்சியும் அவசியம். அது மாத்திரமன்றித் தொழிற் கல்விக்குப் 'பதார்த்த ஞானம்' வேண்டியிருக்கின்றது. பதார்த்த ஞானம் பிரகிருதி சாஸ்திரக் கல்வியாலேயே உண்டாகும். ஏனெனில், பிரகிருதி சாஸ்திரமே பதார்த்த ஞானம் தரும் சாஸ்திரமாம். பதார்த்த ஞானத்தின்மேல் புத்தி சாமர்த்தியத்தைப் பிரயோகித்து, விற்பனையாகத்தக்க பண்டங்களை யுண்டாக்கும் வகையைக் கூறும் கல்வியே தொழிற் கல்வியாம்.

மழை

[ஸ்ரீமான் கனி. மு. யாக்கூப்.]

மழையே! மழையே! மாண்புறு மழையே!
பிழையிலா துலகைப் பேணும் மழையே!
காற்றெனு மரசனுங் கடலெனு மரசியும்
ஆற்றிய தவத்தால் அமைந்தநன் மகவே!
பஞ்சம் என்னும் பஞ்சைப் பேயை
மிஞ்சா தோட்டும் வீறுடை யோயே!
அறமுந் தவமும் அறிவும் ஆண்மையும்
திறமும் உன்றன் திருச்செய லன்றோ?
உயிரினமெல்லாம் உடன்மனங் குளிர
பயிரின மெல்லாம் பசுமையாய் வளர
நல்லோரென்றும், புல்லோரென்றும்,
மேலோ ரென்றும், கீழோ ரென்றும்,
பெரியவ ரென்றும், சிறியவ ரென்றும்,
எளியோ ரென்றும், வலியோ ரென்றும்,
செல்வரென்றும், தரித்திரரென்றும்,
முதலாளி யென்றும், தொழிலாளி யென்றும்,
வெள்ளைய ரென்றும், கருப்பரென்றும்,
மண்ணக மாக்கள் வகுத்திருப்பதனை
எண்ணக மதிலே யிம்மியு மெண்ணு
திம்மா நிலத்தே கைம்மா றேதுவும்
வேண்டா தகன்ற விண்ணிடை யுலவி
யிருந்து சோ! சோ!! என்ன நீ பொழியும்
எழுதரும் எழிலினை எளியே னிங்கே
என்னென் றுரைப்பேன்! என்னென் றிசைப்பேன்!
வெள்ளியாற் செய்த வியன்கம் பிகளோ?
ஒள்ளிய மணிகள் ஒளிக்குஞ் சரங்களோ?

உன்னிடமிருப்பதை யெல்லாம் உன் ஏழை நண்பனுக்குத் தூக்கிக் கொடுத்துவிடும்படி நான் சொல்லவில்லை. உன்னால் எவ்வளவு வரையில் கூடுமோ அவ்வளவு வரையில் நீ செய்யலாமன்றோ? உன் நண்பனைக் கண்டதும் நீ புன்னகை முகம் தெரிவித்தால் அதுவே உயர்ந்த முதல் பரிசு.

மேலுல கஞ்சேல் நூலே ணிகளோ?
அமரர்கள் அருந்தும் அமுததா ரைகளோ?
இறைவ னருட்கட லிருந்திழி துளிகளோ?
தேவர்கள் காவின் தேன்சோட் டுகளோ?
காம தேனுவின் கான்பாற் றுளிகளோ?
உலகமாம் வேள்வி ஓமகுண் டத்தே
நிகரறப் பெய்யும் நெய்த்தா ரைகளோ?
கன்னலஞ் சாற்றின் காண்திவலை களோ?
என்ற வித்தகைய இயற்சோற் களாலே
என்னென் றுரைப்பேன்! என்னென் றிசைப்பேன்!
நின்னைப்போல நிலவுல கத்தே
உன்னரு மூழியம் உவப்புடன் புரிய
எண்ணினேன், ஆதலின், எனக்கரு ளீங்தே
வாழிநீ! வாழிய! ஊழிதோ றும்மே!

[இவ்வினிய கவிதையை இசைத்த அன்பர் தமது விலாஸத்தையும் இனி தெரிவிப்பாராக. ப-ர்.]

மானம் பெரிதா? ருசி பெரிதா?

காலையில் காபி பலகாரம் வெகு ருசிதான். கையில் காசுக்குக் கஷ்டமா யிருக்கையில் ஒரு நாளைக்குப் பழய சோறு உண்டால் கௌரவம் கெட்டுவிடுமா? ருசியைப் பார்த்தால் பணத்திற்கு எங்கே போவது? பழய சாதம் நமது வீட்டில் சாப்பிடுவதாலேயே நமது மானம் கெட்டு விடாது. அந்தப் பழயதிற்கு இன்னொருவரின் வீட்டிற் போய் காத்துக் கிடப்பதுதான் மானக்கேடேயன்றி, நமது வீட்டில் பழயது உண்டு பசி தீர்வது கேவலமல்ல. தன் சட்டியிலிருக்கிறதுதான் சக்கரை. இன்றைக்கு நமது குடும்பம பிறரை எதிர்பார்க்காமல் மானமும் மதிப்புமாய் வாழ்வது மட்டும் போதாது. நமது காலத்திற்குப் பிறகும் கூட மானத்தோடு சௌரவமாய் வாழ்ந்து விளங்கவேண்டு மென்ற கவலையும் திருஷ்டியும் கொள்ளவேண்டும். அதற் குத் தக்கபடி மானம் காத்துக்கொள்கிற வழியில் குடும்பத் துச் செலவுகளும் ஒரு சிக்கன ஒழுங்கோடுமிருக்கவேண்டும்.

நளினன்

அல்லது, நவ கங்கணங்கள்.

(664-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு நளினனை நோக்கி, "நீ வந்திருப்பதால் கொதுவை வைத்திருக்கும் பண்டங்களை யெல்லாம் திருப்பி விடுகிறோம்; புது மாதிரி ஆபரணங்களெல்லாம் பாவினிக்கு அவள் பெற்றோர் செய்து கொடுப்பார்கள். என்றாலும், நாம் அவளுக்கு நூதனமாக எதாவது கொடுத்தே தீர வேண்டும். நான் ரஜனியின் தாயாரிடமிருந்து ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கினேன். அதற்குப் புதுமையான இரண்டு வளைகள் வாங்கி வைத்திருக்கிறேன். அதை நீதான் உன் கைப்பட பாவினியின் கரங்களில் அணிய வேண்டும்" என்றாள்.

ஃ

திருப்தியடைந்த அத் தாயார் கங்கணங்களை எடுத்துவரச் சென்றாள். ஹரிலால் மகனின் கலக்கத்தையும் குழப்பத்தையும் கண்டு சஞ்சலமடைந்தவராய், "நளினா! உனக்கு இப்பொழுது கலியாணம் செய்துகொள்ள விருப்பமில்லையா?" என்று வினவினார்.

இது கேட்டு நளினன் இரண்டொருதரம் இருமி இங்குமங்கும் நோக்கினான் இராம பிரஸாத் நகைத்துக்கொண்டு தாழ்ந்த குரலில் "நீ கலியாணம் செய்துகொண்டுதான் வந்திருக்கிறாயோ?" என வினவினான்.

நளினன் மெல்ல முணுமுணுத்தான்:—"இப்பொழுது கடவுளை நினைத்து நீ வாயை மூடிக்கொள்". ஒரு கிராமவாசிபோல் கண்டபடி பேசாதே. வார்த்தைகளில் கௌரவம் இருக்கட்டும். நான் சில நாள் இளைப்பாறும்படி விடுவது நல்லது.

ஹரிலால் சற்று தொலையில் இருந்ததால் அவன் கூறியது அவர் காதில் விழவில்லை. ஆனால், இராமபிரசாத் மௌனம் சாதிப்பதற்கு மாறாக ஆச்சரியத்தோடு கூவினான்.

"அப்படியானால் நீ கட்டாயம் கலியாணம் செய்துகொண்டிருக்கிறாய்! ஆனால் எப்போது? எங்கே? யாரை? ஒரு ஆங்கிலப் பெண்ணையா?"

தந்தையின் இதயத்தில் இரத்தம் குபீரெனப் பொங்கியது. அவர் ஸ்தம்பித்து அசைவற்று மகன் முகத்தை உற்று நோக்கியவண்ணம் அச்சமும் திகிலுமடைந்டவராய் அவன் பதிலை எதிர்பார்த்து நின்றார்

வேலை யில்லாமற் போனால், எதாவதொன்றை எடுக்கச் சென்று அது காணாமற் போயிருக்க, அதைத் தேடி ஆயாசப்பட்டு நோகிற வேலை கிடைக்கிறது.

நளினன் இன்னது செய்வதென்றறியாது தலையை அசைத்துவிட்டு வாளா விருந்தான்.

ஹரிலால் தமது தலையில் தூக்க முடியாத பெருஞ்சுமையை எடுத்து வைத்துக்கொண்டவர்போல் சோபாவில் சாய்ந்தார். சந்தோஷம் குடிகொண்டிருந்த அவ்வீட்டில் இருள் சூழ்ந்தது.

காமினி புன்னகை ததும்பிய வதனத்தினளாய்த் திரும்பிவந்து, "நளினா! இதோ பார்" எனக் கூறி வளையல்களை அவனிடம் 'கொடுத்து, "இந்தப் புதிய வளையல்கள் எப்படி யிருக்கின்றன?" நீ அதை அவள் கரத்தில் போடு; அவளுக்கு அழகா யிருக்கிறதா என்று நான் பார்க்கட்டும்" என்றாள்.

நளினன்:—என் அருமைத் தாயே! நிதானித்துச் செய்யவேண்டிய விவாகத்தில் நீ மிகவும் அவசரப் படுகிறாய். முதலில் தங்கை ஹேமாவுக்கு விவாகம் நடக்கட்டும். அதன் பிறகு என்னைக் கவனிக்கலாம். பாவினி அதிரூப சம்பன்னையாகவே விளங்குகிறாள். ஆனால், வேறொரு நங்கையிடம் மயங்கி யிருக்கிறேன். அவள் எனது பிரயத்தனத்தில் கிடைக்காவிடில் அப்பொழுது இந்த வளையல்களைப் பாவினிக்கு அணிவித்து அவளை மணந்து கொள்கிறேன்.

இராமபிரசாத்:—நான் நினைத்தது சரியாய் விட்டது. நீ மயங்கி விட்டது ஆங்கிலப் பெண்ணிடத்தில் தான், எங்கள் ஆசையில் மண் விழுந்து விட்டது.

நளினன்:—வீணாகப் பிதற்றாதே, ஆங்கிலமாது ஒருநாளும் ஹிந்துவின் மனைக்கு இசைந்தவளன்று. இதை நான் பூர்ணமாக அறிவேன். பாரத மாதாவை மனஸ் பூர்வமாய் வணங்குகிறவன் இந்த ஹீனமான பிரவர்த்தியில் ஒருபோதும் இறங்கமாட்டான்.

காமனி,—அப்பா நளினா! நீ எந்தப் பெண்ணின் வலையில் சிக்கி யிருக்கிறாய்? என் ஆசைகள் வியர்த்தமாய் விட்டனவா?

ஹரிலால்:—குமாரா! தாய்க்கு மிஞ்சிய தெய்வமில்லை. அவள் மனம் சோர்ந்து விழுந்து விடாதபடி நடந்து கொள். அதுவே உனக்கு க்ஷேமம்.

ஹேமா:—அண்ணா! பாவினியை நீ மணந்தால், மாமி மருகிச் சண்டையே இந்த வீட்டில் இராது. நானும் பாவினியும் நமது அன்னையின் அழகிய இரண்டு கண்களுக்குச் சமமாக இருக்கிறோம். உனக்காக அம்மா எவ்வளவோ தரித்திர கஷ்டங்களைத் தாங்கி யிருக்கிறாள். முதலில் அம்மாவைத் திருப்தி செய். அது தான் உனக்கு மங்களம் தரும்.

நளினன்:—நான் காதலித்த பெண்ணை இன்னும் நேரில் காணவில்லை. நான் ரூப சௌந்தர்யங்களையல்ல, வித்தையையே மதிக்கிறேன். நன்கு கற்றுத் தேர்ந்த எனக்கு என்னிலும் அதிகம் பயின்றுள்ள பெண்மணி கிடைப்பாளாயின் அதுவே என் வாழ்

கெட்ட எண்ணங்கள் எண்ணுவதாலும், கெட்ட பேச்சுகள் பேசுவதாலும், கெட்ட செய்கைகள் செய்வதாலுமே ஒரு மனிதன் கெட்டவனாகிறான். இதற்கு முதல் அஸ்திவாரமும் தூண்டுதலுமாக இருப்பது ஆரம்பத்தில் தோற்றும் கெட்ட எண்ணமே. அந்தத் தீய நினைவை முதலிலேயே உண்டாகாதவாறு மறந்துவிட முயன்றால், மற்ற கெடுதல்களும் நேராது தவிர்க்கப் பட்டுப்போம்.

நாட்களைச் சந்தோஷிப்பிக்கச் செய்வதாகும். நான் ஒரு பத்திரிகையிலிருந்தும் அந்தப் பெண்ணின் படத்தைக் கத்தரித்து வைத்திருக்கிறேன் அப்பத்திரிகையின் பத்திராதிபரைக் கண்டு விசாரித்தால், அந்த யுவதியின் இருப்பிடம் தெரிந்து விடும்.

காமினி:—நளினா! நீ ஆசை வைத்த பெண்ணின் படத்தை எடு, பார்ப்போம்.

ஃ

நளினன் பேருவகை பூத்து, பெட்டியைத் திறந்து கண்ணாடியிட்டு வைத்திருக்கும் அந்தப் படத்தை எடுத்தான். இராம பிரசாத் ஆத்திரத்துடன் அவன் கையினின்று வெடுக்கென்று படத்தைப் பிடுங்கிப் பார்த்துவிட்டுக் கல கல வென்று சிரித்துக்கொண்டு, "நளினா! இவளையா, விரும்பினாய். சரி, உன் இஷ்டம்போல் செய். எனக்கு இந்தப் பெண்ணைச் சிறு வயதுமுதல் தெரியும். எனக்கு நூறு ரூபாய் கொடுத்தால், நான் விவாகத்திற்கு ஏற்பாடு செய்கிறேன். ஆனால், பாவினியையும் நீ இரண்டாவதாக மணந்து கொள்ள வேண்டும். கலெக்டர் உத்தியோகம் பார்க்கப் போகிறவருக்கு இரண்டு பெண்டாட்டிகள் இருந்தால் அழகாயிருக்கும்" என்றான்.

அதற்குள் காமினி அந்தப் படத்தை வாங்கிப் பார்த்தாள். ஆச்சரியத்துடன் "இவளையா இவளையா நீ விரும்பினாய். இவள் ஒரு திருட்டுக் கள்ளியாயிற்றே" என்றாள். ஹேமா அந்தப் படத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு, "அண்ணா! இந்தச் சிறுக்கியின் மீதா இஷ்டப்பட்டாய். அவள் இங்கு வரட்டும், ஓங்கிக் கன்னத்தில் அறைகிறேன்" என்றாள். பாவினியும் அந்தப் படத்தைப் பார்த்து விட்டு. இவள் மிகக் கேவலமான தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவள், எனக்கும் இவளை நன்றாகத் தெரியும் என்றாள். ஹீரலால் கடைசியாக அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, அப்பா! நளினா உன் பிரியம்போல் இப்படத்திலுள்ள பெண்ணையே விவாகம் செய்து வைக்கிறேன் இவளும் நமது குலத்தையே சேர்ந்தவள். நீ ஆங்கிலப் பெண்ணை விவாகம் செய்து கொண்டு வராமல், நல்ல காலமாய்ப் படத்திலுள்ள பெண்ணை விரும்பியது எங்கள் பாக்கியமே. இது தெய்வச் செயல் என்றார்.

நளினன்:—தந்தாய்! அந்தப்பெண் எங்கே யிருக்கிறாள்? அவளுடைய பெற்றோர்கள் யார்?

ஹீரலால்:—நீ இராம பிரசாத் கேட்டபடி நூறுரூபாய் அவனுக்குக் கொடுத்து விட்டால், அவன் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்து விடுவான். கூட்டிக் கொடுப்பதில் அவன் மிகவும் கெட்டிக்காரன் என்று சிரித்தார்.

காமினீ:—குழந்தாய்! நளினா! நீ எவளிடத்திலோ இச்சை வைத்து விட்டாய் என்று நாங்கள் திகிலடைந்து விட்டோம். கடவுள்தான் எங்களைக் காப்பாற்றினார் இந்தப் படத்திலுள்ள பெண் பாவினிதான். அவளே பத்திரிகைக்குக் கதைகளை எழுதியவள். அக்கதையோடு அவ

விவாகமின்றி வாழ்கிற புருஷனும் பெண்ஜாதியுமான இருவருக்குள்ளாகவே வாழ்க்கையிலும் சேர்க்கையிலும் எப்போதும் 'புருஷன் நம்மை என்றைக்குப் புறக்கணித்த விடுவானோ, பெண்ஜாதி என்றைக்குப் புறக்கணித்து விடுவாளோ' என்கிற பெருஞ் சந்தேகம் புகுந்துகொண்டிருக்கும்.

ளது படத்தையும் சேர்த்துப் பிரசுரித்தனர். பாவினி இப்பொழுது மங்கைப் பருவ மடைந்து விட்டதால் படத்துக்கும் அவளுக்கும் சற்று பேதம் தோன்றுகிறது. நீ படத்தையும் அவளையும் நன்ருக உற்றுப் பார்த்தால் உண்மை தெரியும். இந்த மட்டில் நீ என் வயிற்றில் பாலை வார்த்தாயே! அது எனது அதிர்ஷடம்.

ஃ

நளினன் திடுக்கிட்டான். படத்திலுள்ள சுந்தரி பாவினியா? "ஆர்யாங்கனை" என்று பெயரை மறைத்து வெளியிடப் பட்டிருக்கிறது. பாவினி எங்கே கூப்பிடுங்கள் என்ருன். பாவினியை அங்கு காணவில்லை. அடுத்த நிமிஷம் பாவினி தான் எழுதிய கதைகள் உள்ள பத்திரிகைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு வந்து நளினன் முன் வைத்து நமஸ்கரித்து நின்ருள். நளினன் அவளையும் படத்தையும் பல முறை பார்த்துவிட்டு இரண்டும் ஒன்ருயிருக்கவே, பூரிப்புடன் எழுந்து, பாவினியின் கரங்களைப் பற்றித் தனது அன்னை கொடுத்த ஸ்வர்ண வளையல்களை அவள் கைகளில் இட்டுவிட்டு நாணத்துடன் உட்கார்ந்தான். காமினியின் பரவசம் சொல்லவும் கூடுமோ!

ஃ

ஹீரலால் ஒரு பெரும் விபத்து தோன்றி மறைந்தது என்று மனங் களித்தார். இராமப்ரசாத் "எங்கே எனக்கு நூறு ரூபாய்?" என்ருன். அதற்கு நளினன், நீயும் ஒரு பெரிய உத்தியோக பதவியில் இருப்பதால், நூறு ரூபாய்க்குப் பதிலாக விலை மதிக்க முடியாத ஹேமப்பிரபாவை உனக்குக் கொடுக்கிறேன். இரு விவாகங்களும் ஒன்ருக நடக்கட்டும்; தந்தாய், நான் சொன்னது தங்களுக்குச் சம்மதம்தாஞ என்ருன்.

ஹீரலால், திடீரென்று நளினன் நவின்ற மொழியைக் கேட்டு, "நளிஞ! நான் இராமபிரசாத்தைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்கவேயில்லை. உன் கவலையே எனக்குப் பெரிதாக இருந்ததால் ஹேமாவைப் பற்றி நான் எந்தத் தீர்மானமும் செய்யவில்லை. நீ ஹேமாவுக்குப் பார்த்த வரன் திவ்யமானதே. உன் வாக்கின்படி யாவும் நிறைவேறட்டும்" என்ருர். இராமபிரசாத் அடங்கா மகிழ்வுடன் "அடி! என் பெண்டாட்டி" என்று ஹேமாவின் கரங்களைப் பற்றச் சென்ருன். ஹேமா தன் தோழி பாவினியை இழுத்துக் கொண்டு ஓடிவிட்டாள். "இராமபிரசாதுக்கு எப்போதும் வாய் அதிகம்தான்" என்று நளினன் புன்னகையுடன் புகன்ருன்.

ஃ

மறு மாதத்தில் பாவினிக்கும் நளினனுக்கும், ஹேமப்பிரபாவுக்கும் இராமப்பிரஸாதுக்கும் விவாகங்கள் நடந்தேறின. இராமப்பிரசாத் தன் பட்டித்தனமான வாயைத் திறந்து கொண்டு "நளினனுக்கும் எனக்கும் இடையில் ஒருவரின் மனைவி இன்ஞெருவரின் கட்டிலில் தூங்கிஞலும் கூட சந்தேகப்பட முடியாது" என்று சிரித்தான். மற்றவர்களும் நகைத்து, "சரிதான் உன் திருவாயை மூடி

பெண்களுக்குப் பலமில்லாமற் போனபோதிலும், தந்திரத்திஞலேதான் சௌரியவான்களாகிய தம் புருஷர்களைத் தங்களுக்குக் கீழடங்கி நடக்கச் செய்துகொள்ளுகின்றனர். சமயோசித புத்தியும், தந்திரமும் இல்லாப் பெண்கள்தான் அற்ப சொற்ப குற்றங்களில் அபராதிகளும் அயோக்கிய ஸ்திரீகளுமாயாகி அவதிக்குட்பட்டுவிடுகின்றனர்.

யிரு" என்றனர். காமனியின் ஹிருதயம் ஆநந்தத்தால் பூரித்தது. ஹீரலால் யாவும் பகவத் கிருபை என்று பகவானைத் துதித்தார்.

ஃ

மேலும் இரண்டு வருஷங்கள் சென்றன. ஹீரலாலின் கடன்கள் யாவும் தீர்ந்துவிட்டன. தான் படிக்கச்சென்றதைப்பற்றி இகழ்ச்சியாய்க் கடிதம் எழுதிய தாய் மாமனுன மாணிக்கலாலுக்கு அவன் தந்த 500-ரூபாயையும் நளினன் திருப்பிக் கொடுத்துவிட்டான். ஹீரலால் இதில் அதிக மனத் திருப்தியை யடைந்து; "எவரும் என் வீட்டு அன்னத்துக்குக் காத்திருந்து புசித்தவர்களே தவிர, நான் எவர் வீட்டுக்கும் சென்று கையேந்தியதில்லை" என்று ரோஷத்துடன் புகன்றார். நளினன் இப்போது கீழ் வங்காளத்திலுள்ள பாரிசாலில் கலெக்டராக இருந்துவருகிறான். நன்றாய் முடியின் எல்லாம் நன்றே.

T. S. சங்கரலிங்கம்.

அன்பு மிகுதியால் சிலருக்கு விநோதமும் சிரிப்புமாகக் கடிதம் வரைந்தால், அதன் உட்கருத்தை யறிந்து மகிழ்ந்து தாமும் அவ்விதமே விநோதமும் நகைச்சுவையுமாம் நிருபம் விடுக்காமல், பிறர் மனம் புண்படும்படி கடின பதங்களைப் பிரயோகித்தும் கண்டித்தும் கடிதம் எழுதி விடுகிறார்கள். இதனுல் விநோதத்திலும் நகைச்சுவையிலும் அவர்களுக்கு விருப்பமில்லை போலவும், அவ்விதம் வரைவதைத் தமக்கு ஒரு தாழ்வாக எண்ணுபவர்போலவும் காண்பித்துக் கொள்கின்றார்கள். இத்தகையோரை எந்த சமயமும் புகழ்ந்து கொண்டாடிவிடுவதே அவர்களின் கோபத்துக்கு இலக்காகாமல் தப்பும் வழியாகும்.

ஆழ்வார் திருநகரி ராமஸ்வாமி கோயில் திருப்பணி.

இந்தச் சன்னதியின் சீரிய வனப்பினுல் கண்டவர் கண்ணைக் கவரக்கூடியதாகும். பூர்வகாலந்தொட்டுப் பிரசித்தமாயுள்ள இக்கோயிலில் தற்சமயம் பிரகாரத்திருப்பணி செய்யவேண்டிய தவசியமாயிருக்கிறது. இத்திருப்பணி இப்போது அரைகுறையா யிருப்பதால் ஆஸ்திக கனவான்கள் புண்ணியமான இத்திருப்பணிககு தங்களாலான பொருளுதவி செய்து ஸர்வேச்வரனது பரிபூரண கடாக்ஷத்திற்குப பாத்திரர்களாகவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் சக்தியானுசாரம் மணியாடரில் அனுப்பலாம்.

A. D. இராமாநுஜ ஐயங்கார்,

ஸ்தானிகர், ஸ்ரீ ராமஸ்வாமி கோவில், ஆழ்வார் திருநகரி.

யானை அழைத்த தெய்வம்

"மால்யானை 'வேதமுதலே' யென
அழைப்ப வந்தருளும்
செந்தாமரை"—நளவெண்பா.

வலிமை பொருந்திய யானை தாகத்தால் வருந்துகிறது. சாகுந் தருவாயிலிருந்த அவ்யானை தண்ணீர் தேங்கிய மடுவைக் காண்கிறது. மிக்க ஆவலோடு விரைந்து சென்று மடுவிலிறங்கித் துதிக்கையால் தண்ணீரை முகண்டு கொண்டிருக்கிறது. அம் மடுவில் நெடுநாள் இரையகப்படாமல் வருந்தியிருந்தமுதலையொன்றுயானையைக் காண்கிறது. பசி தொலைந்ததென்று ஓடி யானையின் காலைக் கெட்டியாகப் பற்றிக்கொள்கிறது. யானை தன் கவனமனைத்தும் தாகவிடாயைத் தணித்துக்கொள்வதிலிருந்ததால் முதலை தன் காலைக் கவ்வியது தெரியவில்லை. சிறிது காலங் கடந்து காண்கிறது. சிறு முதலையைக் கண்டு மால்யானை நகைக்கின்றது. ஆயினும், முதலை பற்றிய பிடி விடாப்பிடி. ஆகவே, கொஞ்சம் கொஞ்சமாக அப் பெரிய யானையை யிழுத்து மடுவுகுள்ளே செல்கிறது. யானை தன் பலமனைத்தும் பிரயோகித்து முதலையை அதம் செய்ய முற்படுகிறது. ஆனால், மெள்ள மெள்ள தான் தோற்றுப்போவது கண்டு தன்னை முழுவதும் அந்த முதலை வசம் ஒப்பித்துவிட்டு, இனி தன்னால் ஆவது யாதுமில்லை யென்று ஆதிமூலத்தைக் கூவியழைக்கின்றது. செந்தாமரையான் வந்து உதவுகின்றான்.

ஃ

இது பழைய கதை. 'ஆதி மூலமே' என்று யானை அழைப்பதும், கடவுள் வந்து அதனைக் காப்பதும் இந்நவீன காலத்திற்குக் கட்டுக்கதையாக யிருக்கலாம்.

ஆயினும் இக்கதையினை ஊன்றி நோக்குமிடத்து இதில் ஒரு உள்ளுறைப் பொருளிருப்பது காணலாம்.

ஃ

யானை புகுந்த மடு—என்பது வினைசூழ்ந்த இவ்வுலகத்தைக் காட்டுகிறது. அதில் வதியும் முதலை பாபம், ஆசை, காமம், குரோதம், மதம், துன்பம்—முதலிய உலகப் பிரவர்த்திகளை உணர்த்துகின்றது. மால்யானை என்பதானது—தெய்வமில்லை, பூதமில்லை யென்று மதம் பிடித்துத் திரியும்மனிதரை உருவகப்படுத்தியுளது.

மனிதப் பிரயத்தினம் பாதி, கடவுட் பிரயத்தினம் பாதி என்று பங்கு போட்டு, 'தான்' எனும் அகங்கார மமதையை யொழித்து, தன்னால் ஒன்றுமில்லை, எல்லாம் அவன்செயல்

பருவகாலம் மகா பொல்லாதது. அது குலம், அந்தஸ்து, அறிவு, ஒழுக்கம், கல்வி, மார்க்கம் யாவற்றையும் பார்க்க வைக்காது. அது ஒரு வாலிபனையாவது, ஒரு குமரியையாவது பிடித்துவிட்ட நேரத்தில் நல்ல ஜாதியென்றும், ஈனஜாதியென்றும் பார்க்கவைக்காது.

என்று அவனுடைய பாதார விந்தத்தைச் சரணாகதி யடைந்துவிடவேண்டும். காமக்குரோதாதிகள் நிறைந்த இவ் வுலகத்தால் விழுங்கப்பட்டு மீட்சி காணாதபடி நேர்ந்தபோதாவது, "ஐயோ—நாம் இதுகாறும் வீணே காலத்தைக் கடத்தினோமே! நம் மனித ஜன்மம் வியர்த்தமாயிற்றே. மீளும் கதி யாது மில்லையோ?" என்று மனதார உணர்ந்து மனம் துடிக்க வேண்டும். அவ்வாறு உணர்ந்த காலத்து மனதை ஆதிகடவுளின்பால் வைத்துவிடவேண்டும். அவ்விதம் வைத்த காலத்து இந்த லோகத்தின் பிரவிர்த்தியாதிகளை வெறுக்கவோ, தீதென நினைக்கவோ, நிந்திக்கவோ ஒண்ணாதபடி தன்னையேமறந்து தன் சுற்றமும் மறந்து, அவன் பாதார விந்தத்திலே மனம் லயித்துவிட வேண்டும். பற்றற்ற இந்நிலையில் ஒப்பற்ற அவ்வீசன்பால் மனம் வைத்து, 'எல்லாம் உன் செயல்' என்பதாயின், அவஸ்யம் அவன் அருள் கிடைக்குமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை யென்பதே இக்கதையின் உட்பொருளாகும். இறுமாப்பு, அபிமானப் பிடித்த மனிதன் வினைசூழ்ந்த வையகத்துள் புகுந்து அதற்கு இரையாகும்போதாவது உண்மையுணர்ந்து கடவுளைத் தியானித்து புனிதமாகக்கடவன் என்பதே இதன் அர்த்த விளக்கமாகும்.

P. G. குலசேகரன்.

அதைக் கடவுள் தருவாராம்.

அவசியமான செலவுகள் ஏற்பட்டு அதைச்செய்யுங்கால், அதற்கு வேண்டிய பணத்தைக் கடவுளே கொடுத்துதவுகிறார். எங்கிருந்தேனும் பண உதவி வருகிறது கடன் வாங்கினும் அதைத் தீர்த்துவிடக் கடவுள் கிருபை செய்கிறார். இது நம்பிக்கையின் ஆச்சரியமே

எழுதுதற்குப் பேனாவை எடுக்கிறோம். அது எங்கு கொண்டுபோய் முடிக்கிறதோ, அது, அதை எழுதிமுடித்தபிறகேதான் தெரிகிறது. அது வரையில் நமது பேனா போகும் வழியிலேயே (எத்தனை பக்கங்களானாலும்) நாமும் தொடர்ந்து மனோவேகத்துடன் சென்றுகொண்டிருந்து பூர்த்திசெய்யும்படியாகிறது! அதற்குப் பின்னரே, நாம் எழுதின சரக்கு நமக்குச் சொந்தமாகி, அது நன்றாயிருக்கிறதா என்று பார்க்க ஆரம்பிக்கிறோம். இவ்விதம் எழுதத் தொடங்குகையிலேயே இவ்வளவுக்குத்தான் முடிக்கவேண்டுமென்ற ஒரு அளவையும் நமது மனதுக்குள் நாம் தீர்மானித்துக் கொள்வதிலே, அந்த அளவுக்கே எழுதிமுடிக்கவும் கூடுமானதாகிறது. ஆனால், சில சமயங்களில் அந்த அளவுக்கும் மீறிவிட நேர்வது கடவுளின் செயலென்றே கூற வேண்டும். யாவும் அவர் செயலே. நாம் எழுதுதற்கு அவர் சரக்குகளைத் தர, நாம் எழுதுகிறோமே யன்றி நாமாக ஒன்றும் எழுதவில்லை.

—

மனோவியாபகத்தினால் ஒரு மனிதன் நினைக்கும் விஷயமானது, ஆயிரமைலுக்கப்பாலுள்ள இன்னொருவனுடைய உள்ளத்தில் பிரதிபாதிக்கிறதென்பது மெஸ்மெரிசம் என்னும் அவஸ்தைப் பிரயோக சாஸ்திரத் துணிவு. ஒருவர் நினைத்ததை இன்னொருவர் சொல்லுவதும், ஒருவன் நினைவை மற்றவரறியச் செய்வதும் இந்தச் சக்தியால்தானென்று அந்த சாஸ்திரிகள் கூறுகின்றனர்.

ஒரு வார்த்தையின் வலிமை.

ஆண்டவன் அருளை அடைவதற்கு நாம் அனுதினமும் துதிப்பது அழகு. பொருந்திய சில வார்த்தைகளாலாம். ஆப்த நண்பரை அன்புடன் அழைப்பதும் அதே சில வார்த்தைகளில். அன்யோன்யமாய் உள்ளவரை அகற்றச் செய்வதும் அதேமாதிரி மற்றும் சில வார்த்தைகளினாலேயே. ஆஹா! சில வார்த்தைக்களால் ஒருவன் வாழ்நாள் முழுதும் சுகமடையவும், அதே மற்றும் சில வார்த்தைகளால் ஒருவன் வாழ்நாள் பூராவும் கஷ்டமடையவும் செய்கிறதென்றால், அந்த வார்த்தைகளின் வலிமை தான் என்னே! மேல் படிப்புக்கு சீமைக்குப் படிக்கச் சென்ற தனது குமாரன் என்ன கதி ஆனானோ என்று ஏங்கி நிற்கும் பெற்றோர்கள் தந்தி வந்ததும் "பாஸாகி விட்டது" என்ற ஒரு வார்த்தையால் அளவற்ற குதூகலமடைகின்றனர். நெருங்கிய பந்து ஒருவர் "இறந்து விட்டார்" என்ற ஒரு வார்த்தையைக்கேட்டதினாலேயே ஒரு குடும்பம் அல்லோல கல்லோலப்பட நேரிடுகிறது. தனது குமாரத்திக்கு என்ன குழந்தை பிறக்கப் போகிறதோ என்று ஏங்கி நிற்கும் தாய் தந்தையர்களை "உங்கள் குமாரத்தி ஆண் குழந்தை பெற்றெடுத்தாள்" என்ற வார்தையால் சகல கவலைகளும் அகன்று அளவற்ற கர்வமடையச் செய்கின்றது. ஒரு சிபாரிசு வார்த்தைகளின் உதவியைக்கொண்டே ஒருவன் உயர்ந்த உத்யோகத்தை ஏற்று அதிகாரம் செய்வதும், அதேமாதிரி மற்றும் சில வார்த்தைகளால் ஒருவன் பெரிய உத்தியோகத்திலிருந்து தள்ளப்பட்டுப் பிச்சைக்காரனாக நேரிடுவதுமானால் அந்தவார்தைகளின் வலிமையை அளவிட முடியுமா? "மந்திரம்" என்று சொல்லும் சில வார்த்தைகளால் உலகத்தையே பிரமிக்கச் செய்யும் காரியங்களும் நடக்கின்றன. தூக்கு மரத்திற்குப் போகும் ஒருவனின் உயிர் மீட்கப் படுவதும் சில தீய வார்த்தைகள் இல்லாமையாலேயே. வார்த்தைகளை எவ்வித பிரயாசை அன்னியில் நாம் பேசினாலும் அவ்வார்த்தைகளால் நாம் அடையும் பலனானது, குபேரனாகவும், குசேலராகவும், அன்பனாகவும், வம்பனாகவும், ஆக்கிவிடுகின்றது. 'எட்மண்டாண்டீஸ்" என்ற ஐரோப்பிய இளம் வீர வாலிபன் தனது 20-வது வயதில் சுற்றிலும் சமுத்திரத்தினால் சூழப்பட்ட மலையின் பாதாள இருட்டுக்கிடங்கில், அடைக்கப்பட்டு இருந்ததற்குக் காரணம் "நெப்போலியனுக்கு உதவி செய்தான்" என்று அவன் எதிரிகள் கவர்ன்மெண்டுக்குச் சொன்ன ஒரு வார்த்தையால்தான். அதே ஜெயிலில் அடைபட்டுக்கிடந்த பாதிரியார் சொன்ன "மாண்ட்கிருஸ்டோ திவில் புதையல் இருக்கிறது, எடுத்துக் கொள்" என்ற ஒரு வார்த்தையானது ஜெயிலில் அடைபட்டுக் கிடந்த வாலிபன் தப்பி ஓடி ஐரோப்பாக்

தற்காலத்தில் முதல்தாரமாகவே கலியாணங் கட்டப்படுகிற புது மாப்பிள்ளைக ளெவரேனும் அவர்கள் அது வரையில் கட்டுக்குலையாமல் கன்னிமையாகவே யிருந்து தெய்வ சாக்ஷியாய் ஒரு பெண்ணைக் கலியாணம செய்கிறார்களென்று நம்புவதற்கிடமில்லை.

கண்டத்தையே நடுங்கச் செய்யக் கூடிய பிரபல பணக்காரனாக ஆன தற்கு காரணமாக இருந்தது. (அலெக்ஸாண்டர் டூமாஸ் எழுதிய "மாண்ட் கிருஸ்டோ"வில் காணலாம்.) வாசகர்களே! வார்த்தையின் வலிமை எவ்வளவென்பதைக் கவனித்தீர்களா? எந்த வார்த்தையிலும் நன்மை தீமைகள் அமைந்தே இருக்கின்றது.

ஃ

உங்கள் ஆப்த நண்பர் ஒருவர் இருக்கிறார்; நீங்கள் அவர்மீது அளவற்ற அன்பு வைத்திருக்கிறீர்கள். ஆயினும். உங்கள் சவுகரிய நிமித்தம் "சற்று வெளியில் போய்விட்டு வா" என்று ஒரு வார்த்தை சொன்னீர்களானால். அதைத் தப்பபிப்பிராயம் செய்து கொண்டு தங்களை வெறுத்து அலக்ஷியம் செய்து பேசியதாக எண்ணி, அது முதல் நேசத்தையே என்றுமே மறந்து விடுகிறவர்களும் உண்டு. அதிருப்தி கொண்ட ஒருவரை அழகு பொருந்திய சில அன்பான வார்த்தைகளானது திருப்தி அடையச் செய்து எப்போதுமே உங்கள் ஸ்நேகிதனாக ஆக்கிவிடுகின்றது. நேயர்களே! அழகு பொருந்திய அன்பான வார்த்தைகளுக்கு எப்போதுமே "அமிர்த குணபோதினி" இருப்பிடமாக அமைந்திருக்கின்றது. ஆகையால், நாம் அனைவரும் "அமிர்தினி"யின் அபிமானிகளாய் ஆகி அதை ஆவலுடன் வாசித்து; நம் எதிரிகளிடத்தும் இனிமையாகவே பேசி நாம் எல்லோரும் அன்பர்களாக வாழ ஆதிமத்யாந்த ரகிதனாகிய எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவானாக.

கு. பா. கே.
காசிநாதன் செட்டியார், நாகூர்.

மேலிருந்து கவனிக்கும் பொறுப்பு.

ஒரு விசேஷத்தின்போது எவ்வளவோ செலவிட்டுச் சமைப்பினும், அவற்றை ஒழுங்காய் எல்லோருக்கும் எடுத்துப் பரிமாறவும், புசிப்பவர்கள் இலையுடன் வெறுமனே காத்துக்கிடக்காமலும் உடனுக்குடன் கவனித்துத் திருப்தி செய்யவும் மேலே இருந்து பொறுப்புடன் நடத்துவதற்கு இரண்டொருவர் தேவை. முன்பே பரிமாற வேண்டியதைப் பின்பும், பின்னால் வைக்கவேண்டியதை முன்பும் வைத்து ஆபாஸப்படுத்தினால், எவ்வளவு செலவிட்டும் பயனில்லை.

ஒரு கனவான் தான் நேசித்திருந்த தாசிக்கு வீடும் வயலும் வாங்கிக் கொடுத்த பத்திரத்தில் தன்னை அந்தத் தாசி விட்டுப் பிரியவில்லை யென்று தான் நினைக்கிறவரையில் அவள் அதை அனுபவித்துக் கொள்ளலாமென்றும், அவள் தன்னைப் பிரீதிக்கவில்லை யென்று தான் நினைக்கும்போதும், பிரீதித்தே யிருந்தாலும் அவள் காலத்திற்குப் பிறகும் அந்த வீடும் நிலமும் தனக்கே சொந்தமாய்ச் சேரவேண்டியதென்றும் எழுதி ரிஜிஸ்தர் செய்தாராம். இப்படி நீங்கள் பத்திரம் எழுதுவதில் எனக்கென்ன லாபம் என்று தாசி கேட்டதற்கு, அப்படி எழுதினால்தான் நீ என்றைக்கும் என்னுடன் நேசமாயிருக்க வழி செய்யும்; மேலும் நீ அனுபவிப்பதில் எனக்கு ஸந்தோஷமே தவிர, உனக்குப் பின்னுள்ளவர்கள் அனுபவிப்பதில் எனக்கென்ன லாபம் என்றாராம்.



பெரியாரின் மொழிகள்



(லாங்பெலோவின் பொன் மொழிகள்.)

1. Every one has a romance in his own heart. All that has blessed or awed the world lies there.

ஒவ்வொருவனுடைய இருதயத்திலும் விசித்திரமான கதையொன்று அடங்கி இருக்கிறது. இவ்வுலகத்தில் பயப்படத்தக்கதும், சந்தோஷிக்கத்தக்கதுமானவைகளெல்லாம் இருதயத்தில் புதைந்திருக்கின்றன.

2. Perfect is love, and love only, Lovest thou God as thou oughtest, then lovest thou likewise thy brethren.

அன்பு என்பதொன்றே பூரணம் பெற்றது. நீ எவ்வாறு அன்பு கொள்ளவேண்டுமோ அவ்வாறு கடவுளிடம் அன்பு கொள்ளவேண்டும். பிறகு அவ்விதமே உன் சகோதரரைப்போன்ற மற்றவர்களையும் நேசித்தவனாவாய்.

3. The mind of the scholar, if you would have it large and liberal, should come in contact with other minds.

வித்வான்களுடைய மனது பெரிதாகவும், தாராள சிந்தையுடையதாகவும் இருக்கவேண்டுமானால், மற்ற புத்திமான்களுடைய மனத்துடன் கூடிப் பழகவேண்டும்.

4. Let us kneel down, and side by side; Pray; till our souls are purified, And pardon will not be denied.

நம்முடைய ஆத்மா பரிசுத்தமாகும் வரையிலும் நாம் மண்டியிட்டுக் கடவுளைத் துதிப்போம். அப்போது மன்னிப்புத் தர நமக்கு அவர் மறுக்க மாட்டார்.

5. Nor deem the irrevocable past; As wholly wasted, wholly vain; If, rising on its wreeks, at last, To something nobler we attain.

(செய்ய முடியாமல்) அழிந்து போன காரியங்களின் உதவியைக் கொண்டு சில பெருந்தகைமையானவற்றை நாம் செய்து முடிப்போமானால் நம் கைவிட்டுக் கடந்துபோன நாட்களை முற்றிலும் வீணாகவும், உபயோகமற்றதாகவும் செய்துவிட்டதாக எண்ணவேண்டியதில்லை.

6. Upward steals the life of man, As the sunshine from the wall; From the wall into the

---

எல்லா இயக்கங்களையும் ஆரம்பிக்கும்போது உயர்வான நோக்கங்களைத் தான் வெளியிடுகிறார்கள். அனுஷ்டானத்தில் யாதொன்றும் பயன்படுவதாகக் காணோம்.

sky, From the roof along the spire.

சுவற்றிலிருந்து ஆகாயத்திற்கும், வீட்டுக் கூரையிலிருந்து கோபுர வழியாகவும் சூரியனொளி நீண்டு பிரகாசிப்பது போல், மனிதனுடைய வாழ்க்கை மேல்நோக்கி எழும்புகிறது.

7. Above thy head, through rifted clouds, there shines A glorious star, Be patient, trust thy star!

உன்னுடைய தலைக்கு மேலே, இடைவெளியுள்ள மேகங்களிடையில் ஒப்பற்றதொரு நட்சத்திரம் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் பொறுமையோடிரு. அந்நட்சத்திரத்தை நம்பு.

8. Time has laid his hand, Upon my heart gently, not smiting it, But as a harper lays his open palm, Upon his harp to deaden its vibrations.

வீணை வாசிப்போன் வீணையினது நரம்பின் அதிர்ச்சியை அடக்குவதற்காக எப்படி அதன்மேல் கையை வைக்கிருனே அதேபோல் காலமானது என்னுடைய இருதயத்தின் மேல் ஓங்கி அடிக்காமல் மெதுவாகத் தன் கையை வைக்கிறது.

9. To one alone my thoughts arise, The Eternal Truth,—the Good and Wise,—to him I cry.

என்று மழியா உண்மையாகிய—நல்லதும் விவேகமும் ஆன—அப்பிரம்மத்தையே என் எண்ணங்கள் சார்ந்து நிற்கும். அவரை நினைத்தே நான் ஏங்குவது.

10. In the world's broad field of battlel, In the bivouac of life, Be not like dumb, driven cattle, Be a hero in the strife!

இவ்வுலகத்திற் பரந்த வெளிச் சண்டையிலே நீ ஊமையாகவும், ஆடுமாடுகளைப் போலவு மிராதே. அச் சண்டையில் நீ ஒரு வீரனைப் போலிரு.

11. The soul dead that slumbers, And things are not what they seem.

சோம்பேரியாக இருப்பவர்களின் உயிர் இறந்துவிட்டமாதிரியாகும். வெளிக்குத் தோன்றுவதைப்போல விஷயங்கள் இல்லை.

12. To be strong, Is to be happy!

பலசாலியாக இருப்பது சந்தோஷமாக இருப்பதுபோலாம்.

13. O life and love! O happy throng Of thoughts whose only speech is song! O heart of man! cansi thou not be, Blithe as the air is, and as free.

ஓ! வாழ்க்கையே! அன்பே!பாட்டே பிரதானமாக உள்ள ஆனந்தகரமான எண்ணங்களே! ஓ! மனிதனின் ஹிருதயமே! காற்றைப்போல சுதந்திரமாகவும், மகிழ்ச்சியுடனும் இருக்க மாட்டாயா?

P. G. குலசேகரம்,

ஆசிரியர் "எதிரொலி."

இந்தியாவி ராஜீய, பொருளாதார, கலாஞானப் புனருத்தாரணவேலைகளில் சம்பந்தம் கொண்டிருக்கவேண்டிய இலங்கையானது தன்னிடத்திற்குப் புறப்பட்டு வரும் இந்தியர்களை மண்டபம் ஸ்டேஷனில் நிறுத்திப் பரிசோதித்துப் பல பாடு படுத்துகிறது.

17-ஸம்ஸ்கிருத மகா கவிகள்

—அவர்களின் ஜீவிய வரலாறு—

(689-ம் பக்கத் தொடர்ச்சி.)

13. மயூரன்.



மயூர கவியின் காலம் கி.பி. 7-வது நூற்றாண்டின் மத்தியில் என்றும், இவர் பாணனுடைய மாமனார் என்றும் முன்னமேயே சொன்னோமல்லவா? இவர் இருந்த இடம் உஜ்ஜயினீ. இவர் மகா பண்டிதர். இவரும் பண்டிதராயிருந்து, இவரது மருமகனான பாணனும் பண்டிதரா யிருக்கவே, இவ்விருவர்களும் ஒருவர்மேலொருவர் பொறாமைப்பட்டார்கள். உடனே, அரசன் இவ்விருவர்களையும் வரவழைத்து, படிப்பில் எவர் உயர்ந்தவர். எவர் தாழ்ந்தவர் என்று தீர்மானித்துக் கொண்டு வரும்படி காச்மீர தேசத்துக்கு அனுப்பி வைத்தான். அவ்விடத்தில் அப்பொழுது ஸம்ஸ்கிருத பாஷை மிகவும் சிறப்பான பாக்கியம் பெற்றிருந்தது. இவ்விதமான கல்விச் சண்டைகளுக்கு உத்தரவு சொல்லும் திறமையைக் காச்மீர தேசத்துப் பண்டிதர்கள்தாம் அடைந்திருந்தார்கள்.

ஃ

மயூரகன், பாணன் இவ்விருவர்களையும் பரீக்ஷித்துப் பார்க்கையில், பாணன் கொஞ்சம் அதிகமாகக் கற்றறிந்தவரென்று அங்கிருந்தவர்கள் நிச்சயித்தார்கள். இவ்வித நிச்சயமானது இவ்விருவர்களுக்குள் சாதாரணமாயிருந்த மனஸ்தாபத்தைப் பின்னும் அதிகமாக்கிவிட்டது. பின்பு ஒருநாள் பாணனும், அவர் மனைவியாகிய மாயூரனுடைய பெண்ணும் ஏதோ ஒருவிதத்தில் மனவருத்தப்பட்டுச் சண்டையிட்டுக் கொண்டிருக்கையில், மயூரன் தம் பெண்ணைப் பார்த்து "சண்டி" என்று திட்டினாராம். அவள் மகா பதிவிரதையாகையால், "நீர் குஷ்டரோகியாய்ப் போகக் கடவது" என்று, தன் தகப்பனாரென்றும் பாராமல் மயூரனைச் சபித்தாள். அப்படியே மயூரன் குஷ்டரோகியானார். இப்படித் தமக்கு வந்த துக்கத்தை மாற்ற அவர் "மயூர சதகம்" என்ற சூரியன் விஷயமான ஸ்தோத்திரம் ஒன்று செய்தார்.

தொழில் முறையில் தவறு செய்வது ஒன்று; தனி மனிதன் என்ற முறையில் தவறு செய்வது வேறு. ஒருவன் குமாஸ்தா என்ற முறையில் உத்தியோகஸ்தலத்தில் தன் வேலையைச் சரிவரச் செய்து விடுகிறான். அவன் தனி மனிதன் என்ற முறையில் தன் வீட்டுச் சண்டையில் கலந்து கொள்கிறான். வீட்டாரில் சிலர் அவனைத் தூற்றுகிறார்கள். இதனால் அவனது குமாஸ்தா வேலையில் ஒழுங்கற்றவன் என்று சொல்லிவிட முடியுமா? தனி மனிதன் என்ற ஹோதாவில் ஒருவர் செய்த காரியமானது தொழில் நடத்துவதற்கு அருகதையில்லாமல் செய்துவிடுமோ? வெட்கக் கேடான காரியம் எதாவது செய்தாலன்றி அவர் தம் தொழில் செய்ய அருகதை யற்றவராய்க் கருதப்படமாட்டார்.

உடனே அவர் தேகம் முன்போலாகி விட்டது.

ஃ

இந்த சம்பவத்தைக் கண்ட அத் தேசத்தரசன் மயூரனை வரவழைத்து, அவரை மிக்க மகிமை பெற்றவர் என்று மெச்சினான். இதைப் பொறுக்காத பாணன், தம் இரு கரங்களையும் வெட்டி எறிந்து, தாம் உபாஸித்து வந்த சண்டிகாதேவியைக் குறித்து, சண்டிகா ஸ்தோத்திரத்தை மயூரன் பாடிய விருத்தத்திலேயே பாடினார். உடனே இவருக்கும் போன கைகள் திரும்பி வந்தன. இவைகளைக் கண்டு அக் காலத்திய ஜயினர்கள் இவ்வித ஸாஹஸங்கள் தங்களாலும் செய்யக் கூடும் என்று காட்டக் கருதி, தங்கள் குருவாகிய மதங்கசூரியை வேண்ட, அவர் தம் தேகத்தை 42-சங்கிலிகளால் நன்றாய்க் கட்டச்சொல்லி, 42-சுலோகங்களில் பக்தாமாஸ் ஸ்தோத்திரத்தைப் பாடினாராம். அப்போது ஒவ்வொரு சுலோகம் முடியும்போதெல்லாம் ஒவ்வொரு சங்கிலி தெறிபட்டுப் போய்விட்டதென்று சொல்லுகிறார்கள். இவ்வற்புதங்களால் நாம ஊகிக்கவேண்டியவை யாவை எனில், இம்மூவர்களும் மிகுந்த சாமர்த்திய முடையவர்களென்பதும், அத்துடன் தெய்வபக்தியில் ஸம்பூர்ணம் பெற்றவர்களென்பதும், சற்றேறக்குறைய ஒரே காலத்தில், அதாவது கி பி. 7-வது நூற்றாண்டின் மத்தியில் இருந்தவர்கள் என்பதும், இவர்களின் புஸ்தகங்களாகிய மயூர சதகம், சண்டிகா ஸ்தோத்திரம், பக்தாமாஸ் ஸ்தோத்திரம் இவைகளும் சற்றேறக்குறைய ஒரே காலத்தில் எழுதப்பட்டன வென்பதுமேயாம்.

ஃ

14. தண்டி.

பாணன் என்னும் மகா கவியின் காலத்துக்குப் பிறகு ஸம்ஸ்கிருத பாஷையில் வாசக நடை எழுதும் திறமையில் பெயர் பெற்றவர் தண்டி என்பவர். இவரது காலத்தை நிச்சயமாக உறுதிப்படுத்த ஆதாரங்களில்லை. ஆயினும், இவர் காளிதாஸனுடைய காலத்தில் இருந்ததாகவும், காளிதாஸன் தண்டியைத் தன்னைவிட உயர்ந்த கவிஎன்று மெச்சிக்கொண்டதாகவும் ஜனங்கள் சொல்லுகிறார்கள். அன்றியும், காளிதாஸன் செய்த "சேதுபந்தம்" என்ற கிரந்தத்திலிருந்து தண்டி அநேக விஷயங்களைத் தமது புஸ்தகங்களில் எடுத்துக் கொண்டிருக்கிறார். இவைகளால் நாம் தற்காலத்தில் நிச்சயிக்கக் கூடியது என்னவென்றால், இவ்விருவர்களும் சற்றேறக்குறைய ஒரே காலத்தில் இருந்திருக்கலாம் என்பதேயாம். காளிதாஸன் காலம் நாம் முன்னமேயே கூறியிருக்கிறோமாகையால், அக்காலத்திலேயே தண்டியும் இருந்ததாக எண்ணிக்கொள்ள வேண்டும். அவர் "அலங்கார சாஸ்திரம்" இயற்றி யிருக்கிறார். "தசகுமார சரிதம்" என்கிற பத்து ராஜகுமாரர்களைக் குறித்த மஹா அற்புத கதையும் அவர் எழுதியதேயாம்.

ஃ

ஜதைப் பிறப்பாயில்லாத பெண்பக்ஷியை இன்னொரு ஆண்பக்ஷி உடனே நேசியாது பெட்டை மிருகத்தை ஆண் மிருகம் மோககாலம் நேர்ந்தாலன்றி நேசியாது. அல்லாமல், மனிதரிலும்கூட ஒரு ஆண்பிள்ளையை இன்னொரு ஆண்பிள்ளைச் சட்டென நேசம் பிடித்துக்கொள்வதே வெகு கஷ்டமாயிருக்கிறது.

15 சோமதேவர்.

பாணன், தண்டி இவர்களுக்குப் பிறகு வாசக நடையில் தேர்ந்தவராக சோமதேவரைச் சொல்லலாம். இவர் "கதாஸரித்ஸாகரம்" அதாவது 'கதைகள் என்ற ஆறுகள் ஓடிப்பாயும் சமுத்திரம்' என்ற புஸ்தகத்தை எழுதியிருக்கிறார். இப்புஸ்தகமானது காச்மீர தேசத்தரசனுன ஹர்ஸ மகாராஜன் கி. பி. 1101-ம் வருஷம் சண்டையில் மாண்டு போகவே, அவனை இழந்து தவித்துக் கொண்டிருந்த அவனது தாயாகிய சூரியவதி அம்மாளைச் சந்தோஷப்படுத்தச் செய்யப்பட்ட கிரந்தம் என்பதாகத் தெரிகிறது. இது "பஞ்ச தந்திரக் கதை" களைப் போன்று ஒரு கதைக்குள் அநேக சிறு கதைகள் அடங்கி மஹா அற்புத கற்பனையுடன் விளங்குகிறது. இதைக்கொண்டு சோமதேவர் என்பவர் 12-வது நூற்றாண்டில் இருந்தவராக நாம் அனுமானிக்கலாம். இவர் செய்த கிரந்தம் மிகவும் முக்கியமானது. ஆதாரங்களுக்கு அநுகூலமான அநேக கதைகள் இவர் சொல்லி யிருக்கிறார். இப்படிச் சொல்வதில் பொய் யென்பதைக் கலக்காமல் உள்ளத்தை உள்ளபடியே எழுதி யிருக்கிறார்.

ஃ

16. பட்ட நாராயணன்.

ஸம்ஸ்கிருதத்தில் வாசக நடையில் தேர்ந்தவர்களிலே முக்கியமான சிலரைப்பற்றி ஒருவாறு கூறினேமே. இனி நாடகங்கள் செய்த சில மகா கவிகளைப் பற்றிச் சொல்லத் தொடங்குவோம்.

பாணகவி தமது சிநேகிதர்களுக்குள் நாராயணன் என்ற ஒருவரைக் குறித்ததாக நாம் முன்னமே சொன்னேமல்லவா? இவர் தாம் அந்த பட்ட நாராயணன் என்பவர். இவர் *"வேணீ சம்ஹாரம்" என்ற நாடகத்தை எழுதியிருக்கிறார். இவரது காலமும் பாணன் காலமாகையால் 7-வது நூற்றாண்டின் மத்தியாகத் தெரிய வருகின்றது.

நமது தேசத்துக்குக் கல்விக் களஞ்சியமாகிய ராஜேந்திரலால் என்ற மகா பண்டிதர் பட்ட நாராயணனை ஆதிசூர மகாராஜாவின் காலத்தில் வசித்ததாகக் கூறி யிருக்கிறார். இவ்வரசன் காலம் கி. பி. 1072. அப்படி இன்னும் ஆதாரம் ஏற்படும் பக்ஷத்தில், பாணன் தமது சிநேகிதராகக் குறித்துக்கொண்ட நாராயணன் என்ற கவி பட்ட நாராயணன் அல்லவென்று தீர்மானித்து விடலாம். 7வது நூற்றாண்டிலோ, அல்லது 11-வது நூற்றாண்டிலோ பட்ட நாராயணன் வசித்ததாக நாம் இப்பொழுது கண்டுபிடித்திருக்கும் ஆதாரங்களினல் சொல்லலாம். பட்ட நாராயணனுடைய நடை அவ்வளவு பழய நடையென்று புலப்படவில்லை யாகையால், பண்டித ராஜேந்திரலால் மித்திரர் கூறியதே சரியாக இருக்கலாம். ஆயினும், போகப்போகப் பார்ப்போம். இவர் நெடுநாளிருந்த இடம் கன்னியாகுப்ஜமாம்.

ஃ

17. ஸ்ரீ ஹர்ஷன்.

இவர் "ரத்நாவலி" என்கிற நாடகத்தையும், இன்னும் பல கிரந்

---

* "வேணீ ஸம்ஹாரம்" என்பது தமிழ் மொழி பெயர்ப்பாக "துரோபதி கூந்தல் முடித்தல்" என்று நமது பத்திரிகையில் வசன நடையாகப் பிரசுரமாகி வருகிறது.

தங்களையும் எழுதினதாக ஜனங்கள் சொல்லுகிறார்கள். இவர் காச்மீர தேசத்தரசர். கி. பி 1089-ம் வருஷம் முதல் 1101-ம் வருஷம் வரையில் அத்தேசத்தை ஆண்டவர். அநேக கவிகளுடைய சரித்திரத்தை விட, ஸ்ரீஹர்ஷனுடைய சரித்திரத்தை நிச்சயமாக ஏற்படுத்தப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளைக்கொண்டு இவரது காலத்தை நாம் நன்றாகக் கண்டு பிடிக்கலாம்.

(மற்றதில் முடிவு.)

கடவுளின் தூண்டுதல்.

நினையாத நேரத்தில் ஒரு காரியம் செய்யச் சௌகரியம் ஏற்பட்டு, அதற்கு வேண்டிய மனிதர்களும் கிடைத்து, வேலையும் தொடங்கி, பணம் போதாதே யென்று ஏங்கும் சமயம் அதற்கு வேண்டிய பணமும் கிடைத்து. எல்லாம் எளிதில் நிறைவேறிவிடுதல் கடவுளின் பெரியதொரு தூண்டுதலாகும். இது திடீரென்று ஏற்படும் சக்தி.

சில கேட்ட வழக்கங்கள்.

அற்ப விஷயங்களை ஆரம்பத்தில் அலக்ஷியம் செய்வதால் ஆவிக்கே ஹானி யுண்டாகிறது. எப்பொழுதும் கண்ணைக் கொட்டிக்கொண்டிருப்பதும், வாயால் சுவாஸிப்பதும், பற்களைக் கடிப்பதும் துர்வழக்கங்களாம். சிலர் தூங்குங்கால் வாயைத் திறந்தவண்ணமா யிருக்கின்றனர். இதனால் மூக்கின் வேலைக்குக் குறைவு. ரத்தத்துக்கு வேண்டிய சுத்தமான காற்றில் பாதிதான் உள்ளே பிரவேசிக்கும். அடிக்கடி கண்ணிமைப்பதால் பார்வை குன்றுமென்பதில் ஸந்தேகமில்லை. சிலர் நாக்கினால் அடிக்கடி உதட்டைத் தடவிக்கொள்வதுண்டு. இதுவும் கெட்ட ஸம்பிரதாயங்களில் ஒன்றும். யாதொரு காரணமுமின்றி இருமுவதும், வலியத் தும்முவதும், அனாவசியமாய் அடிக்கடி சிரித்துத் தம்மை நல்ல மனிதர்போல் காட்டுவதும் சிலருக்கு இயல்பு. நடுக்கம் கொள்ளும் தன்மையுடையோர் ஆறு குளங்களில் நீராடச் செல்வது அபாயகரம். மேற்கூறிய கெட்ட வாடிக்கைகளை ஒருமுறை அனுஷ்டித்தால் பிறகு அதை விட்டுவிட ஸாத்யமில்லாது தவிப்பார்கள். ஆயினும், எவ்விதமேனும். இவற்றை நீக்குவது நன்மையாகும்.

விருந்திடுகிற விசாரம்.

விருந்தினரே! உமக்கு விசுவாச மனம் தானா?
விருந்திடும் வீட்டின் கவலை நிலை கண்டீரா?
வீட்டுச் செலவுக்கே திண்டாட்ட கஷ்ட வேளை
நீர் வர அவர் செலவிட ஆன ரூபா எவ்வளவு
தலைக்கு 3 வீதம் 10 பேருக்கு எத்தனை இட்லி?
பலகாரம் காபியில் பாதி ரூபா ஆகிவிடுமே
நீரும் வாங்கி போட்டுக் கூட செலவிடுமே?
சிறு வரவில் வாழ் ஏழையை வருத்தலாமா?

உள்ளன்பினர் எத்தனை நாள் தங்கினும் அது ஒரு பளுவாய்ப் படாது. "இன்னும் இருங்கள்" என்று வேண்டிடுவார். பழய துஇடினும் வணங்கி உண்பர். அந்த அன்பு உம்மிடம் உண்டா?

இங்கு விருந்தில் நீர் மிகு பிரியம் நீட்டிடுவீர்.
பின் நாம் உம் வீடு வரின் வாய் உபசாரமே.
ஆபத்தில் விலகி, சிறு உதவிக்கும் மறுப்பீர்.
உண்டுவிட்டு போவதன்றி கருணை இல்லை.
தின்று பின் சொல்லாமல் நழுவுவது சரியா?
கலகம் உம் வீட்டிலானால் தங்குவது இங்கா?
பல நாளும் குந்தினால் சமாளிப்ப தெப்படி?
விருந்திட ஆகும் செலவைக் கணக்கிட்டீரா?
விருந்தில் அழிந்தபணம் திரும்பல்ஏதுவீணே
பாடுபட்டு பெற்ற பணம் விருந்தில் தீரவா?
தோட்டத்தில் முளைக்குதோ துட்டும் காசும்?
வாருங்கள் இருங்கள் ஆனால் திட்டாதீர்கள்.

திரும்பி திரும்பி வரின் செலவிட முடிகிறதா?
சிறிதுபணம் சேர்ந்திட, உடனே விருந்தா?
விருந்திட்டு கெட்டவன் பரிதாப மனிதனே!
தின்றுவிட்டுப் போனவர் காலணாவும் தரார்.
வழியில் காணில் பேசார்; முகம் மறையுமே.
விருந்து ஒரு தருமம் அதில் அளவு வேணும்.

லக்ஷ்மி அம்மாளின் குருபக்தி.

"ஞானமனுட்டான மிவைநன்றாகவேவுடைய
னான குருவை யடைந்தக்கால்—மாநிலத்தீர்!
தேனார் கமல திருமாமகள் கொழுநன்
தானே வைகுந்தம் தரும்."

துன்பமும் இன்பமுமாகிய இவ்வுலகின்கண் உண்டியே உடையே உகந்தோடும் மானிடராகிய நாம் விரும்பும் புருஷார்த்தங்கள் நான்கு. அவை அறம், பொருள் இன்பம், வீடு என்பவை. இவைகளில் கடைசி புருஷார்த்தமான அந்தமில் பேரின்ப மோக்ஷ ஸாம்ராஜ்ஜியத்தை ஸுலபமாக அடையும் வழி எது? என்பதை மேற்குறித்த பதிகம் விளக்குகிறது. அதாவது ஞானம் அனுஷ்டானம் முதலியவை நிறைந்து விளங்கும் ஒரு சற்குருவை நாம் அடைந்து, அவருடைய கிருபைக்கு நாம் பாத்திரமானால் திருமாமகள் கொழுநனான ஸ்ரீ மஹாவிஷ்ணு தானாகவே நமக்கு மோக்ஷமளிப்பார் என்பது. எனவே, ஒவ்வொருவரும் தம் ஆச்சாரியரிடத்தில் மனப்பூர்வமாக பக்தியுடையவராய் இருத்தல் வேண்டும். இதற்கு திருஷ்டாந்தமாக ஸ்ரீ ராமாநுஜருடைய சரித்திரத்திலிருந்து இங்கு ஒரு கதை எழுதப்படுகிறது.

ஃ

ஒருசமயம் ஸ்ரீ ராமாநுஜர் ஸ்ரீரங்கத்திலிருந்து திருப்பதிக்கு தம் சிஷ்யர்களுடன் யாத்திரை செய்தார். அக்காலத்தில் அவருடைய பிரதாபம் வடக்கிலுள்ள ஹிமாசலம் முதல் தெற்கே கன்யாகுமரி வரையில் பரவியிருந்தது அம்மஹானைத் தரிசிக்க லக்ஷக்கணக்கான ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆவல் உடையவர்களாக இருந்தார்கள். அப்பொழுது தனக்கும், தன் சிஷ்ய வர்க்கங்களுக்கும் தகுந்த சௌகர்யங்கள் செய்து வைக்கும்படி, தன் சிஷ்யர்களுள் ஒருவராகிய எக்ஞேசர் என்றும் கோடீஸ்வரருக்கு ஸ்ரீராமாநுஜர் சொல்லியனுப்பினார். யக்ஞேஸ்வரர் பெரும் பணக்காரராயினும் தன் குருவிடத்தில் பரிபூர்ணமான பக்தியில்லாதவனாய் இருந்தார். எனினும், மற்றவர் தன்னைப்பற்றிப் புகழ்வதற்காக ராமாநுஜரை சகல வைபவங்களுடன் வரவேற்க, எற்பாடு செய்திருந்தார் தனக்கு 'ராமாநுஜரிடமிருந்து வந்து சமாசாரம் சொல்லிய ஆள் சாப்பிட்டானா? என்று கூடக்

உலக விவகாரம் படிந்த ஒவ்வொருவருக்கும் குயுக்தியும் கூடவே சூழப்பெற்றிருப்பதால் அவர்கள் பேசும் வார்த்தைகள் மனதிலிருந்து வாயில் புறப்படுவதற்குள்ளாக, உள்ளேயே அவ்வார்த்தைகள் கூட்டியும் குறைந்தும் வெகு தந்திரமாய் வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன; இது சகஜம். ஆனால் சத்தியவந்தர்களுக்கு அதெல்லாம் வேண்டியதில்லையானதால், அவர்கள் பேச வாயெடுத்தபோதே வார்த்தையும் இருதயத்திலிருந்து யாதொரு தங்கு தடையின்றி நேரே வாய்வழியாய் ஓடி வந்துவிடும்.

கேட்கவில்லை. வந்த மனிதர் வெகு நேரம் காத்தும் பிரயோஜனப்படாமல் பட்டினியாய் ஸ்ரீ ராமாநுஜரிடம் திரும்பிவந்து தான் கஷ்டப்பட்டு வந்ததைச் சொன்னான். அம்மஹாத்மா ஒன்றும் சொல்லாமல் மௌனமா யிருந்தார். இங்கு இப்படி யிருக்க. யக்ஞேச்வரர் இராமாநுஜரை சக்ரவர்த்திகளும் கண்டு பொறாமைப் படும்படியாக. அவ்வளவு விமர்சையுடன் வரவேற்க ஏற்பாடு செய்திருந்தார். ஆனால். ஸ்ரீ ராமாநுஜர் அங்குச் செல்லாமல் சமீபத்திலுள்ள 'வரதார்யர்' என்னும் ஓர் ஏழை ஸ்ரீ வைஷ்ணவ பக்தருடைய குடிசைக்குத் தன்னுடைய நூற்றுக்கணக்கான சிஷ்ய வர்க்கங்களுடன் சென்றார் அச்சமயம் அவ்வேழைப் பிராமணர். 'பிக்ஷை'க்காக வெளியில் சென்றிருந்தார். அவருடைய மனைவியாகிய லக்ஷ்மி அம்மாள் வீட்டிலிருந்தாள்.

ஃ

இலக்ஷ்மியம்மாள் தன் கணவனின் சொல்லுக்கு மறுத்துப் பேசாமல் சற்குணங்களுடன் ஒழுகிவரும் கற்பலங்காரி. இளவயதுடன் கூடிய கட்டழகி. ஆனால், அவளுடைய ஏழ்மைத்தனமானது ஆச்சாரியரையும் அவருடைய சிஷ்யர்களையும், அவர்கள் தன் வீட்டு வாயிலில் இருந்துகொண்டு கதவைத் தட்டியும், அவர்களை வரவேற்கவொட்டாமல் தடுத்தது. அங்கங்களை மறைக்கப் போதுமான ஆடை அவளுக்கில்லை. என் செய்வது? கதவைத் திறவாமல் உள்ளேயே இருந்துகொண்டு கையைத் தட்டினாள். இச்செய்தியை ஆச்சாரியர் தெரிந்துகொண்டார். உடனே அவர் தன் மேல் அங்கவஸ்திரத்தை உள்ளே ஜன்னலின் மூலமாய் வீசி எறிந்தார். அவள் அதை யுடுத்திக் கொண்டு கதவைத் திறந்தாள்.

ஃ

வரதய்யரோ இன்னும் திரும்பி வரவில்லை. வந்திருப்பவர்களோ அதிதிகள். அதிலும் மஹாத்மாக்கள். அவர்களுக்குப் போஜனமளித்து உபசரிக்கவேண்டும். தன் கணவனோ இன்னும் வரவில்லை. வந்தால்மாத்திரம் என்ன? இவளுக்குத் தெரியாமல் அவரிடத்தில் ஒரு தம்பிடிதான் ஏது? எனவே, அவர் வரும்வரையில் அவர்கள் காத்திருந்தாலும் என்ன பயன்? எப்படியாவது வந்த மஹாத்மாக்களுக்கு ஒரு வேளையாவது அன்னமளிக்கவேண்டும். அவர்களோ நூற்றுக்கணக்கானவர்கள். லக்ஷ்மியம்மாளால் எப்படி அவர்களை யுபசரிக்க முடியும்? ஐந்து நிமிஷகாலம் அவள் தீர்க்காலோசனை செய்தாள். "வந்திருப்பவரோ எனது குருமூர்த்தி. அவர் பொருட்டாக என் உடல், பொருள், ஆவி, முதலிய எதையும் நான் தியாகம் செய்யத் தயாராக விருக்கவேண்டும். அவரை யுபசரிக்க நான் ஓர் இழிந்த காரியத்

தன் புத்தியைக்கொண்டு விருத்தியடையாதவரில்லை. அப்படி யடையாவிடில் அது அவர்கள் செய்த பாவம். மழைகண்டு விளையாத பயிரில்லை; விளையவில்லை யெனில் வைத்தவன் செய்த பாவம். விவாகம் முடித்துச் சுகியாத பேரில்லை; அங்ஙனம் சுகிக்க இயலவில்லை யெனில் அது நாயகன் செய்த பாவம். நல்ல மருந்து தந்தும் வியாதி தீராதாகில், அது நலியுள்ளார் செய்த பாவம். பிறர் கஷ்டத்தில் உதவாதவரில்லை; அங்ஙனம் உதவாவிடில் அது அவர் செய்த பாவம். கொடுக்கும் தயையுள்ளவர்கள் இல்லாமலில்லை; அப்படிக் கொடாவிடிலோ அவர்களிடமிருந்து பெறுசற்குப் பாக்கியம் செய்யாதவர்களின் பாவமாகும் என்பர்.

தைச் செய்ய யத்தனித்தாலும், அதினின்றும் நான் கட்டாயம் என் குருவின் அருளால் தப்பித்துக்கொள்வேன். ஸ்ரீ பரகாலர் (திருமங்கையாழ்வார்) ஸ்ரீ வைஷ்ணவ ததியாராதனத்திற்காக வழிப்போக்கர்களைக் கொள்ளையடிக்கவில்லையா? அவராவது தன் காரியத்தின் நிமித்தம் மற்றவர்களுக்குத் துன்பம் விளைவித்தார். ஆனால், நான் மற்றவர்க்குத் தீங்கில்லாமல், நான் மாத்திரம் ரௌரவாதி நரகங்களை அநுபவிக்க நேர்ந்தாலும் பாகவதர்களையும் என்னுடையவும், என் பர்த்தாவினுடையவும் ஆச்சாரியரான "எம்பெருமானாரை" (ஸ்ரீ ராமாநுஜருக்கு மற்றொரு பெயர்) ஆராதிப்பேன் நான் உண்மையான பதிவ்ருதையாய் இருந்து, உண்மையான குருபக்தியுடையவளாய் இருந்தால் நான் இப்போது செய்ய எண்ணியிருக்கும் தகாத காரியத்தை என் கணவர் உகக்கக் கடவர் என் குரு அத்தீய வழக்கத்தினின்றும் என்னை மீட்கக் கடவர்" என்று இவ்வாறு லக்ஷ்மி மனதிலெண்ணி அதிதிகளுக்கும் குருவிற்கும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து "ஸ்வாமிகளே! சீக்கிரம் ஸ்நாநம் ஆகட்டும். இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிவிட்டு அவ்வூரில் பெரிய கோடீஸ்வரனை ஒரு கோமுட்டி வீட்டிற்குச் சென்றாள். அங்குச் சென்று சில நிமிஷங்கள் தான் அவள் அவ்வைஸ்யனுடன் பேசினாள். ஆச்சரியம்! மறுநிமிஷம் அநேக வேலைக்காரர்கள் சமையலுக்கு வேண்டிய சகல சாமான்களையும் ஏராளமாக மூட்டைமூட்டையாக லக்ஷ்மியினுடைய குடிசைக்குக் கொண்டு சென்றார்கள்.

ஃ

சமையல் ஆரம்பமாயிற்று. வெகு சீக்கிரத்தில் முடிந்தது. ஸ்ரீ ராமாநுஜருக்கும் மற்ற அடியார்களுக்கும் பரிமாறப்பட்டது. அவர்கள் இதுவரை ஒருவரும் அம்மாதிரியான சுவையுள்ள போஜனமே சாப்பிட்டதில்லை என்னும்படியான அவ்வளவு இன்பமாக உண்டார்கள். அவர்கள் "ஹா! அமிர்தம்!! தேவாமிர்தம்!!!" என்று கூறி உண்டார்கள். பிறகு அவர்கள் வெளியிலுள்ள பெரிய அரசமரத்தின் கீழ் உட்கார, அவர்களுடன் ஸ்ரீ ராமாநுஜர் வேதாந்த சம்பாஷணை செய்துகொண்டிருந்தார்

ஃ

இச்சமயம் வரதார்யர் வந்து சேர்ந்தார். நடந்த விஷயங்களையுணர்ந்தார். ஆடினார். பாடினார், விழுந்தார். உருண்டார். ஸ்ரீ ராமாநுஜருடைய திருவடிகளைத்தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டார் இதுவரை ஸ்ரீ ராமாநுஜர் ஒன்றும் பேசவில்லை. வரதார்யருக்கு மாத்திரம் வெகு ஆச்சரியமாய் இருந்தது. தன் மனைவிக்கு உடுக்கத் துணிகூட இல்லாமலிருந்தவளுக்கு இவ்வளவு சம்பிரமமாகச் சாமான்கள் கிடைத்ததெவ்விதம்? அவளை நோக்கி திக்பிரமைகொண்டு "அடி என் கற்பலங்காரமே! நீ பதிசொல் கடவாத வஹா

நம்மிடத்திலேயே நிகழ்ப்பெறும் பலவித செய்கைகளின் விநோதங்களைப் பார்க்கிலும் வேறு விநோதம் ஒன்றில்லை. ஆதலால் நம்முடைய அநுபவ விஷயங்களையே திரும்பத் திரும்ப நம் அவதானத்துக்குக் கொண்டுவந்து அதைக்கொண்டே நாம் ஞானமடைந்தும், சந்தோஷித்தும், மனக்கவலை போக்கியும், உலக வாழ்க்கையை ஒழுங்காய்க் கடப்பதே போதுமானதாயிருக்கிறது.

பதிவ்ருதை என்பதை யுணர்வேன். நான் இல்லாமலிருந்தும் நீ எனக்கு ஒருவிதமான மனத்தாங்கலும், அப க்யாதியும் வராமல் நம் ஆச்சாரியரை எப்படி உபசரித்தாய்? காமதேனு, கற்பக விருக்ஷம் முதலியவைகள் உனக்கு அடங்கி யிருக்கின்றனவா? உன் காரியத்தால் நான் மெத்தவும் சந்தோஷமடைந்தேன். உன் செய்கை என்னை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கும்படி செய்கிறது. உனக்கிவ்வித ஐச்வர்யங்கள் ஏது? சொல்வாய்" என்று கேட்க, லக்ஷ்மி, 'நாதா! நான் நம்முடைய ஆசாரியரை உபசரிக்க ஒரு மஹத்தான பாவத்தைச் செய்தேன். அதுநிமித்தம் நீங்கள் என்னைக் கோபிக்கமாட்டீர்களென்பதை நான் நன்குணர்வேன்.

வரதய்யர்:—நீ எப்படிப்பட்ட இழிவான காரியம் நம் குருவின் பொருட்டு செய்திருந்தாலும் எனக்கு மெத்த ஸந்தோஷம் ஆனால், அக்காரியத்தினால் ஒரு ஜீவனுக்கும் ஹானி விளையக்கூடாது. சீக்கிரம் நீ செய்த காரியத்தைக் கூறு. நீ செய்த காரியத்தினால் யாருக்கேனும் தீங்கு நேரிட்டதா?

லக்ஷ்மி:—பிராணபதி! என்னுடைய எண்ணம்போலவேதான் உங்களுடையதும். கூறுகிறேன் கேளுங்கள் இவ்வூரில் கோடீஸ்வரனான ஒரு வைஸ்யன் இருப்பது உங்களுக்குத் தெரியுமே. அவன் வெகு நாளாக என்மேல் மையலுற்று தன் எண்ணத்தைக் கண்களின் மூலமாய் கோயில் குளங்களில் என்னிடம் தெரிவித்தான். அப்பொழுது நான் அவனுக்குச் சிறிதேனும் இடங்கொடுக்கவில்லை. ஸ்வாமி! இந்த என்னுடைய சரீரம் மாமிசமும் எலும்பும் கூடியது. என் பெற்றோர் எனக்கு இந்த ஜட சரீரத்தையே கொடுத்தார்கள். ஆனால் நம்மிராமாநுஜ முனியோவெனில், நமக்குள் ஆநந்தத்தையும் அமிர்தத்தன்மையும் புகுத்தியிருக்கிறார். ஆகலால், இவர் பெற்றோரினும் எவ்வளவோ மேம்பட்டவர். இவரே நமது பிரபு நமது ஈசன், நமது புண்ணிய மூர்த்தி. எனவே, இவருக்கு நாம் கடமைப்படுவதற்கு ஓர் அளவுமுண்டோ! ஆகையால் என்மேல் மையலாக இருந்த அந்தக் கோமுட்டிக்கு என் உடம்பை அடமானம் வைத்து இவைகளைப் பெற்றேன். நான் இன்றிரவு அவனுடன் கூடி என் கற்பை யிழக்கப்போகிறேன்." என்று கூறினாள். வரதார்ய்ர் அடைந்த ஸந்தோஷத்திற்கோரளவில்லை. நன்று! நன்று!! இத்தகைய குணம் வாய்ந்த மனைவியன்றோ உலகில் ஒரு புருஷன் அடையவேண்டும். என் புண்ணியமே என் மனைவியாக உருவெடுத்து வந்ததுபோலும்!" என்று கூறி அகமகிழ்ந்தார்.

ஃ

இச்சம்பாஷணைகளை ஒன்றும் விடாமல் கேட்ட ஒரு சிஷ்யர் ஸ்ரீ இராமாநுஜரிடம் தெரிவித்தார். பார்த்தார் இராமாநுஜர். தன் பொருட்டு லக்ஷ்மி செய்த்

மேற்றிசை ராஜ்ஜியங்களிலே பிள்ளைகளுக்குக் கண்டபடியெல்லாம், கொக்கு, குருவி, மாடு, மரமென்று பெயரிடுகிறது வழக்கம். இத்தேசத்திலும் அடுப்புக் கரிகட்டையைப் போன்றவர்களுக்கு மாணிக்கம், ரத்தினம், முத்து, பொன், தங்கமென்றும், கல்விச் செல்வம் படைத்தவர்கள் பிள்ளையைக் குப்பையில் போட்டு அதற்குக் குப்பனென்றும், மாரி, முனி, முதலியவர்களுக்கு அடிமையாக்கி மாரிமுத்து, முனிசாமியென்றும், சிலர் பாவாடை தொப்பை, கண்ணு, மூக்கு என்றும் பொருந்தாத பெயரிடுகிறது வழக்கம்.

துணிந்த காரியத்தையும், அதைக் கேட்ட அவள் புருஷன் பரம ஸந்தோஷ மடைந்ததையும் அவர் கேட்டவுடன் இன்னது செய்வ தென்று தோன்றவில்லை. இப்படிப் பட்ட குருபக்தியுடைய இக்கற்பலங் காரியை நாம் எவ்விதத்திலேனும் அவள் கற்புக்கு ஹானியில்லாமலிருக் கும்படி செய்யவேண்டும். எனக்கோ இவ்விஷயம் முன்பே தெரியும். இவள் புருஷன் இவள் செய்கையைப் பற்றி என்ன சொல்லுகிறார் என்றி ருந்தேன். கேட்டதும் பரம ஸந்தோ ஷமடைந்த வரதய்யருடைய பக்தி தான் என்னே!" என்றெண்ணி தான் உண்ட அன்னத்தின் சேஷத்தையும் (மிச்சம்) தன்னுடைய ஸ்ரீபாத தீர்த் தத்தையும் லக்ஷ்மியிடம் தந்து "நீ உன் சொற்படி இன்றிரவு அக் கோமுட்டியிடம் செல்லும்போது இவைகளை யவனுக்குக் கொடுத்த பிறகு அவனைக் கூடுவாய்" என்றரு ளினார்.

ஃ

இரவும் வந்தது. வைஸ்யன் காமநோயால் பீடிக்கப்பட்டு லக்ஷ்மி யின் வருகையை வெகு ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். "ஐயோ ஸ்திரீகளை நம்பலாகா தென்று சொல்லுகிறார்களே! அது நியாயம்போலும்! லக்ஷ்மி இன்னும் வரவில்லையே! என்னை ஒருக்கால் ஏமாற்றிவிட்டாளோ?" என்று அவன் மனம் குழைந்துகொண்டிருந்தான். அச்சமயம் லக்ஷ்மி வந்தாள். கோமுட்டி கணக்கில்லாத காமப் பேச்சுகளையே பிதற்றினான். ஆனால், லக்ஷ்மி தான் கொண்டுவந்த சாதத் தையும் தீர்த்தத்தையும் ஸ்வீகரிக்கும் படி சொன்னாள். அவன் அசட்டை யாய் "இதென்ன? ஆசை நாயகனுக்கு இனிய தின்பண்டங்கள் கொண்டு வருவதற்குப் பதிலாக உபயோகமற்ற நீரும் சோற்றுப் பருக்கையும் கொண்டுவந்தாயே? இதில் ஏதேனும் மருந்து கலந்து என்னை முற்றிலும் உன் வசமாக்கிக்கொள்ள உனக்கெண் ணம்போலும்! இருந்தாலுமென்ன? எப்படியும் இனி நான் உன் அடிமை தான். அப்படியே அவைகளை நான் தின்கிறேன்" என்றுகூறி அவைகளை ஸ்வீகரித்தான்.

ஃ

ஹா! ஆச்சரியம்!! மறுநிமிஷம் அவன வாயிலிருந்து யாதொரு காமப் பேச்சும் வரவில்லை. தனக்கு முன் நிற்கும் பெண் உருவத்தை ஸாக்ஷாத் ஸ்ரீ மஹா லக்ஷ்மி தேவி என்றே அவன் எண்ணினான். உடனே அவள் காலில் விழுந்து "அம்மணி! நான் கொடியவன்! பாவி! சண்டாளன். பெற்ற தாயைப் பெண்டாள நினைத்த பெரும் பாத கன். இனி நீயே என் குலதெய்வம்.

ஒரு பெரியாருடைய கட்டளையை மதித்துச் சொந்த அபிப்பிராயத்தை விட்டுக் கொடுப்பதில் அது தவறாகாது. ஆனால், அவ்விதம் அடிக்கடி மற் றொருவருடைய கட்டளையை உத்தேசித்துச் சொந்த அபிப்பிராயத்தை விட் டுக் கொடுப்பதெனில், அது தன்மதிப்புக்குக் குறைவாயும் ஒழுக்கக் கேட் டினையுண்டு பண்ணுவதாகவும் முடியும். தாயின் வார்த்தையைத் தள்ளா திருப்பதற்காகத் தனது உத்தம மனைவியைத் துஷ்டை-தான் என்று முதலில் ஒப்புக்கொண்டு அன்னையின் வாக்குக்கு மதிப்பை யுண்டாக்கலாம். ஆனால், எப்போதுமே கற்புக்கரசியான தன் மனைவியைத் துஷ்டை என்று மன ஸாக்ஷிக்கு விரோதமாகக் கூறித் தன் மாதாவைத் திருப்தி செய்ய இயலுமா? அவ்விதம் புரிவதாயின் அது ஒழுக்கத்திற்குக் கேடன்றோ?

என்னை இப்பாவத்திலிருந்து நீதான் கடைத்தேற்றவேண்டும்,'' என்று புலம்பினர். லக்ஷ்மி அவனைத் தேற்றி இராமாநுஜரிடம் அழைத்துப் போனாள். அவர் வைஸ்யனுக்கு ஞானோதயம் உண்டானதைக் கண்டு சந்தோஷித்து முக்தியை அடையும் மார்க்கத்தை யவனுக்கு உபதேசித்தார். இச்செய்தியை யக்ஞேஸ்வரன் கேள்விப்பட்டுத் தன்னுடைய கர்வத்தையும் அகங்காரத்தையும் ஒழித்து இராமாநுஜ முனியின் அருளுக்கு இலக்கானான்.

V. P. ரங்காச்சாரியர்,

டீசர், எடையார்பாக்கம்.

காண வந்தோரைத் திருப்தி செய்.

உன்னை அன்புடனே காண வந்தவர்களைத் திருப்தி செய்து சந்தோஷத்துடன் விடை பெறும்படி செய். உனக்கு நஷ்டமில்லாத நிலையில், உன்னால் செய்யக்கூடியதையும் தரக்கூடியதையும் கொடுத்து. நீ காட்டுகிற அன்பிலே பரவசப்பட்டுப்போய் என்றைக்கும் உன்னை நினைக்கும்படி செய்துவிடு. இதுதான் பெரிய சாமர்த்திய வேலை

பெண்கை வியாபார அம்மாள் வருகிறார் ஜாக்ரதை!

“புருஷர்கள் வரைக்குமா இந்த சங்கதி எட்ட வேணும்? நமக்குள் பெண்ணுக்குள் பெண் துணையாக, பெண்கை வியாபாரமாக ரகசியத்தில் நடத்திக்கொள்வோம். உன்னிடமுள்ள பணத்தை என்னிடம் கொடு, நான் நல்ல வட்டி வாங்கிக் கொடுக்கிறேன். சும்மா பெட்டியிலே கிடப்பதில் உனக்கு என்ன லாபம்” என்றும் இன்னும் பலவும் சொல்லி வீட்டுக்காரனுக்குத் தெரியாமல் பெண்களிடம் பேசிக் கிடைத்ததைப் பெற்றுக்கொண்டு போய்விடுகிற சமர்த்துள்ள பெண்கள் வீட்டுக்குள் வரும்பொழுது ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அந்த மாதிரியான விஷமச் செயல் எதையும் செய்யாதிருக்கும்படியும், உப்பு புளி மிளகாய்க்குக்கூடத் தலையை கேட்டுப் பெறும்படியும், வீட்டுப் பெண்களிடம் பேச்சு வேண்டாமென்றும் கண்டித்துச்சொல்லி, அந்தப்பெண் வீட்டைவிட்டுப் போகிறவரையில் கூடவே சுற்றி நின்று வெளியே அனுப்பித் தொலைக்க வேண்டும். இவர்கள் மிக்க ஆபத்தும் சனியனுமானவர்கள். ஜாக்கிரதை. விழித்த கண்ணுடனேயே இருங்கள்.

விவேகம் விநோதம் விசித்திரம் விகடம்	REGISTERED TRADE MARK	அநுபவம் அற்புதம் ஆச்சரியம் ஆநந்தம்

தாசி நேசர்களின் கண்ணீர்!



வெரி குட் ஸார்! வெகு நல்லது ஸார்! நிண்டா மஞ்சிதி ஸார்! ரொம்ப ரொம்ப ருசி ஸார்! என்ன அது என்கிறீர்களோ? "பட்டு அறி—கெட்டு அறி—பத்து எட்டு இறுத்து அறி" என்பதாக, விதியோடு மணமான ரதிமாதை யணுகாது விலைமாதை யடைந்து யாவும் இழந்து வீணானவர்களிலே பலர் தைமாதப் பொங்கல் தினத்தன்று ஒரு பெரிய பலே கூட்டம் போட்டார்களப்பா! அவரவர்களும் தாங்கள் தாசி வேசி மோகம் பிடித்துக் கெட்டழிந்த பாடுகளை வாய்விட்டுச் சொன்னால் துக்கம் ஆறுமென்று அப்படியப்படியே பச்சை பச்சையாக அவிழ்த்துக்கொட்டி விட்டார்களப்பா! அவ்வளவும் பெரிய அனுபவ மூட்டைகளாயிருந்ததால், விகடன் அவற்றை யெல்லாம் திரட்டி மூட்டை கட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்! அதிலிருந்தும் நல்ல படிப்பினைகளைப் பொறுக்கிக்கொண்டு எச்சரிக்கை பெறுங்கள்! சொல்லட்டுமா?—கேட்கிறீர்களா! கேளுங்கள்!

ஃ

1. மிட்டாதார்:—கிளி போன்ற தாசி—செப்பரிய கோமளத்திற்கு நாம் கொடுத்த திரவியம் கணக்கில்லாதது! அதனிமித்தம் வறுமை யடைந்து கடன்காரனாகி, அந்த பட்ட கடனுக்காக, ஒரு கடன்காரன் புலியைப்போல நம்மைச் சிறைச்சாலைக்கு இழுத்துக்கொண்டு போம்பொழுது, "மயிலுக்குச் சமானமானவளே! இப்பொழுது நேரிட்டிருக்கிற துன்பத்தை நிவர்த்தி செய் யென்று அவளுடைய காலில் விழுந்தோம். "பூமியில் புதைத்திருக்கும் திரவியத்தை, தாய்க்கிழவியாகிய ஒரு கிழப்பூதம் காத்துக்கொண்டு, எனக்குப் பிரியமானவனே, உன்னைப் பலி கொடுத்தாற் கொடுப்பேனென்று சொல்லுகிறது" என்றாள்! ஆ! எவ்வளவு இலக்கணமான வஞ்சகப் பேச்சு இது!

ஃ

2. மிராசுதார்:—நம்முடைய தாசியான திவ்யகுண பாப்பாள் நாம் இறந்தால் தானுமிறந்து போவதாக முன்னாலே சொல்லியிருந்தாள். அந்தத் தாசியின் தயவுக்காக நாம் செய்த ஒரு குற்றத்தின் நிமித்தம் அரசன் நம்மை இப்பொழுது தலை வாங்கி விடும்படி உத்திரவு செய்து கொலைக்களத்திற்கு இழுத்துக்கொண்டு போகுங்கால், நமக்குப் பின்

கூடத் தொடர்ந்து வந்த அந்தத் தாசியைப் பார்த்தோம்; உம்மிடத்தில் ஒரு கோவணம் பாக்கி யிருப்பதால் அதைக் கருதி வந்தேன்; நம்மிருவருக்கும் உடல் இரண்டானாலும் உயிர் ஒன்றே யானதால், நீர் இறந்து போனால் நானும் இறந்து போனதற்குச் சமானமே என்று கூறினாள். ஆ! என்ன இரக்கமற்ற தன்மை!

ஃ

3. ஜமீன்தார்:—உயிருக்குச் சமானமாகிய தாசி செம்பகத்தை விட்டு ஒரு பகற்காலம் பிரிந்து திரும்பி அவள் வீட்டுக்குச் சமீபத்தில் போகுங் காலத்தில், அவ்விடத்தில் எதிர்ப்பட்ட பாங்கியைக்கண்டு, நான் பிரிந்துபோனபின்பு ஆண் துணையில்லாமல் அந்த மின்னற்கொடியாள் வருத்தப்பட்டாளோவென்று கேட்டேன்; அதற்கவள், அம்பட்டனுக்கு மயிர்ப்பஞ்சமுண்டோ?—நாய்க்கு மலப் பஞ்சமுண்டோ?— போங்காணும் என்றாள். இவ்வளவுதானா அந்தத் தாசி என்மீது வைத்த ஆசை என்று திகைத்து நின்றேன்.

ஃ

4. தாசில்தார்:—உத்தியோகத்தில் நாம் தேடிய பொருள்களை யெல்லாம்தாசிதாயி அபகரித்துக்கொண்ட பின்பு நம்மைச் சேர்க்காமல் விட்டு விடவே, அந்தத் தேன்போன்ற மொழியை யுடைய தாசியைப் பார்த்து, கோவைக் கனிக்குச் சமானமாகிய வாயை யுடைய மயில் போன்றவளே, என்மேல் என் இவ்வளவு கோபமென்று கேட்டோம். அதற்கவள், தாமரைப் புஷ்பத்தில் வாசஞ் செய்யாநின்ற லக்ஷ்மியாகிய பெண்ணை முன்பு சேர்ந்திருந்தீர்; அது போகட்டுமென்று அந்தப் பிழையைப் பொறுத்துக்கொண்டு, அந்த லக்ஷ்மியை என் வீட்டுக்கு அழைத்து வைத்துக்கொண்டேன்; இப்பொழுதோவென்றால், அந்த லக்ஷ்மியின் தமக்கையாகிய மூதேவியையும் சேர்ந்து விட்டீர். ஆதலால், இனிப் பொறுக்கமாட்டேனென்று பிணங்கிக் கொண்டு கோபித்தாள். செல்வமுள்ளவனாயிருந்த பொழுது சேர்த்துக்கொண்டேன், இப்பொழுது வறுமையாளனாகி விட்டதால் சேர்க்க மாட்டேன் என்று இதற்குக் கருத்தோ என்னவோ!

ஃ

5. சிரஸ்தாதார்:—நான் வைத்திருந்த தாசியான அபரஞ்சிக்கு என் ஆஸ்தி யெல்லாம் கொடுத்துத் தரித்திரனானேன். நான் தனவானாயிருக்கையில் என்னுடைய காலைப் பிடித்து எனக்கு இதம் செய்த அந்தத் தாசியின் கைகளானவை இப்போது கழிபோல நம்முடைய முதுகில் அடிக்கின்றன. பூமியில் அன்னத்தைப் போலவும், மயிலைப்போலவும் நடனஞ் செய்து நம்மை சந்தோஷப்படுத்திய அவள் கால்கள் இப்பொழுது நம்முடைய தேகத்தில் உதைக்கின்றன. தினந்தோறும் சங்கீதங்கள் பாடி நமக்கு இங்கிதம் விளைவித்த அவளுடைய வாயானது இப்பொழுது நம்மை ஏசி இகழ்கின்றது. ஆ! நேசித்துக் கைவிட்ட சண்டாளியானாளே!

ஃ

6. அவுல்தார்:—வழக்கப்படி போகுங்காலம் தப்பி ஆசையினால்

சில வியாபாரிகள் எவரோடும் நட்பு கொள்வதில்லை. தங்களின் வியாபாரத்துக்கான வார்த்தைகளை மட்டுமே பேசிவிட்டு அவ்வளவுடன் நின்றுகொள்கிறார்கள். அவர்களின் கடையையே வாடிக்கைக் கடையாகக் கொண்டிருந்த போதிலுங்கூட அதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை.

வேறொரு காலத்தில் எனது தாசி மாணிக்கத்தின் வீட்டில் நான் போய் நுழைந்தவுடனே, சில ஆடவர் அவ்விடமிருந்து புறப்பட்டு ஓடினர். நான் அதிக கோபங்கொண்டு இவர்கள் யாரென்று கேட்டேன். மாமியாகிய தாய்க்கிழவி சீக்கிரமாக என்னிடம் வந்து, கிளிபோன்ற இந்தப் பெண்ணானவள் உம்முடைய பிரிவைச் சகிக்காமல் அழுதுகொண்டிருந்தபடியால், பாங்கிகளுக்கு உம்மைப்போல ஆண்வேஷம் போட்டு அவள் வருத்தம் தீரும்படி அவளுக்குக் காட்டினேன்; வேறொன்றுமில்லை என்றாள். என்ன சமர்த்தப்பா இது!

ஃ

7. சுபேதார்:—என்னுடைய தாசி வாணிக்கு நான் கொடுத்தது பொருள் ஒன்று மட்டுமேதான். அதற்கவள் எனக்குக் கொடுத்ததோ தரித்திரம், வியாதி, பொய் புரட்டு, மயக்கத்தை யுண்டாக்குகிற கள், காமம், கொலை, களவு, சூது, நிந்தை, மரணத்துடன் இருளோடுக்கூடிய நரகம், இன்னமும் அவளிடத்தில் நான் வாங்கிக்கொண்ட பொருள்களுக்கு ஓர் கணக்குண்டோ? இவ்வுலகினில் அறிவுள்ளவர்களில் என்னைப்போலச் சாமர்த்தியத்துடன் இப்படிப் பதில் சரக்குகளை வாங்கி வியாபாரஞ் செய்ய வல்லமை யுடையவர்கள் யாவர்? ஐயோ! நான் பாழானேனே!

ஃ

8. பேஷ்கார்:—நம்முடைய உயிருக்குச் சமானமாகிய தாசி ராஜம் நம்மிடத்தில் கொஞ்சங்கூட ஐவேஜியில்லாமல் கையிலுள்ள ஸகல பொருள்களையும் அபகரித்துக் கொண்டதாற் பசியுண்டாகி, எவ்விடத்திலிருந்து ஆகாரம் வருமோ வென்று நான்கு திக்கையும் அடிக்கடி திரும்பித் திரும்பி பார்ப்பதினால் திசைமுகனாகிய பிரம்மாவானேம். கையில் அந்தக் கொடிய தாசியானவள் போட்ட வசை திட்டுகள் தூஷணங்களான மண்ணையுண்டு மாயனாகிய விஷ்ணுவானேம். அவள் எல்லாப் பொருளையும் பறித்துக் கொண்டு கையிலே பிச்சை ஓட்டைக் கொடுத்து விட்டதால், பரமசிவனானேம். ஆதலினால், இவ்வுலகினில் நமக்குச் சமானமானவர்கள் யார்? ஒருவருமே யிரார். நம்பிய இடத்தில் நாசம் வந்ததே! ஐயோ!

ஃ

9. டிரஸ்டியார்:—கொடுமையுள்ள அந்தத் தாசி சந்திரவதனாளுடைய பிரியம் நம்மிடத்தில் நீங்கின பின்பு கோயிலில் வேலை செய்யும் பல பேர்கள் நம்மிடத்தில் வந்து உம்மிடத்தில் கூடிக்கொண்டிருக்கிற —சோற்றுக்கே திண்டாடுகிற தரித்திரமானது எந்நாளும் பிரியாமல் வாழ்ந்திருக்கக் கடவதென்றார்கள். என் அப்படிச் சொல்லுகிறீர்களென்று கேட்டோம். உயிருக்கு இன்பத்தைத் தரும் அந்தத் தாசி வீட்டில் நீர் வந்து நுழைந்தபோதெல்லாம் எஜமானராகிய உமக்குப் பயந்து கூடை, உறி, பரண், கட்டிலடி, அடுக்குப்பானை இவைகளில் ஒளிந்துகொண்டு கஷ்டப்பட்டோம் இப்போது உமக்கு டிரஸ்டி வேலை

உத்தமமான தாய் தகப்பன்களுக்கு மேலிட்ட பிரத்தியக்ஷ தெய்வம் வேறில்லை. அவர்கள் யோசனைக்கு மிஞ்சிய ஞானோபதேசம் கிடையாது. அவர்கள் உயிரோடிருக்கப்பெறும் பாக்கியத்திற்கு மிஞ்சிய மோக்ஷ பாக்கியம் வேறில்லை அவர்கள் இருக்கப்பெற்ற வீட்டுக்கு மிஞ்சிய சாலோகபதவி வேறு கிடையாது.

யும் தொலைந்து, தாசியும் உம்மை வீட்டை விட்டுத் துரத்திவிட்டதால் நாங்கள் இப்போது அங்கு பயமின்றிப் போகவர செளகரியமாயிருக்கிற தென்றார்கள். இதற்குமேல் நான் என்ன சொல்லட்டும்?

ஃ

10. ராவ்ஜி:—நம்மிடத்தில் அதிசபிரியமாயிருந்த தாசி வள்ளியினுடைய பட்சத்தைப் பரிசோதிக்கும் பொருட்டு ஒருநாள் இறந்துபோனவன்போலக் கிடந்தோம். மாமியான தாய்க்கிழவி அங்கு வந்து பார்த்து, ஒரு பாடை கட்டி அதில் அவனை எடுத்துக்கொண்டு தொலையுங்கள் என்றாள். அதற்கு அந்த அன்னத்திற்குச் சமானமாகிய தாசியோ வென்றால், பாடை முதலிய வீண் செலவு செய்வானேன்? இறந்தவனின் காலில் ஒரு கயிற்றைக் கட்டி, அடியுண்டிறந்த நாயை இழுத்துச் செல்வதுபோலக் கொண்டுபோய்ச் சேருங்கள் என்றாள். அவ்விதமே நம்மைக் கயிற்றால் கட்ட வந்தபோது தப்பித்துக்கொண்டு ஓடி வந்து விட்டோம். ஆ! எவ்வளவு மாய வஞ்சகி! காதகி!

ஃ

11. ஆச்சாரியார்:—என் சாமி! உன்னைவிட்டு ஒரு நாளும் பிரிய மாட்டேனென்று சொல்லிப் பின்பு என்னைவிட்டுப் பிரிந்த மின்னற் கொடிபோன்ற தாசி கமலத்தைப் பார்த்து, குற்றமில்லாத உன் வார்த்தை இப்போது மாறுபட்டு என்னை ஏமாறவிட்டதற்குக் காரணமென்ன வென்று கேட்டேன். அதற்கவள், நீ எனக்குத் தொகையாகக் கொடுத்த சாமியாகிய பொன்னைவிட்டு நான்பிரியமாட்டேனென்றேன்; அது உன்னைச் சொன்னதல்ல; நீ பொன்சாமியானால், இவ்வுலகத்தில் உனக்கு மாற்றென்ன ?—எடையென்ன ?—விலையென்ன ? சொல்லு என்றாள்.

ஃ

12. முதலியார்:—நமக்குள்ள திரவியத்தில் மிச்சமானதை தாசி மயிலாள் என்பவளுக்குக் கொடுத்தோம். அதற்குப் பதிலாக வாய்ச்சேடமாகிய எச்சிலை நமக்குக் கொடுத்தாள். தருமராஜனைப் போலத் திரவியத்தைக் கொடுத்தோம். நமக்கிவளும் தருமராஜனாகிய எமனுக்குச் சமானமான மார்பகத்திலுள்ள ரமணீயமான இருதனங்களைக் கொடுத்தாள். அருமையுள்ள பலியாகிய சோற்றை இவளுக்குக் கொடுத்தோம். இவளும் நமக்குப் பலியாகிய பிச்சை யெடுக்குந் தொழிலைக் கொடுத்தாள். இதைத்தவிர இன்னமும் நமக்கிவள் தரவேண்டியதும் ஒன்றுண்டோ?

ஃ

13. மிஸ்டர் பிள்ளை:—பணம் தாசிக்குச் சமானம்; நாம் ஒருவருக்கொருவர் இருக்கவேண்டிய அன்னியோன்னியமே மிகப் பெரிதென்று சொன்ன தாசி தங்கம், அப்பால் என் பொருள்களை யெல்லாம் பறித்

சொல்லத் தகாதவற்றை மங்கள மொழிகளில் மறைத்துச் சொல்லும்படி பெரியோர்கள் வழக்கப்படுத்தியுள்ளார் நாக ஸர்ப்பத்தை நல்ல பாம்பென்றும், செவ்வாய்க் கிழமையை மங்களவாரமென்றும், போகிறேன் என்பதற்குப் பதிலாக 'வருகிறேன்' என்றும், இறந்தனர் என்பதைக் கடவுளிடம் சேர்ந்தனர் என்றும் மாற்றிச் சொல்லும்படி கற்பித்திருக்கையில்—நாசமாய்ப்போக—என்றும், முண்டை யென்றும் ஈன வார்த்தைகளைக் கூறுதல் அவிவேகமன்றோ?

துக்கொண்ட பிற்பாடு என்னைச் சேரமாட்டேனென்றாள். மன்மதனுடைய உபாதை உனக்கில்லையோவென்று கேட்டேன். அதற்கவள், அந்த அறிவில்லாத மன்மதன் புஷ்பபாணத்தையே என்பேரிற் போடுகிறான்; நான் அதற்குப் பயப்படுவேனோ? பொற்காசாகிய பாணத்தை என்னுடைய இரண்டு தனங்கள் மீதும் போடுவானானால் அவன் வெற்றி யடைவானென்றாள். இவளுடைய மனம் கடினமாகிய இரும்போ யாதோ!

ஃ

14. ரெட்டியார்:—என்னுடன் கலந்த தாசி சுலாவதி அதற்காக விலை கொடுக்கும்படி கேட்டாள். என்னோடு சமானமாகக் கலந்து காம சுகத்தை யனுபவித்த உனக்கு அந்த சுகமே விலையாகாதோ என்று தெரிவித்தேன். சவத்திற்குச் சமானமாகிய என்னைப்போகித்ததற்கு விலையென்றாள். நீ சவம் எப்படியாவாயென, திருக்குறளில் விலைமாதைச் சேர்தல் பிணத்தைத் தழுவியதற்குச் சமானமென்று சொல்லப்பட்டிருக்கிறதென்றாள். இவ்விதமே சாதுர்யங் காட்டிப் பேசி என்னை மயக்கி, யாவும் பறித்துக்கொண்டு என்னைத் தெருவிலோட்டி விட்டாள்.

ஃ

15. செட்டியார்:-எனக்குப் பிரியமான தாசி சரசாங்கியின் வீட்டில் நான் நுழையும்போது அந்த வீட்டில் என் பிள்ளையினுடைய குரல் சத்தத்தைக் கேட்டு, தாழ்வாரத்தில் ஒதுங்கி நின்றுகொண்டு காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தேன். என் குமாரனைப் பார்த்து அந்தத் தாசியானவள் பணங்கொடென்று கேட்டாள். என் தகப்பன் இறந்து போனால் எல்லாப்பொருள்களு முன்னுடையது என்றான். அவன் தூங்குகிற சமயம் பார்த்து ஒரு கல்லையெடுத்து அவனுடைய தலையிலே போட்டுவிட்டு இங்கு வா; அப்படிச் செய்வதற்குமுன் நான் உன்னுடன் சேரமாட்டேனென்றாள். இதைக் கேட்ட நான் சீக்கிரமே மறுமாதம் பையனுக்கு விவாகம் செய்வித்து நல்வழியில் நிற்கச்செய்து, நானும் தாசியிடமிருந்து விலகி விட்டேன்.

ஃ

16. நாயுடு:—என்னை யல்லாமல் வேறே புருடர்களைச் சேர்ந்தறியேனென்று சொன்ன தாசி ஜீவரத்தினம் என்னைச் சேர்ந்த இரண்டு மாதங்களுக்குள் ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றாள். இது என்ன புதுமையென்று கேட்டேன். உன்னை முந்திய பிறப்பிற் சேர்ந்து இந்தப் பிள்ளையைக் கர்ப்பம் தரித்துவிட்டு, எட்டாவது மாதத்தில் இறந்துபோனேன். இப்பிறப்பிலும் உன்னையே சேரவேண்டுமென்று நான் செய்த தவத்தினால் மறுபடியும் உன்னைச் சேர்ந்து முன் குறைந்த இரண்டு மாதமும் பூரணமானவுடனே இக்குழந்தையைப் பெற்றேன் தலைவனே என்றாள். தாசிகளுடைய மாறுபாட்டின் பொய்களை என்னென்பதோ!

ஃ

ஐரோப்பிய நாட்டார் ஏதாவதொரு நூதனத்தைக் காண்பார்களாயின் அதை எப்படியாவது பிரயாசைப்பட்டுக் கொண்டுபோகிற வழக்கம் அவர்களுக்குள் உண்டு. நூதனமான பல காரியங்களைக் கண்டுபிடிக்க, செய்ய அநுபவிக்க, அவர்களுக்கிருக்கும் அபிலாஷையைப்போல் வேறெந்த வகுப்பினருக்குமிருந்ததில்லை.

17. நாயக்கர்:—என்னுடைய தாசி சண்பகம் வீட்டில் சில புருஷர்கள் போயிருக்கிறார்களென்று கேள்விப்பட்டு உண்மை யறிந்து கொள்ளும் பொருட்டு நான் அங்கு போனபொழுது தாய்க்கிழவி தன்னுடன் சேரும்படி என்னைக் கட்டாயப் படுத்தி நெருக்க, அதற்குத் தப்புவதற்காக நான் வெளியில் ஓடும்படி யானது. இது உள்ளேயிருக்கும் மாப்பிள்ளைகளை மறைக்கும் பொருட்டுத் தாய்க்கிழவி செய்த மாயமென்று பிறகு தெரிந்தது. அவளுடைய மகளை நான் காணமுடியாமலே திரும்பும்படியாயிற்று.

ஃ

18. ராஜுகாரு:—நம்முடைய கையிலுள்ள பொருள்களெல்லாம் தாசி ஜானகிக்குக் கொடுத்து செலவாகி ஏழையாய்ப் போன பின்பு, கூனர்கள், மூடவர்கள், குருடர்கள், வியாதியஸ்தர்கள், இன்னும் பல கீழ்ச்சாதியார்களுடனே தினந்தோறும் சேர்வதற்கு மனமகிழ்ந்த அந்த தாசியைப் பார்த்து இப்படிச் செய்வது கிரமமா என்று கேட்டேன். அதற்கவள் பணத்தில் குருடு, ஊமை, சாதி இழிவு உண்டோ? அந்தப் பணத்தைக் கொடுப்பவர்களே தான் மேலானவர்கள்; அதை எனக்குக் கொடுக்க சக்தியில்லாத உம்மைப் போன்றவர்களேதான் கீழ் குலத்தார்; இவ்விரண்டு விதமாகத்தான் சாதி வேற்றுமை காணலாகும் என்றாள். என்ன ஸாகஸ வார்த்தை யிது!

ஃ

19. உடையார்:—நம்முடைய கௌரவத்திற்குத் தக்கபடி உமை திருவு, சாரதாம்பாள் என்று இரண்டு தாசிகள் இருந்தனர். இருவரும் என் சொத்துகளைப் பறித்துக் கொண்டு என்னை வீட்டு வேலையாளாக்கினர். ஒரு இரவு அவர்களின் தூண்டுதலால் நான் அடுத்த வீட்டில் கன்னம்வைத்து, அத்துவாரத்தின் வழியாக விட்ட காலை அந்த வீட்டுக்காரர் கொலைவாளால் வெட்டினார்கள். கூகூ என்று கத்தினேன். அந்தத் தாசிகள் இருவரும் சீக்கிரமாக என்னிடத்திய ஓடிவந்து என்னுடைய இடையிலுள்ள வஸ்திரத்தைச் சோதித்துப் பார்த்து அதில் ஒன்றுமில்லை யென்ற கோபத்தினால், அந்த வீட்டுக்காரரைக் கூப்பிட்டு, திருடனின் தலையை வெட்டுங்கள், காலை வெட்டி என்ன பிரயோஜனமென்றார்கள். நான் பயந்து உடம்பு சாணுகும்படி குறுகினேன்!

ஃ

20. பந்துலு:—என் தாசி சாமளா என் திரவியங்களை யெல்லாம் அபகரித்துக்கொண்டு பரம தரித்திரத்தில் விட்டபிறகு, ஒருநாள் அவளைப் பார்த்து அதரபானம் கொடு என்றேன். அதற்கு எச்சிலை உமிழ்ந்

கடைக்காரன் பல சாமான்களைக் கொடுத்து அவற்றின் மொத்தம் கூட்டுகையில் ரூ. 2-8-0-க்குப் பதிலாக ரூ. 2-3-0 என்று தவறாகக் கணக்கிட்டு விடுகிறான். சாமான் வாங்கியவர்களும் அந்தத் தவறை யுணர்ந்தாலும், அதை எடுத்துக் கூறிக் கணக்கிலே விடப்பட்டுப்போன ஐந்தணாவை வலியத் தருவதிலே கடைக்காரன் என்ன விசுவாசம் காட்டிவிடப்போகிறானென்றும், ஒரு காசு குறைத்துக் கொடுக்க மனமொப்பாமல் கடுகடுப்பான கண்டிதமாய்ப் பேசுகிறவனுக்கு இது ஒரு அபராதம் விதித்ததுபோலிருக்கட்டுமென்றும் நினைத்துக்கொண்டு ரூ 1-8-0-க்குப்பதிலாக ரூ. 1-3-0-ஐயே தந்துவிட்டு ஏமாற்றிச் செல்லுகிறார்கள் சிலர்.

தாள். என்னுடன் இன்பமான ஒரு வார்த்தையாவது பேசு என்றேன். அதற்குத் துற்பாஷையான வார்த்தைகளைப் பேசினாள். என்னைச் சேரென்று வேண்டினேன். அதற்காக அவள் என்னைக் காலால் உதைத்து, கையாலடித்து, பல்லாற் கடித்து, இவைதான் இனிமையாகிய மதன நூலிற் சொல்லப்பட்ட இரு பாத தாடனம், ஆலிங்கனம், இதழ் சுவைத்தல்—என்று சொன்னாள். கையிலுள்ள பொருளைப் பறித்த பின்பு தாசிகளுடைய செய்கை எப்பேர்ப்பட்டதென்பதை இது விளக்குகிறதன்றோ?

ஃ

21. தேவர்:—பொய்யே குடிகொண்டிருக்கிற மனதையுடைய தாசிகளான விஜயா, சுப்பு, சண்முக வடிவு இவர்களின் மையலிற் பட்டு என் முன்னோர்கள் தேடிய பொருள்களெல்லாம் தொலைத்துப் பரதேசியாகி விட்டேன். அந்தத் தாசிகளின் ஏவுதற்படித் திருடின காலத்தில் வெட்டுண்டு இரண்டு கைகளையும் போக்கிக் கொண்டேன். மைபூண்ட விழிகளையுடைய என்னுடைய மனைவிக்கு இடுப்பிற் கட்டிக்கொள்ளக் கூட வஸ்திரமில்லாமல் அவளுடைய மானத்தை அவளுடைய கைகள் மூடிக்கொண்டிருக்கின்றன. ஆதலால், பிச்சைவாங்கி சாப்பிடக்கூட அவளும் கைகளில்லாதவளாகி விட்டாள். எந்தக் கையை ஏந்தி இவ்வுலகத்தில் பிச்சையெடுத்துச் சாப்பிடுவோமோ தெரியவில்லையே! ஐயோ! என்ன பரிதாபக் கண்ராவி யிது!!

ஃ

22. பிரசாத்:—நமது தாசி சுந்தரியின் வேலைக்காரிகள் நாம் பொருளுடையோமாயிருந்த காலத்தில் புலி, குதிரை, கழுதை, நாய், நரி, காடி இவைகளைப்போலவும் கத்தி நம்மைச் சந்தோஷப்படுத்துவார்கள். நம் கையிலுள்ள பொருளையெல்லாம் அந்தத் தாசிக்குக் கொடுத்து ஏழையான பிற்பாடு அந்த வேலைக்காரிகள் அந்தக் கொடிய மிருகங்களின் செய்கையை நம்மிடத்திலேயே செய்ய ஆரம்பித்தார்கள். அந்தத் தாசியோ அந்த மிருகங்களுக்கெல்லாம் இராஜாவாகிய சிங்கத்தைப் போலானாள். நாமோ அவளுக்கு இரையானோம்.

ஃ

23. சர்மா:—அழகிய புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட மெத்தையின்பேரில் நானும், நம்முடைய தாசி மனோகரியும் இருக்கும்பொழுது, மற்றொரு பரபுருஷன் வருவதைக்கண்ட அவள் விளையாடுவதுபோலத் தனது கமலமலர்க் கரங்களினால் என்னுடைய கண்களை மூடிக்கொண்டு விட மாட்டேனென்று சிரித்தாள். அடி கள்ளீ, இங்கு வந்த வேற்று மனிதன் யாரென்று கேட்டேன். ஒருவரும் வரவில்லையே; கண்ணாடியைப்போற் பிரகாசிக்கின்ற என்னுடைய கன்னத்தில் உன்னுடைய ரூபத்தையே கண்டாய்போலும் என்று சமர்த்தா

வியாபாரியாயுள்ள நண்பனைக் காண அவன் கடைக்குச் செல்லும்போதெல்லாம் அவன் தனது வியாபார மும்முரத்தில் இருக்கிறான். பேசத் தருணம் கிடைக்குமென்று நெடுநேரம் காத்துக்கிடந்தாலும் சமயப்படுவதில்லை. பிறகு தானே சலித்துச் சொல்லிக்கொள்ளாமலே கடையை விட்டு எழுந்து செல்லும்படியாக நேர்வதும் எத்தனையோ தடவைகளின் அனுபவம்தான். வியாபாரியின் சாதாரணப் பேச்சுகள்கூட எப்போதும் வியாபார சம்பந்தமாகவே காரியப் பேச்சாகவே சுயநலமாய் இருந்துகொண்டிருக்கும்.

கப் பேசினுள். இந்த சமர்த்து வார்த்தைகள் ஆடவர்களின் மதியை மயக்கி மோசம்போகச் செய்கின்றன.

ஃ

24. ஐயர்:—இராத்திரியில் என்னுடன் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த தாசி சோமவதனுள் அடிக்கடி எழுந்து வெளியிற் போவதும் வருவதுமாயிருந்தாள். அந்தத் திருட்டுத தன்மையை அறியும் பொருட்டு அவள் பின்னுலே போனேன். கொல்லையில் ஓர் வாலிபனுடன் சேர்ந்து கொண்டிருந்தாள். அதைக் கண்டவுடன் சினமிகுந்து, பாம்பைப்போலச் சீறி, அந்த வாலிபன்மீது நான் விழுந்தடித்ததினுல் மூர்ச்சையாய்க் கீழே விழுந்தான். அவனை உற்றுப் பார்க்கும்பொழுது அவன் என்னுடைய ஏகபுத்திரன் என்றறிந்து மனமுருகினேன். தாசி கமனம செய்வதில் எவ்வளவு துன்பங்களப்பா!

ஃ


25. கும்பகோணத்தையர்:—நமது தாசி கல்யாணி நம்மால் எவ்வளவோ ஆயிரக்கணக்கில் பொருள் தேடிக்கொண்டு, கடைசியில் வலியச் சண்டைக்கு இழுத்துத் துரத்திவிட்டாள். தேகமெங்கும் மேகப்புண்களாய் அழுகிக்கொண்டு கிடக்கும்படியானது. துன்மார்க்கத்துக்குத துக்கமேதான் முடிவு. இதுவரை மிட்டாதார் முதற்கொண்டு ஐயர்வரையில் இரண்டு டஜன் தாசிகளின் பெயர்களைக் கேட்டீர்களல்லவா? அத்தனை பெயர்களுடன் எனது கல்யாணியையும் சேர்த்து இருபத்தைந்தாக்கி ஒரு விருத்தமாகப் பாடுகிறேன் கேளுங்கள்.

செப்பரியகோமளந் திவ்யகுண
 பாப்பாள், சிறந்ததோர் செம்புதாயி,
ஜெகமெலாம் விலைபெற்ற அபரஞ்சி
 மாணிக்கம். சீரானவாணீராஜம்,
தப்புமுறை கொள்ளாத சந்திரவத
 னுவள்ளி சற்குணக்கமல மயிலாள்
தத்தைமொழியினையொத்த தங்கம்
 கலாவதி, சரசாங்கி, ஜீவரத்னம்
ஒப்புநடை சண்முகம் உயர்வுமிகு
 ஜானகி உமைதிருவு சாரதாம்பாள்
உத்தம மனத்தினை யுடைத்திலகு
 சாமளா, உத்கிருஷ்டமானவிஜயாள்
சுப்புசண் முகவடிவு சுந்தரி
 மனேகரி, சோமவதனுள் கல்யாணி
சுத்தமிகு மித்தனை விதத்தொளிரு
 பெண்களைச் சுகத்துட னணைப்பர்
 மாதோ!

ஃ

கேட்டீர்களா! கேட்டுத் தெளிவு பெறுங்கள்! நல்ல வழியில் நடவுங்கள்! உலகத்தாருக்கும் சொல்லுங்கள். ராம்! ராம்! சுபம்! சு'சுவாஹா!!

நாம் தீபாவளியன்று எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்கிறேம். பலவித பலகாரங்களைத் தின்கிறேம். பட்டாசு முதலிய வெடிகளை வெடிக்கிறேம் ஆயினும் "தீபாவளி" என்னும் சொல்லின் பொருளை மெய்ப்பிக்கயாதொன்றும் செய்வதில்லை. வடநாட்டினரோ அன்று நம்மைப்போலவே பலவித பலகாரங்களைத் தின்பர். பட்டாசு வெடிப்பர். பெரும்பாலும் அவர்கள் எப்பேதுமே நம்மைப்போல் எண்ணெய் தேய்த்துகொள்வதில்லை அன்று மாலையில் அவர்கள் இலட்சுமிபூஜை செய்வார்கள். பூஜை முடிந்த பின்பு கார்த்திகை தீபத்தன்றுபோல, வீட்டில் வரிசை வரிசையாக விளக்குகளை வைத்துக் களிப்பர். வியாபாரிகள் அன்றுமுதல் புதுவருஷக் கணக்குகளைத் துவக்குவர். அன்று இலட்சுமி பூஜை செய்வதால், தனவிருத்தி யுண்டாகுமென்பது அவர்கள் கருத்து. (K. S. ஸ்ரீநிவாசாசாரியார்.)



நல்லதாக இருந்த அவரின் உடம்பை நன்றாக அனுபவித்துவிட்டு, நாயகனுக்கு முன்னாலேயே நல்ல குங்குமம் மஞ்சளோடே அந்த மகாராஜிக்காரி கண்ணை மூடிக்கொண்டு போய் விட்டாள். அவள் சப்பிச்சப்பி உமிழ்ந்து விட்டுப்போன இந்த எச்சில் உடம்பைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு நான் வந்து, இந்த நோயுடம்போடும் நரைத்த தலையோடும் நல்ல சுகம் காண முடியாமலே வாடுகிறேனே; என்னை இந்தக் குழியிலே தள்ளிவிட்டார்களே—என்று ஒருத்தி விகடனிடம் வந்து சொல்லிக்கொண்டு புலம்ப, அதற்கு விகடன், வயசுக்கார மாப்பிள்ளைகளைக் கட்டிக்கொண்டவர்களில் மலடிகளாகப் பல பேர் கிடக்க, நீ நரைத்தவனைக் கட்டிக்கொண்டாலும் நாலு குழந்தைக்குத் தாயாகிவிட்ட பாக்கியம் ரொம்ப பெரிதாச்சே என்று புத்தி சொல்லிக் கண்ணைத் துடைத்து அனுப்பினனும்!

எதையும் தொடாமலே, தொட்டுத் தின்னுமலே நன்றாகச் சப்பி ருசி பார்த்து அனுபவித்து ஆசை தீர்த்துக்கொள்ளுகிற சக்தி கண்களுக்கே தான் இருக்கிறதாம்! அத்துடன் விலை கொடுத்து வாங்காமலே வாசனை ருசி பார்த்து விடுகிற திறமை மூக்குக்கு இருக்கிறதாம்!

ஒரு கடையிலே நீ அடிக்கடி போய்க் குந்திக்கொண்டு பேசப் பாத்தியதை ஏற்படவேண்டுமானால், அந்தக் கடையிலே பத்து பதினைந்து ரூபாய்க்கு சாமான்கள் கடன் வாங்கி விட்டால், எவ்வளவு நேரம் அங்கே உட்கார்ந்திருந்தாலுங்கூட கடைக்காரன் எழுந்து போ என்று சொல்ல மாட்டானும்!

மனிதர் உறுப்பிலே எதற்கு வெல்லம், கற்கண்டு என்று பேர் என விகடசித்தர் கேட்கிருர்!


இன்னும் கொஞ்சம் தோசைக்கு சக்கரை வையென்று ஒரு மளிகைக் கடைக்காரரின் மனைவியை ஒரு விருந்தாளி கேட்டதற்கு, முந்தியே அரைப்பலம் சர்க்கரை வைத்திருக்கிறேனே யென்று மளிகைக் கடையின் கணக்கைப் பேசினளாம்!

ஒருவன் அழகும் சிவப்புமாயிருந்து கையிலே மோதிரமும் காப்பும் போட்டுக்கொண்டிருந்தால், அதைக் கண்டு மயங்கி விடாமலும், தன் சரக்கை அவனுக்கு விலை குறைத்துக் கொடுத்து ஏமாறிப் போகாமலும், எதையும் விட்டுக் கொடுத்து விடாமலே பேசி, சரியான காசும் விலையும் வாங்குவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து, தன்னை அந்த அழகுக்கார டம்பன் ஏய்த்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டுமாம்!

ஒரேயொரு புஸ்தகம் வாங்கிக் கொண்டு கமிஷன் தள்ளிக் கொடுக்கும்படி கேட்ட கெட்டிக்காரனுக்கு, மொத்தமாய்ப் புஸ்தகங்கள் வாங்குகிறவர்களுக்குப், வியாபாரிகளுக்கும் தான் கமிஷனை தவிர, ஒரு புஸ்தகம் வாங்கிகொண்டு கமிஷன் கேட்கிறவனுக்குக் கன்னத்திலே அறைகிற அறைதான் கமிஷன் என்று ஒரு புஸ்தக வியாபாரி பதில் சொன்னாராம்!

ஒரு வீட்டிலே தான் போயிருந்த போது, அங்கே தான் செய்து கொடுத்த சின்ன வேலைக்கு மட்டும் பெரிய கணக்குப்போட்டு நினைத்துக் கொள்கிறதாம்! அங்கே மூக்கு நிறையத் தான் விழுங்கியதற்கு எவ்வளவு செலவு அந்த வீட்டாருக்கு ஆகியிருக்குமென்பதை மட்டும் எண்ணிப் பார்த்துக்கொள்ள நேர மிருப்பதில்லையாம்!

வோட் பெறுகிற தவறு வழி.



வோட் ஏஜண்டு:—தங்களை முட்டையாரவர்கள் தன் பக்கத்துக்கு வோட்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு மோட்டார் அனுப்பி யிருக்கிறார்கள். தயவு செய்து சீக்கிரம் புறப்படுங்கள்.

வோட் போடுகிறவர்:—நான் எதற்காக வோட் போடவேண்டுமென்று எனக்கு ஒன்றும் தெரியவில்லையே. முட்டையாரவர்கள் தனக்குப் புது கௌரவம் உண்டாவதற்காக சொந்த நன்மையை உத்தேசித்து அபேக்ஷகராக நிற்கிறார். அதில் எனக்கு என்ன நன்மை? அவருக்கு என் வோட்டைத் தருவதில் நானோ, உலகமோ பெறுகிற லாபம் எதும் காணோமே?

வோட் ஏஜண்டு:—முதலியாரவர்கள் பொது ஜனங்களுக்குப் பாடுபடுவதற்காகவே ஒரு அபேக்ஷகராக முன் வந்திருக்கிறார். ஆனதால் தாங்கள் பொதுஜன நன்மையை நாடி அவருக்கு வோட் கொடுத்தால், அவர் மனஸ்பூர்வமாய் சட்டசபையில் உழைப்பார்.

வோட் போடுகிறவர்:—முட்டையாருக்குப் போட்டியாக நிற்பவர்களும் பொதுஜன நன்மையை உத்தேசித்தே ஒரு அபேக்ஷகராகத் தாங்கள் நிற்பதாகச் சொல்லுகிறார்கள். ஆதலின், எவருக்கு வோட் கொடுப்பதென்று தெரியவில்லை.

வோட் ஏஜண்டு:—அவர்கள் சொல்வதை நீங்கள் நம்பவேண்டாம். அவர்கள் சுத்த மோசக்காரர்கள் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டால் ஜனங்களுக்கு ஒரு நன்மையும் செய்யமாட்டார்கள்.

வோட் போடுகிறவர்:—இப்படியே அவர்களும் சொல்லுகிறார்கள். முட்டையாரை நம்பவேண்டாமென்றும், மோசக்காரரென்றும், ஜனங்களுக்கு ஒரு நன்மையும் செய்ய மாட்டாரென்றும் கூறுகிறார்கள்.

வோட் ஏஜண்டு:—அந்தப் பேராசைப் பொய்யர்களை ஒதுக்கித் தள்ளுங்கள். முட்டையாரவர்களுக்கே வோட் கொடுங்கள்.

இலங்கைக் கவர்ன்மெண்டார் தங்களின் சர்க்கார் சிப்பந்திகளிடத்தில் பின்வருமாறு வாக்குமூலமும் கையெழுத்தும் வாங்குகிறார்கள்:—"இந்த வாக்குமூலத்தில் கையொப்பமிடும்பொழுது எனக்குக் கடனில்லை. இனி, நான் கடைகளில் கடனுக்கு சாமான்கள் வாங்குவதில்லை. அல்லது, எனக்காகவோ, அன்றி வேறு எந்த நபருக்காகவோ பிராமிசரி நோட்டுகளில் கையொப்பமிட்டு நான் கடன் வாங்குவதில்லை." சர்க்கார் ஊழியர்களில் ஒரு பகுதியினர் பெரும் கடன்காரர்களா யிருப்பதே இவ்விதம் வாக்குமூலம் வாங்குவதற்கு ஏற்பட்ட காரணமாகும்.

வோட் போடுகிறவர்:—அவர்களும் இப்படியே அந்தப் பொய்யர்களை ஒதுக்கித் தள்ளுங்களென்றும், தங்களுக்கே வோட் செய்யும்படியும் கட்டாயப் படுத்துகிறார்கள். என்ன செய்வது?

வோட் ஏஜண்டு:—இப்படிப் பேசினால் நேரமாகிறதே. சீக்கிரம் புறப் படுங்கள்.

வோட் போடுகிறவர்:—நான் தங்களைக் காத்துக்கொண்டிருக்கும்படி சொல்லவில்லையே. தாங்கள் ஏதோ பேசினதால் நானும் பதில் சொன்னேன். தங்களை என்னிடம் வருமாறு நான் அழைக்கவில்லையே. தாங்கள் சுகமே போய் வரலாம். என்னால் எந்தத் தாமதமும் இல்லை. நீங்கள் தான் வலிய வந்து பேசி என் சொந்த வேலைகளைச் செய்ய முடியாமல் பொழுதை வீணாக்குகிறீர்கள்.

வோட் ஏஜண்டு:—தயவு செய்து கோபித்துக் கொள்ளாதீர்கள். இது பொது விஷயம் என்பதைத் தாங்கள் கவனிக்கவேணடும். முட்டையாரவர்கள் பொதுஜன நன்மைக்குப் பாடுபடுகிறவர். தங்கள் வோட்டை அவருக்குத் தருவதே நியாயம்.

வோட் போடுகிறவர்:—பொதுஜன நன்மை என்பது வெளிப்பகட்டு தான். ஒவ்வொருவரும் தங்களின் சொந்த கௌரவத்திற்கும் புதுப் பிரக் கியாதி தேடுவதற்குமே பாடு படுகிறார்கள். அது அவர்கள் தேடுகிற லாபம். நீங்களோ வோட் சேர்த்துத் தர ஏஜண்டாயிருந்து அதற்குத் தகுந்த பணம் பெற்று உமக்கு லாபம் தேடிக்கொள்கிறீர். கடைசியாக, வோட் தருகிற எனக்கு என்ன லாபமய்யா? நான் ஏமாறிச் சந்தியில் போவதுதான் லாபமா?

வோட் ஏஜண்டு:—அப்படியானால் தங்களுக்குப் பணம் வேண்டுமா? இந்தாரும் ஐந்து ரூபாயைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

வோட் போடுகிறவர்:—பக்கத்து வீட்டுக்காரருக்குப் பதினைந்து ரூபாய் கொடுத்திருக்க, எனக்கு மட்டும் ஐந்து ரூபாயா? உங்கள் முட்டையார் எந்தப் பொதுஜன நன்மைக்காக அபேக்ஷகராக நிற்கிறார்? அவர் தமது சொந்த மனைவியைத் தள்ளிவிட்டு ஒரு தாசியுடன் இருக்கிறார். தனது மனைவிக்கே நல்லது செய்யாதவரா பொதுஜனங்களுக்கு நன்மை செய்யப் போகிறார்?

வோட் ஏஜண்டு:—சரி, வீண் வார்த்தைகள் எதற்கு? பத்து ரூபாயைப் பெற்றுக்கொண்டு உடனே புறப்படுங்கள்.

வோட் போடுகிறவர்:—நான் முட்டையாரைப் பற்றிச் சொல்லியதில் ஒரு எழுத்துகூட வீணானதல்ல. பம்பாயில் ஆனரபிள் கோகலே அவர்கள்

கடையில் சாமான் வாங்குகையில் ஒரு பலம் எடைக்குப் படிக்கல்லைப் போடாமல் 6-காலணாக்களைப்போட்டு நிறுத்திக்கொடுப்பது முழுமோசமாகும். காலணாக்கள் பெரும்பாலும் தேய்ந்திருக்குமாதலின் எடை குறைவேற்படும். விக்டோரியா, எட்வர்ட் அரசர் முகங்கள் பதிப்பித்த காலணா அதிக கனமுள்ளது அதற்குப் பிறகு வந்த காலணாக்கள் மெல்லியதாகும். ஆதலின், படிக்கல்லையே போட்டு நிறுத்தும்படி கேட்கவேண்டும். காசுகளைப் போட்டு நிறுத்தினால் கால்பாகம் எடை நஷ்டமாகும்.

ஐந்து தடவையிலும் போட்டியின்றி சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார். அந்த மகானைப் போன்றவர்களுக்கு வோட் தந்தால் பொதுஜன உபகாரமாகும். முட்டையாருக்குத் தந்து பிரயோஜனமென்ன? பக்கத்து வீட்டாருக்குப் பதினைந்து ரூபாய் கொடுத்துவிட்டு, எனக்குப் பத்து ரூபா தந்து ஏமாற்றப் பார்த்தால் நான் என்ன இளிச்சவாயனென்று எண்ணிவிட்டீரா? அதோ பாரும். பேன்ஞச்சி ரெட்டியாரின் மோட்டார் என்னை அழைத்துப்போக வருகிறது அவர் எனக்கு இருபத்தைந்து ரூபாய் முன்பே கொடுக்கவந்தார். அவர் தர்மவான். நான் பணம் வாங்கமாட்டேனென்று சொல்லியும், வற்புறுத்தி என் குமாரனிடம் கொடுத்துவிட்டுப்போய் விட்டாராம். நான் அதைத் திருப்பிவிட்டு, அவருக்கே வோட் செய்யத் தீர்மானித்து விட்டேன். ஆனதால் நீங்கள் போய் வரலாம். உங்களுக்கும் நேரமாகிறதல்லவா?

வோட் ஏஜண்டு:—அந்த இருபத்தைந்து ரூபாய் நான் கொடுக்கிறேன். புறப்படுங்கள்.' இந்தாருங்கள் இருபது ரூபாய். பிறகு ஐந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

வோட் போடுகிறவர்:—உங்களுக்கு ஒரு சங்கதி சொல்ல விரும்புகிறேன். ஒரு மனுஷ்யன் தனக்கு ஒரு காரியம் ஒருவரால் ஆகவேண்டியிருக்கிறபோது எவ்வளவு பணமானாலும் எண்ணிப் பாராமல் அவருக்குச் செலவிடுவான். அப்போது கொடுத்தால் தான் கொடுத்தது. காரியம் ஆன பிறகோ ஒரு காசும் கொடான். ஏதோ இனாமாக இலவசத்திற்குத் தருவது போல எண்ணுவான். அல்லது தராமலே நாளை நாளையென்று ஏமாற்றி விடுவான். நீங்கள் எனக்கு இனாமாகக் கொட்டியளக்கவில்லை. உங்கள் சுய காரியத்துக்கே தருகிறீர்கள். ஐந்து ரூபாய் பிறகு தருவதாகச் கூறுகிறீர்களே! அரைக்காசு பிறகு தருவீர்களா? அது ஏது? இல்லவேயில்லை. முதவிலேயே இப்படி ஏமாற்றப் பார்க்கிறவர்கள்தானா பொதுஜன நன்மைக்குப் பாடுபடப் போகிறார்கள்? பேஷ்! நல்ல சாமர்த்தியசாலிதான் நீர்.


வோட் ஏஜண்டு:—சரி, இந்தாருங்கள் இருபத்தைந்து ரூபாய் கைநிறையப் பெற்றுக்கொண்டு புறப்படுங்கள்.

வோட் போடுகிறவர்:—நூறு ரூபாய் தந்தாலும் முட்டையாருக்கு வோட் தரமுடியாது. நீங்கள் போகலாம்.

வோட் ஏஜண்டு:—முட்டையாருக்கும் வோட் செய்யவேண்டாம். பேன்ஞச்சிக்கும் வோட் போடவேண்டாம். சும்மா இருந்து விடுங்கள். அதுவே சரி. அதையாவது செய்யுங்கள். இந்த ரூபாயையும் வைத்துக்கொள்ளுங்கள்.

வோட் போடுகிறவர்:—எனக்குச் சொந்த அறிவு இருக்கிறது. உமது யோசனையோ, பணமோ தேவையில்லை. நான் பணத்தைப் பார்க்காமல் பொதுஜன நன்மைக்கு உழைப்பவர் எவர் என்பதையே கவனிக்கிறேன். என்னுடைய வோட்டின் மதிப்பையும் அருமையையும் நான் அறிவேன். என் வோட்டைப் பணத்திற்கு விற்று வீணாக்க முடியாது. நீர் போகலாம்.

(வோட் ஏஜண்டு வெட்கிச் செல்லுகிறார்.)



கோயில் என்பது அர்ச்சகரின் வியாபார சாலையா?

கோயிலே அர்ச்சகர்கள் தங்களின் பிழைப்புக்கான இடமாக நினைத்துச் செய்யும் அநியாயங்கள் சகிக்கொணாது. எதிலும் பணம் தேடுவதிலேயே அவர்களின் திருஷ்டி. ஒரு ரூபாய் கொடுத்து பொங்கல் செய்து ஸ்வாமிக்கு ஆராதனை செய்யச் சொல்லின் அந்த ரூபாயில் பாதியைத் தாங்கள் எடுத்துக் கொண்டு பாக்கிப் பணத்தில் யாவற்றையும் முடிக்கிறார்கள். அந்தப் பொங்கலில் நெய்யே இல்லை. நெய்க்குப் பதிலாகச் சஞ்சிமயமாயிருக்கிறது. முந்திரிப்பருப்பு, திராக்ஷைப் பழம் வாங்கித் தந்தும் அதில் போடவேயில்லை. புண்ணியம் தேடச் சென்றவர்களின் வயிறு எரிகிறது. இரண்டு தேங்காயும் ஆறு மலை வாழைப்பழமும் வாங்கித் தந்து திருவலி செய்யச் சொல்லின், ஒரு தேங்காயைமட்டும் துருவி ஒரு பழத்தைப் போட்டுப் பிசைந்துவிட்டு பாக்கிப் பழங்களை மறைத்துவிடுகிறார்கள். காலணா ஏலரிசி வாங்கிக் கொடுத்தும் அதைப் போடுவதில்லை. ஒரு அணாவுக்குப் புஷ்பம் வாங்கித் தரின் அதை ஸ்வாமிக்குச் சாத்திப் பிறகு அதில் கொஞ்சமும் தராமல் வேறு எந்த வாடின புஷ்பத்தையாவது கொடுத்துவிட்டு, நாம் கொடுத்த புஷ்பத்தைப் பிறகு எடுத்துத் தங்களின் சொந்தத்துக்கு உபயோகித்துக் கொள்கிறார்கள்.

ஃ

ஒரு படி சடலை வாங்கித் தந்து மேல் செலவுக்கு ஒரு அணாவும் கொடுத்து சுண்டல் செய்து ஸ்வாமிக்கு ஆராதனம் செய்யும்படி வேண்டினால், அரைப்படி கடலையை தங்களின் வீட்டுக்காக எடுத்து வைத்துவிட்டு, பாக்கி அரைப்படிக் கடலையில் சுண்டல் செய்து, அதிலும் கொஞ்சம் எடுத்துக்கொண்டு பாக்கியைத் தருகிறார்கள். அந்த சுண்டலில் எண்ணெய் வாசனையே காணோம். எங்கேயோ இரண்டொரு மிளகாய் அகப்படுகிறது. சுண்டல் வேகவேயில்லை. சரியாக வெந்தால் பிறகு அதிகம் ஆகிவிடும் என்பது அர்ச்சகரின் எண்ணம் போலும்!

ஃ

இதன்றி அரையணா கற்பூரம் வாங்கித் தந்திருக்கையில், அதை ஸ்வாமிக்கு ஹாரத்தி எடுத்தபின்பு பாதியிலேயே அணைத்துவிடுகிறார்

சில சமயம் சதுப்பு நிலங்களியே புல் பூண்டுகள் அழுகி அதிலிருந்து ஒருவித (காஸ்) காற்றுண்டாகி அது தரையினின்று புறப்பட்டுப் பிராண வாயுவோடு கலந்து அக்கினியைப்போல குபீல் குபீல் என்று பற்றி யெரிகிறது வழக்கம். அதைக் கண்டு தெரியாத ஜனங்கள் கொள்ளிவாய்ப் பிசாசு என்று பயப்படுகிறதுண்டு.

கள். இது அபசகுனம் போலாகிப் பக்தர்கள் மனதுக்கு வேதனையாகிறது. முழு கற்பூரமும் எரிந்தாலென்ன? பக்தியுடன் கோயில் தரிசனத்துக்குச் சென்று இந்த அர்ச்சகர்களின் வியாபாரத்ஸதக் கண்டு உள்ளம் நொந்து திரும்பவேண்டியதாகிறது. கோயிலின் விளக்குக்காகக் கொடுக்கும் நெய்யும் எண்ணெயும் பாதி கோயில் குருக்களின் வீட்டுச் சமையலுக்குப் போய்விடுகின்றது. இந்த அர்ச்சகர், குருக்கள் என்பவரிடத்தில் ஒரு புண்ணியமுமில்லை. மண்ணுமில்லை நம்மைப் போன்ற சாமான்ய மனிதர்களே. அவர்கள் செய்கிற வேலைக்குக் கூலி கொடுப்பதாக நினைப்பது சரியேயன்றி, புண்ணியம் வருமென்றெண்ணிக் கொடுக்கக் கூடாது. நமக்கு வேண்டியது ஸ்வாமி தரிசனமே. அவ்வளவுடன் திருப்தி பெறுவோம். அர்ச்சகர்களிடம் புண்ணிய மூட்டை யிருக்கிறதென்று ஏமாற வேண்டாம்.

தேச ஸஞ்சாரி.

II

ஆங்கிலப் புது வருடப் பிறப்பைக் கொண்டாடல்.

அனுபவ ஆசிரியரவர்கட்கு,

என் உள்ளக் கருத்தை "அமிர்தினி"யின் மூலமாக என் நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வழக்கம்போல் என் நேயர்கள் சிலரிடத்திருந்து புது வருட வந்தனக் கடிதங்களை யான் பெற்றுள்ளேன். யானும் அந்தப் புது வருட மங்கள லிகிதங்கள் கண்டு இன்புறுகின்றேன். அவற்றிற்குப் பிரதி வந்தனம் செலுத்தக் கடமை பூண்டிருப்பினும், ஒன்றுமட்டும் சொல்ல என் உள்ளம் முந்துகின்றது. நாம் கிறிஸ்துவர்களன்று. ஆங்கிலக் குடைக் கீழ் அடி பணிந்து நிற்கிறோமெனினும், ஓர் கூட்டத்தார்க்குகந்த கொண்டாட்டத்தை நாமும் கொள்வதாயின், அது நம் அடிமையின் தலையை இன்னும் இறக்கி வைப்பதாகின்றது. இது ஓர்ந்தே. இதற்கு முன்னர் என்னிடம் திகழ்ந்திருந்த இந்தப் பழக்கத்தை—ஆங்கிலப் புது வருடத்தைக் கொண்டாடுவதை 1928-முதற் கொண்டு விட்டுவிட்டேன். நம் வீட்டில் பிறந்த தெலுங்கும், கவின் மலையாளமும், தெலுங்கும்—அதற்குரிய புத்தாண்டுகள் பிறக்குங்கால்—அதனை நாம் ஜாதி—மத—சமய வேற்றுமையில் எள்ளி அலக்ஷியமாக வைக்கும்போது—ஒரு தமிழன் தெலுங்கு வருடப் பிறப்பையோ, ஒரு மலையாளி தமிழ் வருடப் பிறப்பையோ கொண்டாடாதிருக்கும் போது—ஜாதி—மதம்—தேசம்—வர்ணம்—இரத்தம்—நடத்தை—ஆசாரம்—ஆகியவைகளுள் முற்றும் வேறானவரின் வருடத்தை நம்மதாகக் கொண்டு நம் நண்பர்களாயினோர்க்கு அதுகாலை புதுவருட மங்களம் செலுத்துவது சற்றும் ஒவ்வாதென்பது என் தாழ்மையான அபிப்பிராயம். சிறியதிலிருந்தே பெரியது. ஆகவே, இச்

மனோ ஆகர்ஷணத்தின் செய்கை யாது? அது ஒருவன் பிறரிடம் வசீகரப்பட்டுவிடும்படி செய்கிறது—தூண்டுகிறது. அந்தப் பிறர் அவனை விலக்கித் தூரமானாலும், இவன் அவர்களைப் பிரிய மனமில்லாமல் அவர்கள் செய்யும் இகழ்ச்சிகளுக்கெல்லாம் சகித்து அவர்களையே சுற்றிக்கொண்டு நிற்கிறான்.

சிறு அடிமை எண்ணத்தை என் மனதில் வளரவிட எனக்கு இஷ்டமில்லை. இதற்காக என்னை மன்னித்திடுக. இருப்பினும், என் தலையில் 'கிராப்' வைத்திருப்பதேன் என்று என் நண்பர்கள் என்னைக் கேட்கலாம். அது எனது சௌகரியார்த்தமான வேறு விஷயம். தமிழர்களாகிய நாம் நமது தமிழ்ப் புது வருடப் பிறப்பினைக் கொண்டாடுவோம். தெலுங்கு ஜாதியினரும் தமிழ் வருடப் பிறப்பைப் பாராட்டுவது காண்கிறோம். வைணவ நாலாயிரப் பிரபந்தமும், சைவத் திருமுறைகளும் நமது தமிழ்த்தாயின் பொற்களஞ்சியங்களா யிருக்கையில், தெலுங்கு பேசுவோர் தமிழைக் கைவிடுதல்—பாராட்டாது போதல் இயலாதன்றோ? அது கருதியே தெலுங்கு ஸகோதரர்களும் தமிழ் மக்களாகிய நம்முடன் சேர்ந்து தமிழ் புதுவருடப் பிறப்பின் மகிழ்ச்சியை தாங்களும் பாராட்டிப் போற்றுகின்றனராக; அவ்விதமே தமிழர்களான நாமும் தெலுங்கு வருடப் பிறப்பைச் சிறப்பித்துப் பூரிக்கக்கடவோம். இவ்வகையில் நமக்குள் ஒற்றுமையை வளர்ப்போம். ஆனால், நமக்கு முற்றும் வேறான ஆங்கில வருடப் பிறப்புக் கொண்டாட்டத்தினில் நாம் கலக்காமல் ஒதுங்கியிருப்பதே தன் மதிப்பாகுமென்பது என் கொள்கை. பரஸ்பரம் புது வருடப் பிறப்பின் பாராட்டுக் கடிதங்களை தமிழ், தெலுங்கு வருடப் பிறப்புகளில் எழுதிக்கொள்வதே கௌரவமாகும் என்பதை வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்கின்றேன்

குலசேகரம்.

III

ஓர் ஐயம்.

கம்பம் நிறுத்துதல் எதற்காக?

அன்பு மிக்க ஐயா,

மகா சங்கராந்தி (பெரும் பொங்கல்) இரவு, மர உலக்கைக்கு அபிஷேகஞ் செய்து, வீட்டின் வாசலில் மரத்தினால் ஓர் ஆசனம் அமைத்து, அதின்பேரில் அதை நிறுத்துகிறார்கள். உலக்கையின் உச்சியில் விளக்கு நிற்கும்படியாக, மரத்தினால் தடை செய்து போட்டுத் தடையின் மீது, கோமயத்தை உருண்டை செய்து வைக்கிறார்கள். அந்த உலக்கைக்கு, திருமண்—திருநீறு, இவைகளைப் பாரபக்ஷமின்றி இடுகிறார்கள். மாவிலைக்கொண்டு மேலுங் கீழுங் கட்டுகிறார்கள். புஷ்பாலங்காரமும் செவ்வனே நடைபெறுகிறது.

பின்னர், உற்றார், ஊரார் யாவருக்குந் தெரிவித்து—யாவரும் வந்த பின்னர், வேதியரைக் கொண்டு புண்ணியாவாசனம் செய்கிறார்கள். செய்து முடிந்தவுடன், சொந்தக்காரர் இன்னும் மற்றவர்களுடன் கோவிந்தா, கோவிந்தா என்ற கோஷத்துடன் ஒரு பெரிய மண் மடக்கில்நெய்விளக்கேற்றிக்கொண்டு,


---

நன்கு கற்ற கனவான் ஒருவர் தீபாவளியன்று தம் மக்களுக்குப் பட்டாசுகட்குப் பதிலாக ஒவ்வொருவருக்கும் மூன்று ரூபாய் கொடுத்து ஏதாவது வாங்கிப் புசிப்பதற்கும் செலவுக்குமாக வைத்துக்கொள்ளுங்களென, புத்திசாலிகளான அவரது மக்களும் பட்டாசுகட்டு வேண்டாமென்று ரூபாயைப் பெற்றுக் கொண்டு சந்தோஷமாய்ப் பக்ஷண பலகாரங்கள் புசித்து ஆநந்தமாய்ப் பொழுதைப் போக்கிவிட்டனர். இதற்கு முந்திய வருஷத்தில் 15—ரூபாய் போலப் பட்டாசுக் கட்டுகட்குச் செலவான பணம் இவ்வருஷத்தில் பட்டாசு இல்லாமல் லாபமாய் முடிந்தது.

வாசலில் நிறுத்தியிருக்கும் உலக்கையை மும்முறை வலம் வந்து, அதன்பேரில் ஷை விளக்கை வைக்கிறார்கள். பின்னர் அதற்கு ஐயர் பூசை செய்கிறார். பூசை முடிந்ததும் பிராம்மணர்களுக்குத் தாம்பூலம் தக்ஷிணை வழங்கப்படுகிறது. பிறகு அக்குடும்பத்தாரனைவரும் பிராம்மணர்களுடைய பாதம் பணிந்து ஆசி பெறுகிறார்கள். பிறகு யாவருக்கும் தாம்பூலம் வழங்கப்படுகிறது இத்துடன் ஷை சடங்கும் பூர்த்திப் பெறுகிறது.

இந்தக் கம்பம் நிறுத்தும் வழக்கம் சாஸ்திர சம்மந்தமா? பெரியோர்கள் தொன்றுதொட்டு வழங்கிவரும் வழக்கமா? என்பதைத் தங்கள் 'அமிர்தினி' யின் மூலமாய்த் தெரிவிக்கக் கோருகிறேன்.

து. இரத்தின முதலியார்.




ராஜா பஹதூர்.

"நம்முடைய எளிய வாழ்க்கையைத்
திரும்பவும் பெறுவோமாக"—ட்ரெடன் (Dryden)



'தட தட'—வென்று யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. நான் ஆழ்ந்த சிந்தனையில் எழுதிக்கொண்டிருந்தேன். கதவை நெடுநேரமாகத் தட்டி யிருக்க வேண்டும். காரணம் இப்போது அவன் தன் நிதானத்தை இழந்து தட்டுவதால்தான். அது ஒரு பெரு இடிமுழக்கம் போலிருந்தது. எழுந்து சென்று கதவைத் திறந்தேன். "ஐயா, உங்களைக் கூப்பிட்டுக் கொண்டுவரச்சொல்லி இக்கடிதம் கொடுத்தார்," என்று விறைத்து நின்றபடி சலாம் செய்து ஒரு கடிதத்தை நீட்டினான். நான் பிரித்துப் பார்த்தேன். அதில் ராஜாபகதூர் அண்ணுசாமி என்னை சாயந்திரம் நான்கு மணிக்கு வரும்படி எழுதி இருந்தது. "சரி, போ, வருகிறேன்," என்றேன்.



ஃ

சாயந்திரம் ராஜா பகதூர் வீட்டிற்குச்சென்றேன். நான் அவர் வீட்டிற்குப் போவதுதான். ஏதோ பல வேலைகளால் ஒரு மாதமாக அங்கு போகவில்லை. பில்லை தரித்த சேவகன் ஒரு சிறு பெஞ்சு மீது உட்கார்ந்து தூங்கிவிழுந்து கொண்டிருந்தான். என் செருப்பின் சந்தடி கேட்டு அவன் திடுக்கிட்டெழுந்தான். அவன் புதியவன். 'யார்?—' என்று அதிகாரமாகக் கேட்டான். காரணம் இந்த நவநாகரீகத்திற்கு ஏற்றாற்போல் என் உடைகள் கிடையாது. மேலே தலைக்குட்டைகூட இல்லாமல் சொக்காயும் வேஷ்டியுடனும் என்னைப் பார்த்ததும் அவனுக்கு எப்படி இருந்ததோ தெரியாது. என் பெயரைச் சொன்னேன். "சரி, சரி, ராஜா

சில பெற்றோர்கள் பெண்களுக்கு வரும் நல்ல வாழ்வுகளுக்கெல்லாம் நோட்டஞ் சொல்லிக்கொண்டு கடைசியில் அழுகல் சேற்றில் கொண்டுபோய்க் கொட்டினதுபோல் வெள்ளையுஞ் சள்ளையும் பார்த்து கவைக்குதவாதவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அப்பால் சம்பந்தி வீட்டுக்கதையைக் கடைத்தெருவில் படித்துக்கொண்டு திரிவார்கள்.

வேலையா யிருக்கார், பார்க்க முடியாது.” என்று பதில் சொன்னான். என்னை அவர் வரச்சொன்ன விஷயத்தைச் சொன்னேன். “நீ பெரிய ஜமீன்தாராயிற்றே. உன்னை வரச்சொன்னாராக்கும்.” என்று முணுமுணுத்தான். அதற்குள் எனக்கு அறிமுகமான ஒரு ஆள் உள்ளிருந்து வந்தான். “வாங்கோ—சார். என்ன அங்கேயே நிற்கிறீர்—என்னடா அது?-அவரை யார் என்று நினைத்துக்கொண்டாய் ?” என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே நான் உள்ளே நுழைந்துவிட்டேன்.

ஃ

ராஜா பகதூர் புகை மண்டலத்திற்குள் உட்கார்ந்திருந்தார். சிகரெட் நாற்றம் என் மண்டையைப் பிளந்தது. ஏதோ பெயரடங்கிய லிஸ்ட் அதில் தன் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தார். நீலம் சிகப்பு பச்சை பென்ஸிலால் அதில் மார்க் செய்துகொண்டிருந்தார். ‘வந்தனங்கள்’—என்றேன். “ஹ—ஹ, வாரும்—வாரும்—உட்காருங்கள்.” “இதோ பார்த்தீர்களா—இன்னைக்கு நமக்கு நல்ல பிளான் அடிச்சுது குதிரைப் பந்தயத்தில்—நாளைக் குதிரைகளைப் பொறுக்குகிறேன். சரியான ‘பிளேஸ்’ பார்த்து கட்டப் போகிறேன்,” என்றார். நான் சிரித்தேன்.

ஃ



ஓர் குருடன் ஒரு பையன் கையைப் பிடித்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். இரண்டு மூன்று கடிதங்களை ராஜா பகதூர் முன்னிலையில் நீட்டினான். பின்னால் வந்த குருடன் ‘நமஸ்காரங்கள்’ என்று ஆங்கிலத்தில் சொன்னான். ராஜா பகதூர் மேல் பார்வையாக அக்கடிதங்களைப் பார்த்துவிட்டு என்னிடம் நீட்டினார் அதில் அக்குருடன் நல்ல கணக்குகள் போடுவதில் நிபுணனென்றும் எவ்வளவு பெரிய சிக்கலான கணக்குகள் கொடுத்தபோதிலும் மனக்கணக்காகவே போட்டுச் சொல்லுவானென்றும்—இவ்வளவு வித்வத்வம் வாய்ந்த அவனை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமென்றும் எழுதி இருந்தது. நான் அவர் முகத்தைப் பார்த்தேன். “இந்த முட்டாள்களுக்கு வேலை கிடையாது. யாரிடமாவது கெஞ்சிக் கூத்தாடி இந்த மாதிரி இரண்டு எழுதி வாங்கி வைத்துக்கொள்

ஒருவரின் கஷ்டத்தை இன்னொருவரிடம் சொல்ல வரும்போது அந்தக் கூச்சலால் அவர் காது அடைத்துக் கொள்கிறதாம். ஐயோ! இதென்ன உறக்க கத்திப் பேசுகிறீர்களே என்று அவர் தன் காதை மூடிக்கொள்கிறார். இந்த லக்ஷணத்தில் தன் கஷ்டத்தைச் சொல்ல வந்தவர், ஐயோ! நமது பாடுகளைப் பிரியத்துடன் கேட்பதற்கும், கேட்டு ஆறுதல் சொல்வதற்கும் மனுஷ்யர்கள் இல்லாமற் போனார்களே என்ற தவிப்புடனே வேறோரிடத்தில் போய் உட்கார்ந்து நெஞ்சு நொந்து போகிறார்.

வது. இது இப்போதைய நூதன முறையான பிச்சை," என்று என்னிடம் சொன்னார்.

வந்த குருடக் கணித சாஸ்திரியார் ராஜா பகதூர் இருக்கும் பக்கமாக முறைத்துப் பார்த்து, "பிச்சையில்லை—கண்ணில்லாத குறையால் என் மூளைக்கு மதிப்பில்லை. மேல் நாடாக இருந்தால்........."

"ஆமாம் மேல் நாடாக இருந்தால் கிழித்துவிடுவான்......"அடே பியூன், இந்தா இந்தக் கழுதை என்ன முறைத்துப் பார்க்கிறான். பிச்சை எடுக்க வந்த பயலுக்கு இவ்வளவு துணிவா...தள்ளு கேட்டுக்கு அந்தாண்டே" என்று கர்ச்சித்தபடி எழுந்து என் கையிலிருந்த கடிதங்களைப் பிடுங்கி அவன் முன் விட்டெறிந்தார். குருடன் மறைந்துவிட்டான்.

"பார்த்தீர்களா—திமிரை?—" என்று என்னிடம் சொன்னார். நான் பதில் சொல்வதற்கில்லை என் மார்பு துடித்தது. "அடே பியூன் இப்படி வா. இவனை யார் விட்டது உள்ளே?" என்றார் அவன் தலையைச் சொரிந்து கொண்டு நின்றான். "ஒரு ரூபாய் அபராதம் போ." என்று உத்திரவு பிறந்தது.

ஃ

"என்ன நாயுடுகாரு ஏது; இந்தப் பக்கம் வருகிறதே இல்லை. குழந்தை பட்டுகூட உங்களைக் காணோம் என்று தேடிக்கொண்டிருந்ததே எங்கே ஊருக்கு கீருக்கு பயணமோ?" என்றார்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை, உடம்பு சரியாயில்லை" என்றேன்.

"அடடா சொல்லி அனுப்பக்கூடாதா? உங்களைப்போலொத்த தமிழாசிரியர்களையும், அறிவாளிகளையும் ஆதரிக்காமல் பின் யாருக்கு?" நம்ம டாக்டரை அனுப்பச் சொல்லி இருப்பேனே!! என்று கூறிவிட்டு உடனே மேஜைமேலிருந்த சிறிய மணியை அடித்தார். வேலையாள் வந்து நின்றான்.

"உள்ளே போய் இவர் வந்திருப்பதாகச் சொல்லி பட்டுவை இங்கே வரச்சொல்."

அவன் திரும்பிப் போகாமல் விசிடிங் கார்ட் ஒன்றைக் கொடுத்தான்.

"என்ன நாயுடுகாரு, முதல் மந்திரி வந்திருக்கார்," என்று சொல்லிக் கொண்டே வெளியில் போனார் கலகலவென்று சிரிக்கும் சப்தம். ராஜா

ஒருவனை ஒரு விசேஷத்திற்காகக் கையில் போதுமான பணமின்றித் தன்னிடம் இருந்ததும் செலவாகிப்போய்த் திண்டாடிக்கொண்டிருக்கையில், அந்த விசேஷம் சிறப்பாக நடந்தேறட்டுமென்று அவனுக்கு ஒரு நண்பர் வாழ்த்து அனுப்புகிறார். அதைக்கண்ட அவன் இந்த வாழ்த்துடனே ஒரு ஐந்து ரூபாய் நோட்டாவது சேர்த்து அனுப்பி யிருந்தால் இந்த நெருக்கடியான சமயத்தில் என் செலவுகளுக்கு உதவும்படியாகி நான் எவ்வளவோ சந்தோஷப்படும்படியாகுமே என்று நினைக்கிறான்.

பகதூரும் கால் சட்டை யணிந்த மற்றொருவரும் உள்ளே நுழைந்தார்கள். நான் எழுந்து நின்றேன், இரண்டு நிமிடம்வரையில் பொதுப்படையாகப் பேச்சு நடந்தது. பிறகு, "கவர்னர் சிலையொன்று செய்ய வேண்டும். அதற்காகத் தங்களைப் பார்க்க வந்தேன்," என்றார் "அடடா, கடிதம் ஒன்று எழுதி அனுப்பினால் போதாதா? ரொம்ப தங்கமான கவர்னர். அவரைப்போலே பார்த்ததில்லை. நல்ல தீர்மானம் செய்தீர்கள்," என்று சொல்லிக்கொண்டே மேஜையைத் திறந்து ரூ 2000-க்கு ஒரு செக் எழுதிக் கொடுத்தார். மறு ஐந்து நிமிடத்தில் அவர் போய்விட்டார். ஏழைக் குருடனை அவமதித்துத் துரத்தி, இங்கே கௌரவத்திற்காக 2000-ரூபா தர்மம்!



ஃ

பட்டு உள்ளே வந்தாள். நானும் அவளுமாக பேசிக்கொண்டிருந்தோம். அவள் என்னை உள்ளே வரும்படிக்கும், அம்மா கூப்பிடுவதாகவும் இரகஸ்யமாகச் சொன்னாள். ராஜா பகதூர் குதிரைப் பந்தயக் கெலிப்பு ஆலோசனையில் ஆழ்ந்திருந்தார். பட்டுவின் தாயார் ஏதோ திக்கற்றவள்போல ஒரு வெள்ளைப் புடவை உடுத்திக்கொண்டு முகம் வற்றிய பார்வையோடு இருந்தார். கண்களின் இரைப்பைகள் நீர்கொண்டு தடித்திருந்தன, தவித்திருந்தன. என்னைப் பார்த்ததும் கண்ணீர் விட்டார். பட்டுகூட அழுதாள். "என்னம்மா விசனப்படுகிறீர்கள்", என்றேன். எனக்கும் அவர்களின் பூர்வீகமான விஷயங்களெல்லாம் தெரியும் ஆகவே, அதற்குமேல் சொல்ல மனமில்லை. துக்கம் நெஞ்சில் தைத்தது. தலைகுனிந்து கீழே பார்த்தேன். பட்டுவின் தாயார் கால் வீங்கி கருத்திருந்தது. எண்ணெய் மருந்து பூசப்பட்டிருந்தது. 'என்னம்மா காலில்' என்று திடுக்கிட்டுக் கேட்டேன். அவர் தேம்பித்தேம்பி அழுதார். பட்டுமாத்திரம் என் காதில் "அப்பா அடித்தார் நேற்று" என்றாள். என் உடல் சிலிர்த்தது. யாரோ வரும் சப்தம் கேட்டது. பட்டுவின் தாயார் உள்ளே சரேலென்று போய்விட்டாள். ராஜா பகதூர் என் பக்கத்தில் வந்து நின்றார். "கழுதை முண்டை, என்ன சொல்லுகிறாள். ஒழிந்து போகமாட்டேன் என்கிறாள் சனியன்," என்றார். வாயில் சிகரெட் புகை வந்துகொண்டிருந்தது. பட்டுகூட இப்போது நழுவிவிட்டாள்.

ஃ

நானும் அவருமாகத் தோட்டத்தில் புகுந்தோம். அந்தக் கோடியில் தோட்டக்கார சுப்பராயனின் அந்தப்புரம் இருந்தது. சிறு குடிசையின் வெளியில் அவனுடைய மனைவி மிளகாய் அரைத்துக்கொண்டிருந்தது தெரிந்தது. சுப்பராயன் வேகமாக வந்துகொண்டிருந்தான். "அடே எங்கடா போறே" என்று அதட்டினார். அவன் விழித்தான்.

"என்னடா விழிக்கிறாய்?"

"மாட்டுக்குப் புல் வாங்கிவரப் போகிறேன்."

ராஜபகதூரின் கண் அவன் மடியில் சென்றது. "என்னடா, மடியில் கார்டு மாதிரி இருக்கு. எடு இப்படி?" வேலையாள் நடுங்கினன்.

"எடுடா-என்ருல்?"

இ—இ......" என்று இழுத்தான்.

தூரத்தில் யாரோ போகும் சப்தம் கேட்டது. ராஜா பகதூருக்கு மீசை துடித்தது. அவரே கிட்டே போய் மடியை இழுத்தார். ஒரு கடிதம்;—அது பின்வருமாறு:—

ஃ

பிரியமுள்ள அப்பா, நல்ல இடத்தில் கொண்டுவந்து தள்ளினீர்கள்; பணத்தைத்தானே பார்த்தீர்கள். ரொம்ப கஷ்டப்படுகிறேன். இந்தக் கடிதம் கூட போடமுடியாமற்படிக்கு இங்கு கடின உத்திரவு. கஷ்டப்பட்டு போடுகிறேன். வேலைக்காரர்கள் அநேக பேர் இருந்தும் என்னிடம் பேசக்கூடாதெனக் கண்டிப்பான உத்தரவு. தினந்தோறும் உயிர்போய் உயிர் வருகிறது. செல்வமாக வளர்த்து இந்தப் பூனைவாயில் கொண்டுவந்து விட்டீர்கள். இது கண்டதும் புறப்பட்டுவரவும். வராவிட்டால் என்னைப் பார்ப்பது கஷ்டம். ஏழை மகள்.

ஃ

அவ்வளவுதான். மீசை துடித்தது, கண்கள் சிவந்தன. கீழே குனிந்து காலிலிருந்த செருப்பை எடுத்து கண் கால் தெரியாமல் அடித்தார். நான் நடுவில் புகுந்து தடுத்ததில் எனக்கு மேலும் இரண்டு உதை கிடைக்காமல் தப்பியதுதான் மிச்சம். ஒரே அமர்க்களம். வீட்டிலிருந்த வேலைக்காரர்கள் மூலைக்கொருவராக ஓடி மறைந்துவிட்டார்கள். கடைசியாக அவரைச் சமாதானப்படுத்தி அவரும் நானுமாகக் காரில் புறப்பட்டது தெய்வப்பிரயத்தனமாகிவிட்டது. காரை நேராக ஒரு பங்களாவில் போய் நிறுத்தச் சொன்னார். வந்து நின்றது. ராஜா பகதூர் முன்பும் நான் பின்னுமாக உள்ளே சென்றோம். ஒரு அழகிய மடந்தை பார்ஸி பெண்போல உடை தரித்து, ஒரு மார்பை திறந்துவிட்டுக்கொண்டு மெதுவாக ஓடிவந்து அவரைக் கட்டிக்கொண்டு சிரித்தாள். ஒரு அறையில் சென்று உட்கார்ந்தோம். பழவர்க்கங்கள், சோடா புட்டிகள், ஐஸ், விஸ்கி பாட்டல்—எல்லா நவீன முஸ்தீபுகள் அந்த மேஜைமீது விவரித்துக் கிடந்தன. விஸ்கி ஊற்றி, சோடாவோடு சேர்த்து அந்த நங்கை முதலில் ஆரோகணம் செய்தாள். அந்த முகவுரையுடன் ஆரம்பித்தது. அரைமணி நேரத்தில் இரண்டு விஸ்கி பாட்டல்கள் தீர்ந்தன. "நாயுடுகாரு, இவள் இருக்கிருளே ரொம்ப தங்கமான குணம். என்ன அன்பு தெரியுமா? பழகினல் தெரியும். அந்த முண்டை கண்ணில் விழித்தால்கூட தண்ணீர் அகப்படாது, என்ன சொல்லுகிறீர்கள்?" என்று சொல்லிக்கொண்டே ஒரு டம்ளரில் விஸ்கி ஊற்றி என்னிடம் நீட்டினர். குடிக்கும் வழக்கமில்லாத நான் அதை வாங்கி அப்புறம்




வைத்த சமயத்தில், அந்த நவீனப்பெண் ராஜா பகதூர் ஜேபியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்தாள். அது பாங்கியின் செக் புத்தகமாக இருந்தது. ராஜா பகதூர் மற்ெருரு டம்ளரைக் காலி செய்துவிட்டுச் சிரித்து அவளை இழுத்து சரச சல்லாபங்கள் செய்யலானுர். நான் வேறுபக்கமாய்த் திரும்பினேன்.

ஃ

இரவு வெகு நேரத்துக்குப் பிறகு ராஜா பகதூர் என்னேடு புறப்பட்டார். அவருடைய பெண் பட்டுவின் கணவன் சுத்த முரடன், மூர்க்கன், முன்கோபி. இது எந்த விஷயத்திலென்ருல் தர்மம் தப்பி நடப்பவர்களின் சங்கதியில்தான். அதுபோக, மற்றவர்களுக்கெல்லாம் அவன் பெரிய உபகாரி. தீனதயாளு. மாப்பிள்ளையின் குணம் தெரியாமல் தமது எல்லா சொத்துக்களையும் தமது ஒரே குமார்த்தியான பட்டுவுக்கே சில வருஷங்களுக்கு முன் எழுதி வைத்துவிட்டார். பாங்கியிலிருந்த 7000-ரூபாய் மட்டுமே ராஜா பகதூருக்குச் சொந்தம். வீட்டிற்கு வந்ததும் பகதூரின் மனைவி பட்டுவுடன் மாப்பிள்ளைத் துணையோடு பெட்டி நகைகள் முதலியவற்றுடன் தன் தந்தையின் ஊருக்கு ரயிலேறிவிட்டதாகத் தெரிந்தது. பகதூர் கோபம் பொங்கினுர். பொங்கி என் செய்ய? இதற்குள் அவர் பார்வதி காதலியை நாகஸர்ப்பம் தீண்டிவிட்டதாக ஆள் வந்தது. அங்கு நாங்கள் போய்ச் சேருவதற்குள் அவள் பிராணன் பிரிந்துவிட்டது. இரவுமுற்றும் அங்கேயே இருந்தோம். காலையில் மற்ெருரு துக்க செய்தி கிடைத்தது. ராஜா பகதூர் பணம் போட்டிருந்த பாங்கி முறிந்துபோய்விட்டதாகத் தெரிந்தது. பகதூர் பெருமூச்சுவிட்டுத் துடித்தார். கவர்னரின் சிலைக்குக் கொடுத்த "செக்"கும் பயனற்றுப்போனது. இது அவருடைய உத்தம பத்தினியினுடைய கண்ணீரின் சாபமோ யாதோ!

ஃ



மேலும், இரண்டு வருஷங்கள் சென்றன. ராஜா பகதூரின் பெயருக்கிருந்த சகல சொத்துக்களும் சின்னுபின்னமாகி, குதிரைப் பந்தயத்தில் ஏற்பட்ட கடன்களுக்காக வாரண்டில் பிடிக்கப்பட்டார். அவரது மூர்க்க சுபாவம் எங்கோ ஒளிந்து மறைந்தது. தன்னை இந்தசமயம் காப்பாற்ற வேண்டுமென்று தமது மனைவிக்குத் தந்தியனுப்பினுர். மனைவியும் மகளும் மருமகனும் உடனே வந்து கடன்களைத் தீர்த்து வாரண்டிலிருந்து விடுதலை செய்வித்தனர். இப்போது பகதூர் தமது பத்தினியிடத்து அத்யந்த விசுவாசமாய்ப் புதிய மனிதராய் நடந்துகொண்டு வருவதாகக் கேள்வி.

P. G. குலசேகரன்.

துரௌபதி கூந்தல் முடித்தல்.

—மஹா பாரதப் போரின் சுருக்கம்—

(795-ம் பக்கத் தொடர்ச்சி.)

VI

இப்படி, தவசி இளைப்பாறிக் கொண்டிருக்கையில், தாம் இவ்வளவு இளைப்பாறும்படியான காரணமென்னவென்று தர்மபுத்திரர் கேட்க. அவன், நான் தவசியாகையால் ராஜாக்கள் யுத்தம் செய்யும் வேடிக்கையைப் பார்க்கப்போகிறதுண்டு; இன்று காலையில் துரியோதனனும் அர்ச்சுனனும் கதா யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். அங்கே போயிருந்தேன். வெயில்தாபம் பொறுக்கமாட்டாமல் அந்த யுத்தம் முடிவதற்கு முன்னே வந்து விட்டேன் என்றான். கஞ்சுகி, ஓய் துரியோதனனும் பீமனும் என்று கூறுமென்று அதட்டிச் சொல்ல, முனிவன் வெறுத்து, "அடா கிழவா, நீ தெரியாதவன்போல் ஏதோ பிதற்றுகிறாயே, நான் அல்லவோ நேராய்ப் பார்த்தவன்; நீ சொல்வது முன்னே நடந்த ஸங்கதி; இப்போது இவர்களுக்குத்தான் யுத்தம் நடக்கிறது முதலில் துரியோதனனுக்கும் பீமனுக்கும் நடந்த யுத்தத்தில் பீமசேனன் மாண்டுபோகவே, அர்ச்சுனன் தனது காண்டீபம் என்னும் வில்லைத் துக்கத்தினால் கீழே எறிந்துவிட்டு மலைபோல் சாய்ந்து கிடக்கும் தனது சகோதரனுடைய கையிலிருந்த கதையைப் பிடுங்கிக் கொண்டு சண்டை செய்ய ஆரம்பித்தான். அதை நான் கொஞ்ச நாழிகை பார்த்திருந்து வந்தேன்" என்று கடுகடுத்தவன்போலப் பேசினான். அதைக்கேட்டுத் தர்மபுத்திரரும் துரௌபதியும் மூர்ச்சையடைந்தார்கள்.

ஃ

அப்போது, அந்த மனிதன் ஒன்றும் அறியாதவன் போல் 'இவர்கள் யார்?' என்று கஞ்சுகியைக் கேட்க, தர்மபுத்திரரும் துரௌபதியுமென்று அவன் சொல்லவே, 'ஐயோ! நாம் இவர்களுக்கு அசுபமான சமாசாரத்தைச் சொன்னோமே' என்று விசாரப்படுகிறவன்போல அபிநயம் செய்துகொண்டிருந்தான்.

ஃ

தேயிலையும் காபியும் புத்தியைக் கெடுக்கும் வஸ்துக்களென்று ஒரு பிரபல வைத்தியர் ஸாதிக்கிறார். சிலர் தேத்தண்ணீரைக் குடித்து மயங்கியது உண்மையென்றும், ஆகவே, தேயிலைக் கஷாயத்தில் ஒருவித மயக்கமிருப்பதால் அதை நிவர்த்திப்பது நன்மையென்றும் கூறுகிறார். காபித் தண்ணீர் கண்களின் ஒளியைக் குறைப்பதால் அதுவும் கெட்ட பதார்த்தமாம். இவ்விரண்டையும் வர்ஜித்து (விலக்கி) பிராதக்காலத்தில் சுத்த ஜலம் அருந்துவது நன்மை யென்கிறார். இவ்வைத்தியரின் அபிப்பிராயப்படி நடப்பவர்களுக்கு செலவு மட்டு. தேகம் கட்டு.

தர்மபுத்திரர் மூர்ச்சை தெளிந்தெழுந்திருந்து, "ஸ்வாமி! தேவரீர் என் தம்பியின் சமாசாரத்தைச் சந்தேகமாய்ச் சொல்வதால் எனக்குத் துக்கம் அதிகமாகின்றது; நிச்சயம் தெரிந்தால் பிராணனை விட்டு விட்டாவது சுகமடையலாம்" என்று உரைக்க, அவன் அது கேட்டுத் தனக்குள்ளே ஸந்தோஷ மடைந்து, "தர்மா, அவசியம் சொல்லவேண்டுமானுல், சொல்லுகிறேன்; துக்க சமாசாரத்தை விரிவாய்ச் சொல்லலாகாது; சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேள்; "பீமனுக்கும் துரியோதனனுக்கும் கதா யுத்தம் ஆரம்பமாயிற்று; அங்கே பலராமர் வந்து சேர்ந்தார்; அவர் எதிரிலேயே சிறிது நேரம் யுத்தம் நடந்தது; சற்று நேரம் கழித்துப் பலராமர் துரியோதனன் மீது தமக்குள்ள பக்ஷபாதத்தினுல் ஏதோ குறிப்புச் செய்தார்; அதைத் துரியோதனன் அறிந்துகொண்டு பீமன் மேல் தனக்குண்டாயிருந்த பகையைத் தீர்த்துக்கொண்டான். பீமனும் மடிந்துபோனுன். இப்படியானவுடனே அர்ச்சுனன் துக்கத்தினுல் காண்டீபத்தைக் கீழே எறிந்துவிட்டுச் செத்துப் பூமியில் விழுந்து கிடந்த பீமன் கையிலிருந்து கதையைப் பலாத்காரமாகப் பிடுங்கிக்கொண்டு, எப்படியாவது ஸந்தி செய்து விடவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு, கிருஷ்ணன் யுத்தம் செய்யவேண்டாமென்று பல முறை சொல்லியும் கேளாமல், துரியோதனனுடன் யுத்தம் செய்யத் தொடங்கினுன் இவ்விருவர்களுக்கும் கதா யுத்தத்திலுள்ள பயிற்சியின் தாரதம்மியம் பலராமனுக்குத் தெரியுமாகையால், அர்ச்சுனன் சீக்கிரமே மடிந்து விடுவானென்று நிச்சயித்து, ஏதோ போக்குச்சொல்லி. கிருஷ்ணனைத் தம் தேர்மேலேற்றிப் பலராமர் அழைத்துக்கொண்டு போய்விட்டார். நான் திரும்பி வந்துவிட்டேன்" என்று சொல்லி முடித்தான்.

ஃ

அதைக் கேட்டதும் தர்மபுத்திரர், அர்ச்சுனனுடைய சகோதர வாத்சல்யத்தைப்பற்றியும், பீமன் தன் பலத்தினுல் எல்லா ராஜாக்களையும் ஜெயித்துத் தனக்குக் கப்பம் கட்டும்படி செய்துவைத்திருப்பதைப்பற்றியும், பலராமன் அர்ச்சுனனுக்கு மைத்துனனுயிருந்தும், கிருஷ்ணனுக்கு அர்ச்சுனன் உயிர்த்தோழன் என்பதை நினையாமலும், பீமன் துரியோதனன் இருவரும் சிஷ்யராயிருக்கச் சமமாய்ப் பிரீதி பண்ணுமலும் வஞ்சனை செய்தாரே என்பதைப் பற்றியும் பலவாறு நினைத்துத் துக்கித்துக்கொண்டே யிருந்தார்.

ஃ

துரௌபதியோ முன் பீமன் தன் பிரீதிக்காகச் செய்த வியாபாரங்

கடவுளைவிட, கடவுளைக் காட்டிக்கொடுத்துப் போதனைசெய்பவரின் பெருமை உயர்ந்தது. ஒரு நூலை இயற்றியவரைவிட, அவ்விதமாக ஒரு நூல் உண்டென்று தெரிவித்து அதை வாங்கச் செய்கிறவனுடைய புகழ் மிகவும் பெரியது. ஒரு வித்வானைவிட, அவர் ஒரு வித்வானென்று மற்றவர்களுக்குத் தெரிவித்து அறிமுகம் செய்விப்பவன் பெரிய வித்வானுவான். ஒரு வீட்டுக்காரனின்மீது வைத்துள்ள பக்ஷத்தைவிட அவனது குழந்தையின்மீது வைத்துள்ள அன்பே சிலாக்கியமானது. நூல்களிடத்து வைத்துள்ள மதிப்பைவிட, அந்த நூல்களைப் போதிக்கும் ஆசாரியனிடம் கொள்ளும் மதிப்பே உயர்நலம் சார்ந்தது. பகவானிடத்துள்ள அன்பிலும் பக்தர்களிடமுள்ள அன்புக்கே கடவுள் அதிகமாக மகிழ்கிருர்.

களையும், துரியோதனனைக் கொன்று அந்த உதிரத்தோடே வந்து தன் தலையை முடிப்பதாகச் செய்த பிரதிக்ஞையையும் நினைத்துக் கதறிப் பின்பு, தர்மபுத்திரரை நோக்கி, “ஸ்வாமி. எனக்குச் சிதை ஏற்படுத்திக்கொடுங்கள்; நான் அக்கினிப் பிரவேசம் செய்து பீமனிடம்போய்ச் சேர்ந்து விடுகிறேன்; தாம் பகைவனுடன் யுத்தத்திற்கு ஆரம்பிக்கலாம்” என்று சொன்னாள். தர்மபுத்திரர் அதற்கு இசைந்து, சிதை ஒன்று ஏற்பாடு செய்யும்படிக்கும், தனக்கு அம்பும் வில்லும் கொண்டு வந்து கொடுக்கும்படிக்கும் கஞ்சுகிக்கு உத்திரவுசெய்து, பின்பு, ஓகோ, அம்பும் வில்லும் வேண்டியதில்லை; என் தம்பியின் கதையை எடுத்துக்கொண்டே போர் செய்து பிராணனை விட்டு விடுகிறேன்; இனி எனக்கு ஜயமேன்? என்று சொல்ல, அதைக்கேட்டு முனிவேஷக்காரன், ஜயம் வேண்டாமாகில் அங்கே போவதைவிட இங்கேயே எங்கேயாவது பிராணனை விட்டுவிடுவது நலமல்லவா என்றான்.

ஃ

அதைக் கேட்டுக் கஞ்சுகி, கோபித்துக்கொண்டு, முனிவரென்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறீர், வார்த்தையைப் பார்த்தால் ராக்ஷஸனைப் போலிருக்கிறது என்று கடுகடுத்துச் சொல்ல, அவன்; அப்பா. நீ கோபம் கொள்ளாதே, ராஜா இப்போது மிகவும் துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார், அங்கே சென்றால் தன் துக்கம் அதிகமாகும் என்பதைப்பற்றி அங்கே போகவேண்டாமென்று சொன்னேனே யல்லது வேறல்ல என்றான்.

ஃ

தர்மபுத்திரர், “இவர் சொல்வது சரிதான்; நான் அவ்விடம் சென்று இந்திரன் வருணன் முதலியவர்களைப் பார்க்கிலும் பராக்கிரமசாலிகளாகிய என் தம்பிமார்கள் மடிந்து பூமியில் புறளுவதையும், அவர்களை ஜயித்துச் சத்துரு மதித்து நிற்பதையும் பார்த்துப் பின்னும் பரிதபிக்க வேண்டுமோ?” என்று சொல்லித் தானும் துரௌபதியுடன் அக்கினிப் பிரவேசம் செய்ய நிச்சயித்துச் சிதை ஏற்படுத்தும்படி சொன்னார். ஒருவரும் அப்படிச் செய்யத் துணியாமல் மயங்கினார்கள்.

ஃ

அதுகண்டு தரும புத்திரர், சுவாமி தாமே இத்தருணத்தில் எனக்கு சகாயம் செய்யவேண்டுமென்று முனிவனை வேண்டிக் கொள்ள, அவன் தன் இஷ்டம்

ஒரு விசேஷத்திற்கு வீட்டுக்காரனால் ஆகவேண்டிய செலவுகளையும், கடையிலிருந்து வீடுவந்து சேரவேண்டிய சாமான்களையும் யாவும் வந்து காரியமானதும், அதுவரையில் அடங்கி அவன் பேச்சுகளுக்கெல்லாம் இசைந்து தாளம் போட்டுக்கொண்டிருந்த வீட்டுப் பெண்கள் அதற்குப் பிறகு மீறிக்கொண்டு ஒரு வார்த்தைக்கு ஒன்பது வார்த்தையாகப் பேசவும், என்னவோ பிரமாதச் செலவு செய்துவிட்டதுபோலப் பேசுகிறீர்களே என்றும், இந்த மூன்று ரூபாய் பவிசிக்குத்தானா இவ்வளவு ஆரவாரம், சீ போ என்றும், கையை நீள நீட்டி முகத்துக்கெதிரே கைகாட்டிப் பேசத் தொடங்கிக் கொள்கிறார்கள். கடன் உடன் பட்டு எவ்வளவோ கஷ்டத்துடன் வீட்டிற்கு வாங்கிவந்து போட்டவனின் மனம் வெந்து வயிறு எரியும்படியாக நேர்ந்துவிடுகிறது. செலவுகள் செய்தும் சந்தோஷிக்க முடியாமற் போய்விடுகிறது.

நிறைவேறிற்று என்று மனதில் மகிழ்ச்சிகொண்டே, அரசே, நீ சொல்லுகிறபடி தவசிகள் செய்ய லாகாதே என்று சொல்லிவிட்டு; தான் அவர்களுக்குத் தெரியாமலே தீயை வளர்த்தும் பொருட்டு எழுந் திருந்துபோய் விட்டான்

ஃ

இவ்வாறிருக்கத் திடீரென்று ஒரு பெரிய சத்தம் கேட்டது. துரௌபதி பயந்து எழுந்து, துரித மாய் அக்கினிப் பிரவேசம் செய்யப் போகவேண்டுமென்று சொல்ல, தர்ம புத்திரர் அப்படியே யென்று எழுந்து சென்றார். மாமியாருக்கும் சக்களத்திகளுக்கும் சொல்ல வேண்டியதைச் சொல்லி, வேலைக் காரரை அனுப்பி விடும்படி தர்ம புத்திரர் துரௌபதிக்குச் சொல்ல, துரௌபதை பகன், ஹிடிம்பன் முத லிய பராக்கிரமசாலிகளை யெல்லாம் கொன்ற தங்கள் இரண்டாங்குமாரர். இப்போது பரலோகம் போய்விட் டார் என்று தன் மாமியாருடனும், குழந்தை உத்தரை கர்ப்பிணியாயிருக் கிறாள், அவளைப் பத்திரமாய் ரக்ஷிக்க வேண்டும், அவள் வயிற்றில் உற்ப விக்கப்போகிற புதல்வனே நமக்குத் தர்ப்பணம் செய்யத் தக்கவன் என்று சுபத்திரையுடனும் சொல்லும்படிக் குக் கட்டளையிட்டுச் சேடிகளை அனுப்பி விட்டாள்.

ஃ

ஆசா; பெரிய விருக்ஷங்கள் அழிந்த பின்பு ஒரு செடியின் முளை யைப் பார்த்து. இது பெரிதான பிறகு இதன் நிழலில் உட்காரலாம் என்று வழிப்போக்கர் நினைத்துத் தேறுவது போலிருக்கின்றது இது என்று தருமபுத்திரர் மனங்கலங்கி நின்றார். பிறகு இருவரும் சிதை ஏற்பாடு செய்து தீ வளர்த்தினார்கள். பிறகு தருமபுத்திரர் தன் மாதாவுக் கும் நகுல சகாதேவர்களுக்கும் உப சாரம் சொல்லி யனுப்பிவிட்டு, நெருப்பு நன்றாய்க் கொழுந்து விட் டெரிய அதன்முன் தரும புத்திரர் வந்து நின்று, கைகால்களைச் சுத்தி செய்துகொண்டு தனக்கு முன் பர லோகம் போன பீமனுக்காகத் தர்ப் பணம் செய்தார். பிறகு தனது முன்னோர்களை யெல்லாம் நினைத் துக் கடைசியாகத் தர்ப்பணம் செய்து தீக்குளிக்கச் சித்தமாகி, பீமனையும் அர்ச்சுனனையும் நினைத்துப் பலவாறு புலம்பிக்கொண்டிருந்தார். பீமா, எனக்குப் பின்னே பிறந்த நீ எனக் குப் பிந்திப் பரலோகம் போகவேண் டியதாக யிருக்க, முந்தி எப்படிப் போனாய் என்று பிரலாபித்தார்.

(மற்றதில் முடிவு)

புசிக்கும் நேரத்தில்கூட வீட்டுக்காரனிடம் சில புகார்கள் வருகின்றன. அதைக் கேட்டு அவன் சிலரைக் கண்டிக்கும்படி நேர்கிறது. அதற்குள் மனைவி வருகிறாள். என் அப்படிக் கண்டித்தீர்கள் என்று சிடுசிடுக்கிறாள். அதில் ஒரு கலகம் பிறக்கிறது புசித்துக்கொண்டிருந்ததை நிம்மதியுடன் உண்பதற்கில்லாமல் சச்சரவில் தின்று தொலைக்க நேர்கிறது உண்ணும் போதுகூட ஒருவனை நிம்மதியாயிருக்க விடாத வீட்டில் ஒருவன் இருந்து காலம் கடத்துவதென்பதும், அத்தகைய வீட்டிற்குத்தான் தலைவனாயிருந்து கொண்டு செலவுகளைச் செய்து நிர்வகித்துப் பாடுபடுவதென்பதும் பரம துக்கமான நிலைமையாகும். எவ்வளவு செய்தும் விஸ்வாசமற்றுப் போவதாயுள்ள ஒரு வீட்டில் தனது சம்பாத்தியத்தைச் செலவிட நேர்வதென் பது சகிக்கொணாத நரக வாதனையாகும்.

விகட வெற்றி வேற்கை.

(746-ம் பக்கத் தொடர்ச்சி)

20. *அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது*
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது
அரைக்கினுஞ் சந்தனம் தன்மணம் அறாது
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினும் தண்கடல் சேறாகாது.

அடினுமா வின்பால் முற்றிலும் நீரே
சுடினும் வடைகள் தனக்குக் கிடையா
அரைக்கினும் மிளகாய் தன்குண மறாது
புகைக்கினும் சிகரெட் பொல்லாங்கு கமழும்
கலக்கின் எவரே கலங்கா திருப்பர்

21. *அடினும் பால்பெய்து கைப்பறாது பேய்ச் சுரைக்காய்*
ஊட்டினும் பல்விறை உள்ளி கமழாது.

அடிப்பினும் பர்த்தா படிவளோ மூர்க்கி
ஊட்டினும் பதிநலம் உணராள் சிறிதும்

22. *ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை*
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

ஒருநாள் பழகினும் இரவல் கேட்டே
இருந்தவர் பெற்றபின் னேய்த்தலே சமர்த்து

23. *நூற்றாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை*
நீர்க்குட் பாசிபோல் வேர்க்குள்ளாதே

நூறாண் டிருப்பது யாரோ ஒருவர்
நீரில் இறங்குதல் நிதானத் தோடே

24. *பெருமையும் சிறுமையும் தான்தர வருமே*
பெருமையும் சிறுமையும் வெள்ளைத் துணியிலே

25. *சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்*
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.

சிறியோ ராயினும் சிறப்புத் தியோகம்
பெரியோ ராயினும் பெருமதி யிலேயே.

26. *சிறியோர் பெருமபிழை செய்தன ராயிற்*
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.

சிறியோன் உவப்புடன் சிறுமியைக் கொஞ்சுகில்
பெரியோ ரதனைப் பார்த்தலும் பழியே

27. *கற்கை நன்றே கற்கை நன்றே*
கற்கப் புகுதல் கஷ்டம்! கஷ்டம்!

28. *பிச்சை புகினும் கற்கை நன்றே.*
பிச்சை புகினும் வேஷம் வேண்டும்.

29. *கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்*
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.
கல்லா ஒருவன் தொழிலால் பிழைக்க
எல்லா பி.ஏ.யும் ஏங்குவ தேனோ

30. *நாற்பாற் குலத்தில் மேற்பா லொருவன்*
கற்றில னாயிற் கீழிருப் பவனே,
நாற்பால் குலமேலாம் நாடுவே ஆங்கிலம்
கற்றபின் அவர்கள் கலங்குதல் கோரம்.

31. *எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்*
அக்குடியிற் கற்றோரை வருக வென்பார்.
எக்குடி பிறப்பினும் கைப்பொரு ளிருந்தால்
அக்குடிக் கீழும் அந்தணன் அடிமையே.

32. *அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்*
அறிவுடை யோருவன் அதிகம் பேசுவான்.

33. *அச்ச முள்ளடக்கி யறிவகத் தில்லாக்*
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே.
அச்சமுள் ளடக்க அவதியா மிந்த
கோச்சை மாமியால் கோடுமை என்றே
பச்சென் றிருந்த பழங்குடி பிரிப்பரே.

34. *யானைக்கில்லை தானமும் தருமமும்*
யானை யேறினும் பாகன் பாகனே.

35. *பூனைக் கில்லை தவமுந் தவயும்*
பூனையும் நாயும் தீராப் பகைவர்.

36. *ஞானிக் கில்லை யின்பமுந் துன்பமும்*
ஞானிபோல் புரோகிதன் நடித்தேமாற்றுவான்

37. *சிதலைக் கில்லை செல்வமுஞ் செருக்கும்*
சிதம்பரம் கோயிலில் சிவனோ டரியும்

38. *அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.*
அச்சமும் நாணமும் 'அறையில்' தீரும்.

39. *கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.*
கேட்கக் கிடைக்கும் தட்டத் திறமடும்

40. *உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.*
உடையவர் கேட்டால் உதைவிழும் தலைமேல்.

41. *குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்*
நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்.



திருப்புகழ்:—

[பாராயணத் தவநெறித் திருமுறை. பல ஆப்டோன் படங்களுள்ளது. ஸ்ரீமத் வள்ளிமலை சுவாமிகள் திருப்புகழ் சச்சிதானந்தா அவர்கள் தொகுத்தது சென்னை மார்க்கம் ரெட் ஹில்ஸ் போஸ்ட் ராதா ரைஸ் மில் ஸ்ரீமான் வே. ஆ. கந்தசாமி முதலியாரிடம் கிடைக்கும். 100 பக்கங்கள். விலை அணா 8.]

"திருப்புகழ்" போன்ற ஞான நூலுக்கு மதிப்புரை தேவையில்லை. உயர்தரமான கிளேஸ் காகிதப் பதிப்பு. அட்டை பயிண்டு. திருப்பத் திருப்ப படங்களாய் மிக்க அழகுடன் அமைந்துள்ளது. அருமையான நூல். அருணகிரிநாதரைப்போன்ற ஞானிகள் இழிய நோக்கங்கொண்டதான பெண்ணாசையைமட்டும் இகழ்ந்தனரேயன்றி, உயர்தர சீலமான பெண்மையை ஒருபோதும் தாழ்த்தியதில்லை. பெண்மையை அவர்கள் போற்றிப் பாராட்டியே சென்றுள்ளார். ஃ

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை:—

இதன் "18-ம் ஆண்டு அறிக்கைத்தாள்" வரப்பெற்றோம். தென்னாட்டிலேயே இது உயர்தரமான குருகுல வித்தியாசாலையாகும். ஒவ்வொரு தமிழ் ஜில்லாக்களிலும் இத்தகைய பாடசாலைகள் ஏற்படின் இளைஞர்களின் வித்தியாபிவிர்த்திக்கு எவ்வளவோ சாதகமுண்டு. இதில் 8-ம் வகுப்புவரையுள்ளது. 544-மாணவர்களும், 30-ஆசிரியர்களும் இருக்கின்றனர். 18-ம் ஆண்டில் நிர்வாகச் செலவு ரூ. 6485. இதற்கு அரசாங்க நன்கொடையாக ரூபாய் 3396 கிடைத்திருக்கின்றது. பள்ளிப்படிப்புடன் தொழிற்கல்வியும் போதிக்கப்படுகின்ற இந்த வித்தியாசாலையின் அபிவிர்த்தியை மனஸ்பூர்வமாய் விரும்புகின்றோம். மற்ற இடங்களில் இவ்விதமான நோக்கங்களுடன் வேறு பாடசாலைகள் இல்லையே என்றும் வருந்துகின்றோம்.

(874-ம் பக்கத் தொடர்ச்சி.)

குடைதனை இரவல் கொடுத்துபின் வாங்கிட
நடைமிக வேண்டும், நாள்பல செல்லும்.

42. *சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்*
அறக்கூழ்ச் சாலை அடையினு மடைவர்
சிறப்பும் செல்வமும் செய்தொழில் இருப்பினே.
அறக்கூழ் குடிப்பினும் முறுக்குக மீசை.

43. *அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்*
அரசோ டிருந்தர சாளினு மாளுவர்
அறத்திடு பிச்சை பெருக்குமே சோம்பற்
பெரியர்க் கூட்டம் பெருகும் துயரம்.

(தொடரும்.)

மு. துரைப் பிள்ளை.

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(799-வது பக்கத் தொடர்ச்சி.)

(Mrs. Neelakanta Sastri Rajammal.)

குமுதவல்லி:—அம்மண்டபத்தில் உட்கார்ந்துகொண்ட குமுதவல்லியின் நெஞ்சம் பலவித எண்ணங்களால் ஊசலாடிக் கொண்டிருந்தது. திடீரென்று அவள் கண்கள் அவ்வரண்மனையின் உச்சிபாகத்தை நோக்கிற்று. உடனே அவள் முகம் ஏதோ மிகவும் பயங்கரக் குறிபுடன் அய்யோ என்று நடுங்கிக் கொண்டு வாய்விட்டு அலறினள். உடனே பின்புறமிருந்து ஒருவன் ஓடி வந்து உனக்கேன் இவ்வளவு பயம்? என்னை உன்னுடன் துணைகொண்டால் உனக்குப் பயமே கிடையாது. நீ தன்னந் தனியாக வீண் விசாரப்பட்டுக்கொண்டு கிடப்பதைப் பார்த்தால் எனக்குப் பரிதாப மேற்படுகிறது என்று சொல்லி எதிரில் வந்து நின்முன். உடனே திடுக்கிட்ட அம் மாது சுற்று முற்றும் பார்த்து அய்யோ என்ன அனியாயம் எப்பொழுது பார்த்தாலும் உன் தொந்தரை பெரியதாகவே இருக்கிறது. சீ தூர விலகிப்போ. என்னைப் பிடித்த பேய்களில் நீயும் ஒரு பேயா அல்லது மனிதனு? என் மனக்கவலையை இன்னும் நீ அதிகரிக்காதே நான் யார் தெரியுமா? கொஞ்சமேனும் மரியாதை யில்லாமல் அடிக்கடி பேசுகிருய். என் குழந்தை வந்து விடுவாள் சீக்கிரம் போய் விடு.

வந்தவன்:—உன் குழந்தை வந்தாலென்ன?

குமுதவல்லி:—சீ! எவ்வளவு துணிச்சலான கேள்வி.

வந்தவன்:—என்னை நீ அவ்வளவு கேவலமாகப் பேசக் கூடாது. நான் யாரென்பது உனக்கு நன்றாகத் தெரியும்.

குமுதவல்லி:—உன்னைப் பற்றித் தெரிந்தே தானிருக்கிறது. ஏன் வீண் வாதம் செய்கிருய். என் மகள் வரு முன்னம் நீ சென்று விடு. இல்லையேல் மிகவும் கேவலமாயிருக்கும்.

வந்தவன்:—கேவலம்—என்ன கேவலம். இக்கேவலம் என்றைக் காவது ஒரு நாள் பகிரங்கமாக வேண்டியதுதானே. இதைப் பற்றி நீ ஏன் கவலைப் படுகிறாய்.

குமுதவல்லி:—அய்யோ இனி அப்படிப் பேசாதே. என் மானத்தைக் காப்பாற்ற நான் எவ்வளவு பாடுபடுகிறேனென்பது உனக்குத் தெரியும்?

அம்மனிதன்:—அதற்குத்தான் பயப்படவேண்டாமென்று நான் உன்னை வேண்டிக்கொள்வது. நீ யாருக்காகப் பயப்பட வேண்டும். உன் இராச்சியம் உன் சுய அதிகாரம். உன் இஷ்டப்படி எது வேணுமானாலும் செய்யலாம். அவ்வளவில் நீ செய்து கொண்ட பிறகு நீ ஏன் அடிக்கடி கவலைப்படுகிறாய், திடுக்கிடு கிறாய், சோர்ந்துவிடுகிறாய், என்னைப் பகிரங்கமாக ஏற்றுக் கொள்.

குமுதவல்லி:—ஆனால் என் மகள்?

அம்மனிதன்:—உன் மகளைப்பற்றி எனக்கென்ன கவலை. நீ ஆட்டி வைக்கும் சூத்திரப்பதுமையல்லவா அவள்.

குமுதவல்லி:—அய்யோ அவளை அவ்வளவு ஸுலபமாக எண்ணவே கூடாது. அவளுக்கு என்மீதுள்ள கௌரவம் எள்ளளவும் மாறாமல் வெகு ஜாக்கிரதையாகவன்றோ நான் நடக்கின்றேன். அவளும் என்மீது உயிரையேயன்றோ வைத்திருக்கிறாள். அவளுடைய நல்லொழுக்கங்கள் என்னை எவ்வளவோ சீர்திருத்தம் செய்கிறது. அவள் ஒரு தேவதை என்றே சொல்லலாம். நீ ஒன்றும் பேசாமல் மரியாதையாய்ப் போய்விடவேண்டியது. நான் சற்றுத் தனியாக இருக்கவேண்டும்.

என்று மரியாதையாகச் சொல்ல அம்மனிதன் சரி இன்னம் சாவகாசமாக வைத்துக்கொள். என்னை அடியுடன் நிராகரிக்க நீ எண்ணங்கொண்டால் இந்த நிமிஷத்திலேயே உன் வாழ்நாள் கெடும் என்பதை உண்மையாக அறிந்துகொள், என்று அலக்ஷிய மாகவே நடந்து சென்றான். இவ்வார்த்தைகள் குமுதவல்லியை நடுங்கச் செய்தது. அவள் உடம்பு கிடுகிடென்றாடியது. தன் மகள் சற்று தூரத்தில் வருவதைக்கண்டு தன்னாலானமட்டும் தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டாள். தன் கவலையை அவள் உணராதவாறு சற்று உலவ ஆரம்பித்தாள். அவள் மகள் அங்கு

வந்தாள். அன்னியனுடன் பேசியதை அவள் கண்டுகொள்ளவில்லை என்பதை அவளின் குதூகலத்தால் அறிந்துகொண்டு தைரியமானுள். இருந்தாலும் அவள் மகள் ராமதேவியோ தன் தாய் ஏதோ கவலையில் ஆழ்ந்ததாகமட்டும் அறிந்துகொண்டாள். அவ்விதம் அவர்களிருக்கும்பொழுது அக்கா சௌக்கியமா என்று சொல்லிக் கொண்டே ஒரு வாலிபன் அவர்களின் பக்கத்தில் வந்துட்கார்ந்தான். எப்பொழுது வந்தாய், தம்பி என்று மிகுந்த வாத்ஸல்யத்தோடு வினவினுள் குமுதவல்லி.

வா:—அக்கா இப்பொழுது தான் வந்து உங்களைத் தேடுறேன். நீங்கள் தோட்டத்திலிருப்பதாகச் சொக்கலிங்கம் சொன்னுன். இவ்விடம் வந்தேன். ரமா நீ ஸௌக்கியமா யிருக்கிருயா என்று அவளைப் பார்த்துக்கேட்டாள்.

ரமாமணி:—ஆகா எனக்கென்ன கவலை? ஸவுக்கியக் குறைவு அம்மாவுக்குத்தான். எப்பொழுதும் வேதனையும் விசாரமும். இப்பொழுதுகூட அம்மாவின் விசாரத்தை மாற்றவே தான் இவ்விடம் அம்மாவை அழைத்து வந்தேன்.

வா:—அம்மாவுக்கு விசாரமிருக்க வேண்டியதுதானே.

ரமாமணி: —வீணில் விசாரப்பட்டு உடம்பைக் கெடுத்துக்கொள்வானேன்?

வா:—நீதான் அதற்குக் காரணம். நீ விவாகம் செய்து கொண்டு விட்டாயானல் அம்மாவுக்கு விசாரமிருக்காது. அதற்குப் பதில் அம்மாது ஒன்றும் சொல்லத் தெரியாதவளாக மௌனம் சாதித்து விட்டாள்.

குமுதவல்லி அதற்குமேல் பேசாமல் தம்பிக்கு ஜாடை காண்தாள்.

குறிப்பறிந்த குலசேகரன் மேலே பேசாமல் நிறுத்திவிட்டான், பிறகு களிப்புடன் அவரவர் க்ஷேமலாபங்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, பட்டுமெத்தைகளால் சரிகை வேலைகள்செய்து அழகாயமைந்த சோபாக்களுள்ளதும், பலவித வர்ணங்களால் சித்திரிக்கப்பட்ட ரத்ன கம்பளம் விரிக்கப்பட்டதும், அழகிய பொற் சரிகைகள் மின்னக் காற்றிலசைந்தாடும் திரைச்சீலைகளையுடையதும், உரிய ஸ்தானங்களில் அழகாயமைக்கப்பெற்ற ஸாமான்களையுடைய

தும், களங்கமில்லாமல் பளிச்சென்ற பிரகாசத்தையடைய விளக்கொளியால் பிரகாசித்து அவ்விடத்துக்குரிய எஜமாட்டியின் வரவை அதிமரியாதையாக எதிர் பார்த்திருப்பதுபோல் விளங்கிக்கொண்டிருந்த அப்பெரிய ஹாலில் புகுந்தனர். அச்சமயம் இளவரசியாகிய ரமாதேவி அவ்வலங்கார ஹாலில ஒரு சோபாவில் தன் முகத்தைக் கையால் தாங்கிக்கொண்டு யோசனையிலாழ்ந்தாள். அத்தீப ஒளியில் அவள் முகம் மலராத தாமரையை ஒத்ததாகக் குவிந்திருந்தது. தான் பிறர் படும் கவலையைத் தீர்க்க வகை தெரியாமலிருப்பதைத் தன் மாமன் இடித்துரைத்தது அவள் மனதில் வேதனைகளை உண்டாக்கியது. தான், விவாகம் என்ற ஒரு நினைப்பே இல்லாத ஸமயத்தில் அவ்விதம் பேச்சுக்கள் நிறைந்திருந்தால் யாரைக் கல்யாணம் செய்துகொள்வது என்று எண்ணி அவள் திடுக்கிட்டாள். பலவிதமான கேள்விகள் அவள் மனத்தைப் பாதித்தன. தனக்கொரு உத்தமமான கணவன் வேண்டுமே. வரனைத் தேடியன்றோ விவாகம் நிச்சயிக்கவேண்டும். அதல்லாமல் தாயும் மாமனும் ஒருநாளும் இல்லாப் புதுமாதிரியாகப் பல பேச்சுக்கள் பேசுவது அவளுக்குப் புலப்படாததாக இருந்தது. தன் மாமனைத் தவிர வேறு அந்தஸ்துள்ள ஆடவரெவரையுமே அறிந்ததில்லையாதலால் அவள் மனதில் காதல் என்ற ஒரு சக்தி உண்டாகவுமில்லை. அப்படி ஒரு சக்தி இருப்பதாக அவள் எண்ணவுமில்லை. ஆகையால் அவள் முழுமனதும் யோசனைக்கு முடிவகப்படாமல் அல்லல் பட்டுக்கொண்டிருந்தது.

அவள் தாயும் மாமனும் அவளைத் தனியாக விட்டுத் தாங்களிருவரும் தனியாக ஓரிடத்தில் பேச ஆரம்பித்தார்கள்.

குலசேகரன்—அக்கா அப்பெண் என்றும் பச்சைக் குழந்தை போலவே பேசுகிறாளேதவிர விவரமுள்ளவளாகக் காணவில்லையே. அப்பெண்ணை நீ இன்னும் சரிப்படுத்தவே இல்லை போலிருக்கிறதே. இந்தச் சிறுகாரியம் உன்னாலாகாதா? நீ இப்பொழுது மிகவும் அயர்ந்துபோய்விட்டாற் போலிருக்கிறதே. ஒரு காரியம் எடுத்து அது முடியும் ஸமயத்தில் அதைக் கைவிட்டு விட்டால்?

(தொடரும்.)

" அமிர்த குணபோதினி "

பவஹுல்த்திய மாசி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
				ணேரி தெப்பம் விஷ்ணுபதி.
அ-சி	12	1	செவ்	தச-55-36, ரோ-20-21. கும்பரவி 22-10 தென்
சி	13	2	புத	ஏகா 60-0, மிரு-25-27. பீஷ்ம ஏகாதசி,
ம அ	14	3	வியா	ஏகா 0-12. ஆரு-31-51. ஜீவவார ஸர்வ ஏகாதசி.
சி-உ	15	4	வெ	துவா-5-50, புந-39-1, பிரதோஷம்.
சி-ம	16	5	சனி	திர-12-9. பூச-46-40. காரமடை தேர்
சி-ம	17	6	ஞா	சதி-18-48, ஆயி-54-28, திருவொற்றியூர் மகிழடி.
ம	18	7	திங்	○-25-30, மக-60-0, மஹாமாஹி மாசிமகம்.
சி	19	8	செவ்	பிர-31-59, மக-2-6 மீனுயனம் 31-48.
அ	20	9	புத	துவி-37-56, பூர-9-29,
ம-சி	21	10	வியா	திரி-43-13, உத்-16-12,
அ-சி	22	11	வெ	சது-47-36, ஹஸ்-22-18
ம-அ	23	12	சனி	பஞ்-50-32, சித்-27-19
சி-உ	24	13	ஞா	ஷஷ்-52-48, ஸ்வா-31-10
ம-சி	25	14	திங்	ஸப்-53-15, விசா-33-37.
சி-உ	26	15	செவ்	அஷ்-52-1, அநு-34-28, கரிநாள்.
சி-ம	27	16	புத	நவ-49-6, கேட்-33-42, கரிநாள், ராமதாஸ நவமி.
சி	28	17	வியா	தச-44-34, மூல-31-18, கரிநாள்.
பி-சி	1	18	வெ	ஏகா-38-29, பூரா-27-19, ஸர்வைகாதசி.
சி	2	19	சனி	துவா-31-8 உரா-21-54, பிரதோஷம்.
அ-ம	3	20	ஞா	திர-22-38, ஶ்ரூவ-15-27, திதி துவயம் மஹா சிவ ராத்திரி, காளஹஸ்தி ரதம்.
சி	4	21	திங்	சதி-13-35, அவி-8-23.
ம-அ	5	22	செவ்	●-4-10 உப-51-8, சத-1-1. உப-52-55, துவாபர யுகாதி. திருப்பக்குழி ரதம்.
சி-உ	6	23	புத	துவி-46-53, உட்-47-24, பால்குணசுத்தம்.
சி-அ	7	24	வியா	திரி-39-33, ரே-41-58.
அ-சி	8	25	வெ	சது 33-39, அசு 38-2, சாந்த சதுர்த்தி.
சி அ	9	26	சனி	பஞ் 29-39, பர 35-58.
சி	10	27	ஞா	ஷஷ் 27-43, கிரு 36-0, ஷஷ்டி கிருத்திகா விரதம்.
அ	11	28	திங்	ஸப் 28-6, ரோ 38-10.
சி ம	12	29	செவ்	அஷ் 30-43, மிரு 42-21.
சி	13	30	புத	நவ 34-50, ஆரு 48-10.

(இங் column, printed vertically: பிப்ரவரி௴ 4—16 ; 1935௵ மார்ச்சு௴)

சுக்			
ரவி சனி / புத ராகு	15உ-உதயத்திற்கு ராசி		கேது
	குரு	குஜ	

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone, at the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.